ஸ்ரீரஸ்து

# ஸ்ரீ[illegible]காஞ்[illegible]புராணம்.

இது

திரிசிரபுரம்

மஹாவித்வஜ்ஜன சேகரர்


**வி. கோவிந்தபிள்ளை யவர்கள்**


「வடமொழியினின்று மொழிபெயர்த்துப் பாடப்பெற்று

சிலகனவான்கள் உதவியைக்கொண்டு

இந்நூலாசிரியர் குமாரர்

**[illegible]. கோ. நாராயணசாமி பிள்ளை**

அவர்களால்


பெங்களூர்

எம்பிரஸ் ஜுபிலி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1898-ஞு ஜுலை-மீ 1-உ

## முகவுரை.

பூவிரியமதுக்கூடம் போற்புதுமதுவார்ந்தொழுகு பொழிற்புத
ஞ்சூழ்பண்ணை, நாவிரியமலிசெந்நெற்கதிர்க்குழு[illegible]ழில்காட்டுநா
வலோர்க்கும், [illegible]பாவிரியவிசை[illegible]ார்திருமாற்புகழ்ச
ன்பாற்கொ[illegible]விரியமுதம்பாயமா[illegible]னை வேவளவர்பிரான்காத்த
நாடு. 1

அம்மாவினன்னாட்டுண்ணம்மாவினரங்கத்தினவாசிக்கண்ண
தெம்மாலுமனுகாததிரிசிராமலைநகரத்திடையிலேகர்
தம்மாலுமளப்பரியபட்டர்திருவடிச்சார்புந்தளிர்த்தகாவி
யம்மாலையும்பெற்றவண்ணவிராமாநுஜக்கோனரி[illegible]னுற்ற. 2

பெருந்தவமேவடிவுற்றபெற்றியெனமுதன்மையுறப்பெற்றசேய்
சீர், அருந்தவருமேகமெனவிலக்கியத்தொடிலக்கணமைந்தமைம
வுண்டோன், திருந்தவருதென்மொழிமாமறைவியாக்கியைபலவுந்
தெருளக்கற்றோன், பொருந்தவரிதாமெய்ம்மைபொறைவாய்மையா
தியணிபுனைந்ததூயன். 3

உம்பரறிவருந்திருமாறிருவடியேதஞ்சமெனவுன்னுநேயன்
கம்பரிராமாயண[illegible]ன்கவிப்பொருளைக்கரதலாமலகம்போல
இம்ப[illegible]வி[illegible]துரைசெய்வித்துவச்சனசேகரனுனவிசைகொள்சீலன்
கம்ப[illegible]காட்சிபெறுகோவிந்தனெனுமியற்பேர்கண்டசீலன். 4

இத்தகையனுதல்கண்டிங்கிசைநிற்பவேற்றமுறுதாசிலுத்யோ
கத்[illegible]கையனுஞ்சந்த்ரகிரிக்குலத்துவேங்கடராயலுவாங்கண்யன்
மு[illegible]கையனுகைத்தலமேன்மைவடமொழியின்முறைநிசப்பாம
ல்,எ[illegible]தகையரும்விரும்புசெந்தமிழாலியம்புகெனவியம்பினுனல்.

1[illegible] — 17-ஆத்துக்குச் சரியான தாது-ஆ [illegible]த-மீ சுவா
திநக்ஷ[illegible]ரத்தில் திரிசிரபுரம் சாதாரண வேதிகைத்தமிழ் வித்யா
சாலை உபாத்தியாயர், விநாயகம் பிள்ளை யென்னும் இராமாநுஜப்
பிள்ளை யவர்களுக்குஜ்யேஷ்ட புத்திரராய்ப்பிறந்து கோவிந்த
பிள்ளை யெ[illegible]னும் பெயருடையராகிய இந்நூலாசிரியர், தம்தந்
தையிடத்தும், அக்காலத்து அவ்விடத்து உபாத்தியாரரயிருந்த
இருளாண்டி பிள்ளையவர்களிடத்தும் சாதாரண நன்னூல்நைடத
முதலிய இலக்கணவிலக்கியங்களும், 'மெச்சிய நமச்சிவாயக்குரு
வினைக்கமலமெய்ப்பக நினைக்குநேயன், மிகவேண்டு நயகுண
[illegible] மதிரான்புமேவுமடிமைக்குமடியன்'' என்றுபாடிச்
[illegible]னைத்திலிருந்தஅந்நமச்சிவாயதேசிகர்பால்
[illegible]ால்சாப்பிய முதலிய விசேஷ இலக்கண

## இப்புத்தகத்திற்கு [illegible] கனவான்கள் பெயர்.

[illegible]ஸ்ரீ

| | | ரூபா. |
|---|---|---|
| ,, | பூனாமேடு வித்வான் மு. வேணுகோபாலசாமி நாயுடு | 20 |
| ,, | பல்லாரி முத்துசாமி பிள்ளை | 10 |
| ,, | கண்ட்ரோலர் சுப்பராயர் | 5 |
| ,, | T. R. வெங்கடசாமி நாயுடு, Asst to the Inspector of Education, Mysore. | 5 |
| ,, | பெ. லோ. கஜராஜ முதலியார் | 5 |
| ,, | வே. கங்காதர செட்டியார் | 5 |
| ,, | T. ஆனந்தராவ் | 3 |
| ,, | க. வரதராஜ பிள்ளை | 3 |
| ,, | கண்டிராக்டர் பாலகிருஷ்ண பிள்ளை | 3 |
| ,, | கிருஷ்ண ஐயங்கார் | 3 |
| ,, | A Friend (மைசூர்) | 3 |
| ,, | வே. சுந்தரலிங்க செட்டியார் | 3 |
| ,, | A. R. செல்வராய முதலியார் | 3 |
| ,, | டிரஸ்ஸர் C. A. குப்புசாமி நாய்க்கர் | 3 |
| ,, | ஆ வீரபத்திர முதலியார் | 3 |
| ,, | நரசிம்மாசாரி | 2 |
| ,, | ம வே. குப்புசாமி செட்டியார் | 2 |
| ,, | N. Y. வெங்கடேச ஐயங்கார் | 2 |
| ,, | வெங்கடரமண ஐயர் | 2 |
| ,, | M. கதிர்வேல் முதலியார் | 2 |
| | எம்பிரஸ் ஜூபிலி அச்சுக்கூடம், தி. ந அரங்கசாமி பிள்ளை | 2 |
| | D. A. இராமராவ் | |
| ,, | V. புண்ணியகோட்டி முதலியார் | |
| ,, | T. R. இராஜகோபால் நாயுடு | |

ங்களிலும் கேட்டுத்தெளிந்து சின்றுள் பட்டாமணியம் முதலிய லௌகீகவுத்யோகம் செய்து * உறையூர் நாச்சியார் பிள்ளைத்தமிழ், ஸ்ரீரங்கநாதர் பள்ளு, அலங்கரலங்காரம், ஸ்ரீரங்கநாயகிமாலை, இராஜகோபாலர்வண்ணம், மன்னார்கோயிற்புராணம் இங்நாகைப்புராணம், சடகோபரந்தாதியுரை, இராமாயணம் சுந்தரகாண்டவுரை, திருமுருகன் பூண்டிப்புராணத்துரை, அரிச்சந்திரபுராணத்துரை, உத்தரகாண்டவசனம் திருவிளையாடற்புராணவசனம், அரங்கரலங்காரக்கோவை முதலியவையும் சிலதனிக்கவிகளுமியற்றி, விசேஷவைலக்ஷண்ய அஷ்டாதசரகஸ்யபகவத்விஷயமான திரவிட திவ்யபிரபந்தங்களை முறைமையாய்ச் சேவித்து குடந்தை, கவித்தலம் தஞ்சை, நாகை, சென்னை, கோயமுத்தூர் முதலிய பதிகளிலுள்ள பலபிரபுக்களுக்கும், அநேக உபாத்யாயர்களுக்கும், கம்பராமாயணம் மேற்கூறிய ரகஸ்யார்த்தங்கட்கு அரும்பொருளுரைத்துவந்து "கொன்பூத்த கரவகலக் கரவினிலோரிடபமது கோட்டிற்குக்கப், பொன்பூத்த புந்திசதுர்த்தியிற்பூச காளிலுயர் துருவநாம, நன்பூத்த யோகமதி னரிவைசெலும் பசும் பரியோனண்ணுங்காலை, மின்பூத்த திருநாட்டை யரங்கசித்த னிவன் மாட்சியெவர் சொல்கிற்பார்" என்றபடி 1891-ஜூன்-மீ 10-உ (கரஞு வைகாசிமீ 29உ) பரமபதமடைந்தனர்.

மேலும் ஏறக்குறைய 1855–60-ஆண்டுக்கிடையில் தெதுவரையாகிய சண்பகாரண்ய மகாத்மியமென்னும், மன்னார்கோயிற்புராணமும், 1874-இத்துக்கிடையில் சௌந்தரராஜர் இந்நாகைப்புராணமும் இயற்றப்பட்டன. பாண்டிநாடு, நாடு, நடுநாடு, தொண்டைநாடு, வடநாடு, இவற்றைக்காட்டிலும் பெருமையும் 40 திருப்பதிகளும் உள்ளது சோழநாடாதலினலும், "மாசறு சோதியென்னும் திருவாய் மொழியில் "முன்னை யமரர் முதல்வன் வண்டு வரைமன்னன்" என்றும் பெரியதிருமொழியில் "அன்னமும் சேழலுமீனுமாயவாதியைநாகையழகியாரை என்றும் மங்களாசாசனஞ் செய்யப் பட்டுள்ளனவாதலாலும், இவற்றில் நாடு நகர் வர்ணனைகள் விசேஷமாகக்கூறினர். சேக்கிழார் திருக்குறிப்புத்தொண்ட நாயனர் புராணத்தில் 150-கவிவரையில் நாடு நகர் வர்ணனை கூறினரன்றோ,

* இதுமுதல் 3 பிரபந்தங்களும் அக்காலத்தே கைசோர்ந்தன.

யானும் 1831-ஆ ஏகபோதமுதல் * இக்குறிப்பிட்ட பலவிவக ளியற்றி அவர் பார்வைக்கனுப்பி அவர் அனும்தி... சேர்த்தேன். இப்புராணங்களியற்றின காலத்... லும் அருகிலில் லாதவனுமாய் ...சதிஞல் இன்னகா... மனவரையறுக்கக்கூடவி யலவில்லை எனையரும் கூறமறந்தனர்போலும், காலவரையறை வேண்டிவதவசியமாதலின், இவ்வசனத்தில் ஒருவாறுகாட்டினேன்.

---

## வருபொருளுரைத்தல்.

சாரதீர்த்தநற்செளவுந்தரவிமானமார்பாரா
வாரநீரத்துாகைபாம்பிறைபுவிமாது
...நீரத்தும்பிருகண்டுமேகன்செகதலமாள்
...நீரத்துச்சுகன்பலர்தொழும்வியப்புடைத்து.

என நான்கு யுகத்திலும் முறையே நால்வரும் ஆராதித்தனரென்க

1-வது அத்தியாயம், அண்டோற்பத்தியும், சூதசவுனகர் சம் பாஷணையும் 2-வதில் துருவசரித்திரமும் 3-வதில் மார்க்கண்டே யர் தவஞ்செய்து பேறுபெற்றமையும் 4-வதில் க்ஷேத்திரமகி மையும், பிருகுமுனிசாபமும், பெயர்வந்தகாரணமும் 5-வதில் சாரபுஷ்கரணிப்பெயரின்காரணமும் கெந்தசுகந்தர்கள்பாபவிமோ சனமும் 6-வதில் சாரபுஷ்கரணியின் மகிமை இந்திரன் பிரமன் ...கினி இவர்கள் பாபமோசனம், அஜாமிளன்கதை, இயமகிங்கரர் பாபவிமோசனம், வைணவதுரோக விமோசனம், வாயுபிரக ...ரிகமனபாப விமோசனம், சக்ரபாப விமோசனம், சா... விமோசனம் முதலியவும், 7-வதில் பூமிதேவி சிரம்பரிகாரத் ...ாக பிரமாதிகளுடன் விஷ்ணுமூர்த்தியை அடைதல் ...ல பிரமாதிகளுக்கு விஷ்ணுவிடையருளினதும் 9-வதில் பூமி தேவிவிண்ணப்பமும், பகவான்விடையருளினமையும், அவள் ஆரா தித்தமையும் 10 வதில் சாவிசுகன்கதையும் ஆராதித்தமையும் கூறும். மொழிபெயர்ப்பின்படி சரித்திரபாகம் பெரும்பாலுமமை க்கப்பட்டன.

சேர்ந்தனக்குக் குற்றேவல் செய்திலனென் சிந்தையினி
ஆர்ந்ததற் கோர்கைமாறறிகிலேன்—பூந்துவரை
மன்னுகையாழிவலவாவலம்புரியாய்
தென்னுகையாயருளிச்செய் — இங்ஙனம்

தி. கோ. நாராயணசாமி பிள்ளை.

## சாற்றுக்கவி.

சென்னைப்புரசை ஸ்ரீ ஆண்டாள்சபா நாயகரும்
இயற்றமிழ்ப்பிரபந்தவித்வானும் ஆகிய

### ஸ்ரீமாந். கொ. பள்ளிகொண்டான் பிள்ளை

அவர்கள் இயற்றிய

உலககாரணன்கமலையுறையுமார்ப
னுண்மையுரைசெயும்வேதவுருவனாகி
யிலகுவணகேதனனெம்பெருமானெந்தை
யெண்ணத்தாற்சிருட்டிதிதியற்றலாதி
அலகிலாவிளையாட்டோனசித்துஞ்சித்து
மாமவற்றையங்சமாயடைந்துநின்றோன்
திலகவாணுதன்மடவார்த்திளைக்கும்வாஞ்சை
தீர்ந்தசனகாதியர்தஞ்சிந்தைசேர்ந்தோன். 1

ஒளியுருவிற்றிகழ்பரத்துவம்வியூக
முள்ளுறையந்தரியாமியுவந்துதோன்றும்
அளியுருவமாம்விபவமர்ச்சைதம்மி
லர்தம்முருவினமையளித்துக்காக்க
நளியுருவப்புகழ்மைந்தசோழநாடு
நற்பாண்டிநாடுமுத்தனவிலுநாட்டிற்
றெளியுருவிற்றிகழ்ந்துறையுமொருநூற்றெட்டுத்
திருப்பதிகளென்றுரைதிப்பியதேசத்துள். 2

ஒன்றாகியுவரியோரத்ததாகி
யுய்க்குமரக்கலவணிகக்குறையுளாகிக்
குன்றாதபலவளனுங்கொண்டதாகிக்
குலமறையோர்முதன்மரபோர்குழுமிவாழும்
நன்றானமாளிகையினலத்ததாகி
நான்மறையினொலியும்விழவொலியுமென்றும்
பொன்றாதுநீடுதிருநாகையென்று
புகல்கின்றதலமகிமைப்புராணந்தன்னை.

அவிச்செல்வர்க்கவியருளந்தணர்களோடு
மத்தலத்தின்புராணவடநூலையோர்ந்து

புவிச்செல்வர்காமுற்றுப்புகழ்ந்துபேசப்
புகலாசுமதுரஞ்சித்திரம்வித்தாரங்
கவிச்செல்வர்கொண்டாடக்[illegible]ணன்கீர்த்திக்
கதாவமுதநிதமடுத்துக்களிப்போராக
செவிச்செல்வர்சிந்தைதனைக்துசிதிலமாகச்
செந்தமிழ்ச்சொல்விருத்தத்தாற்செய்தான்மாதோ. 4

சீர்த்தகிரிசிரபுரப்பேர்த்தேயமுன்னர்ச்
செய்தவத்தால்வந்துதித்தசெம்மல்மிக்க
தீர்த்தங்கள்யாவினுள்ளுஞ்சிறப்புற்றோங்குந்
திருப்பொன்னிநனந்தலைசேர்திருவரங்கத்
தார்த்தர்தமதார்த்தியொழித்தருளும்வண்ண
மரவணையிலறிதுயில்கொளமலமூர்த்தி
சேர்த்தியழகார்ந்ததிருப்பாதந்தம்மைச்
சிந்தைவைத்துச்சிந்திக்குந்தெருட்சியுள்ளோன். 5

ஞானநடைநனிவிளங்குமாரியன்பா
னவிலுமைந்துகிரியைகளுநண்ணிநின்றோன்
ஊனமிலாமும்மறையுமொருங்குணர்ந்தோன்
ஓங்குதத்துவமூன்றினுண்மைதேர்ந்தோன்
ஈனமறுமைம்பொருளினியல்பையெல்லா
மெண்ணியுணரியல்பினனெவர்க்குமேலோன்
ஆனவுலகாரியன்செய்கலைகடம்மி
னமைத்[illegible]பொருளுணர்ந்துள்ளத்தாங்கிப்போன். 6

தென்கு[illegible]கஞானதேசிகனம்மாறன்
செந்தமிழாரணப்பொருளேதேர்ந்துதேர்ந்து
நன்குரு[illegible]ந்தையோனவையொன்றில்லா
ஞான[illegible]திவைராக்யநல்வைப்பானோன்
தன்குருவமாகுமிராசதத்தினோடு
[illegible]தாமதத்தைக்கடிந்துசத்துவத்தினின்றோன்
புன்குரம்பையபிமானம்போக்கிநின்றோன்
பொறிகள்புலன்மேயாதுபோற்றவல்லோன். 7

ஞாலமமரகத்தியமும்பின்னதாக
நவிலுஞ்சொல்காப்பியமுநயந்துகற்றோன்

7483

மூலவிலக்கியமமைந்தும்பிறவுமுள்ள
முதுநூலின்பொருள்கட்டமைமுற்றுமோர்ந்தோன்
சிலமுற்றும்வைணவர்தந்திலகசேஞ்சே
தெளிந்தமாணுக்கர்கட்குச்சிறந்தமாரிக்
காலமழைபோற்கலைகளுட்பொதிந்த
கருப்பொருளெலாமுதவுங்கடப்பாடுள்ளோன், 8

ஆரியன்பரலாசிரதவார்வமுள்ளோன்
ஆரணந்தேரந்தணர்மாட்டன்புபூண்டோன்
சீரியஞானக்கலைகடினம்பயின்று
செவ்விகழிப்போனென்னுஞ்சீர்த்திச்செல்வன்
கூறியநல்லறிவுடையோர்கொண்டாடுஞ்சீர்க்
கோவிந்தவள்ளல்குணக்குன்றமன்னோன்
பூரியர்தம்புணர்ப்பறுத்தபுந்தியோனெம்
புலவர்பெருமான்கல்விப்பொருண்மிக்கோனே. 9

அன்னபுராணத்தையவன்மதலைநாரா
யணசாமிக்குரிசிலெமதறிஞர்கோமான்
கன்னல்விளைபெங்களூர்த்தேயநாப்பட்
கல்விச்சாலைத்தலைமைப்புலமைபூண்டோன்
தென்னவன்போற்றமிழ்வளர்க்குஞ்சிந்தையுள்ளோன்
செழுங்கலைகளெவற்றினுநற்றேர்ச்சிமிக்கோன்
பன்னுமெழுதாதவெழுத்தாகுமச்சிற்
பதிப்பித்திவ்வுலகில்மன்றுப்படுத்தினனே. 10

பிரபந்தவித்வான் காஞ்சீபுரம்

## ஸ்ரீமாந். ராமஸ்வாமி நாயுடு

அவர்கள் இயற்றியவை

பொன்பூத்தபுவிமகடன்றிருமுகத்துத்திலகமெனப்பொலிந்திலங்கும், தென்பூத்தசிராப்பளியார்செய்தவத்தின்படிவமெனச்செனித்திப்பாரில், மன்பூத்தவகத்தியந்தொல் காப்பியமே யெழுவாயாமருநூல்கள், இன்பூத்தநெஞ்சினிற்கல்லெழுத்தாகப்பதித்துயர்ந்த வெழிலின்மிக்கோன். 1

கந்தாகப்புலவர்மதிகாப்பியங்களோராந்துங்கற்றுணர்ந்தோன்
நந்தாதபெருஞ்சீர்த்திநாவலர்கோனெனுங்கம்பனவின்றபாடற்

சிந்தாரத்தாலுவினுன்மதித்ததனற்பொருளினைத்தென்றமிழ்நாட்டுள்ளோர், உந்தாதரத்தி னொடுமுண்டு களித்திட வுதவியுறக் களிப்போன். 2

உண்மைதனக்காலயமாயுயரரிச்சந்திரன் சரிதைக் குவமையில்லா ஒண்மையுறப்பொருள்வரைந்தோன் குருகைவருசிறுமுனிவ னுயர் தாட்கன்பாய்த், இண்மையுறுங்கம்பனுரைசடகோபரந்தாதிச்செயிரில்பாட்டின், வண்மைதிகழ்பொருள்புலவரெண்மையினிலுணர வைத்தமாண்பின்மிக்கோன். 3

தோடெடுத்தசெவியோன் வெண்டோடெடுத்த முண்டகத்தோன் றொழுதுவாழ்த்தும், ஈடெடுப்பில்லாவிறைவன்மெய்ந்நிலையைக் கைந்நிலையாவினிதுணர்த்தும், பீடெடுத்தவீட்டுநூல்பல்லபலவுங் கற்றுப்பிறங்கவற்றின், பாடெடுத்தபடியொழுகும்பான்மையினோ னோன்மையினோன்பண்பின்மிக்கோன். 4

ஆய்ந்தபரதத்துவமாந் திருமாலின்றிறத்தன்றியயர்ந்து மொன்றில் வாய்ந்தமனமாதியமுக்கரணமுஞ் செல்லாதடக்கிவயங்குமேன்மை ஏய்ந்தபிரபத்தி யெனுமுயர்நிலையைக்கடைப் பிடித்திட்டிணையற் றோங்கித், தோய்ந்தபே ரிசையுறு நாவலர்கோமான் கோவிந்தத்து கடீர்நாமன். 5

மன்னுகத்தணையான்றன்வயங்குபதிநூற்றெட்டின்மருவியொன்றும், தென்னுனைத்தலபுராணத்தினையின்றமிழ்விருத்தச்செய்யுளாக்கித், தென்னாத்தரவன்னோன்சுதனாராயணசாமிச்செந்தமிழ்க்கோன், பொன்னுகப்போற்றியதையெழுதாதயெழுத்ததனிற் பொதித்திட்டானே. 6

முற்றிற்று.

---

## சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியர் குமாரரும் பெங்களூர் சென்ட்றல்காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீமாந், இ. கோ. நாராயணசாமி பிள்ளை அவர்கள் மாணாக்கரும், பெங்களூர் கண்டோன்மெண்ட்ஸன்மார்க்க வித்யாபிவர்த்தனீஸபையின். தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீமாந்,

### பெ. லோ. கஜராஜ முதலியார்,

அவர்கள் இயற்றிய

நிலமண்டிலவாசிரியப்பா.

சிராமலையரனுங்கராமலை யரனும், மன்னியநிலையு முன்னிய கலையு, மென்றும்வாழ்வதோர்மன்றும்மாண்பும்,பொன்றுதலில்லாப்

பொருளும் புகழுங், குன்றுதலில்லாக் கொள்கைத்தாயதோர், திரிசிரபுரத்தான்றிரிசிரப்புரத்தான், கல்வியென்னுங்கலைகடறன்னை, மாந்தியே நின்றோன் மஹாவித்வஜ்ஜன, சேகரனென்றே தெளிந்தோரீட்டுஞ், செப்பிட வாழ்வோன் றேசுடைச்செல்வன், நாவுலாமன்னர் பாவுறைமன்னர், யாவருமிறும்பூதெய்தியே நின்றிடச், சந்தப்பாவாதியெந்தப்பாவு, மந்தமாகவறையுமாற்றலொடு, நவநவமாகநால்வகைநூற்கும், மதுரச்சுவையொடுமொண்பொருள்விளக்கு, மதியில்வல்லோன் விதியில் வல்லோ, னஞ்சியல் கொண்டோர்க்காதரவாக, வஞ்சியல் கொண்டவாழியப்பனை, யெஞ்சாவியலொடு மேற்றமனுமெனுஞ், சரக்கறையிட்டுத்தாழும் பெரியோன், கண்ணுஞ் செவியுங் கையும் வாயு, மாயிரமாயிரமாகக்கொண்ட, வாற்றன்மிக்கோரம்மாவென்றே, போற்றிக்கொள்ளும் போதமேயயக்கும், பிரசங்கமாரி பொழியும் பெருமுகின், மாவிந்த மடக்கியமாதவன்மெச்சுங், கோவிந்தனென்னு மபிதானங்கொண்டோன், கடல்புடையுடுத்த காசினி தன்னில், விடலரும் வினையிற்றோன்றுபல்லுயிரு, மடலரும் புலப்பகை யகன்றன் புறீஇக், கெடலருமின்பங்கெழீஇக்கொள்ள, மூவாமுதல்வனும் முன்னியமுத்தரு, மோவாதுறைத்தவுரைசார் நூற்கடற், படிந்தேபலர்க்கும் பண்பேயுதவ, மூடிவினைத்தெரிக்கும் மூவறுமொழியுளும், வடிவினைக்கொண்ட வடமொழியதனிற், படிமிசைவிளங்கிய பலநான்மணியின், றிருநாகைமான்மிய மென்னுந்திப்பிய, வருமணிதன்னை யாவருங்கண்டங், ககமேகொண்டா னந்தமுற்றிட, வுலகிற் குதவாவுவரியையுற்றே, யுலகிற்குதவிடு மூரியேபோல, வம்மொழிநின்றுமருமைத்தமிழாஞ், செம்மொழியதனுற்றெளிந்தோர் வியக்க, வாற்றணியாதியாச்சாற்றருங்கற்பனை, யேற்றணியாதியாமாற்றருமியலொடுஞ், சிந்தனைத்துயரிலாச் சிதரன் சீர்மையு, நிந்தனை யொழிக்க நினைந்தோர் நீர்மையும், பந்தம்பாற்றியபண்பினர் பான்மையு, மந்தமணவுமரியவாறுஞ், சந்ததமழியாத்தற்பரநிலையும், வந்தனைபுரியும் வழிபலவும்மே, ' தோன்றக் கூறினன் றொல்லுலகுய்ய, வன்றன்மைந்தனறிவிற் சேடன், திங்களூர்தருமங்களூர்தரும், பொங்கரே சூழ்ந்த வெங்களூரிடை, மங்காதோங்கிய மலிபுலத்திறமையிற், றன்னேடொப்பாரில்லாத்தலைவன், கந்தவேளுமெந்தவேளும், பந்தமாடப்பார்த்துப்பகரு, முற்பனவிற்பனநற்பத கற்பனை, பற்பலவோங்கிய நற்பதியியலோ, னற்கவிராஜனவின்றோர்க்கினியன், முத்தமிழ் வல்லோன்மெய்ம்மொழிமாண்புள்ளோ, னித்தனையேற்கவெழிலா

ர்நூல்பல, வற்புதமாகவறைந்த வாசிரியன், சொற்பலவகையாலே
ழையேன்றுதிக்கப், பொற்பமைகுருவாத் தோன்றிய புண்ணிய
னென்னிருவிழியினு மிருதயப் போதினுந், துன்னியே வர்ந்து
கடீர் செம்மல், நாராயணசாமியென்னுநாவல, னெண்டிசையேத்
திட விண்டிசை விளங்கிடக், கண்டிசை களித்திட மண்டிசைமதி
யுற, வன்பாவச்சிறப்புதித்தளித்தனனே, கைம்மாறென்னே கரு
திடின்மாதோ.

முற்றிற்று.

---

## இந்நூலாசிரியர் கவித்தலத்திலும் மற்றும் வெவ்வேறிடங்களிலும் தனித்தனி இயற்றிய கவிகள்.

பூவிரிப்பனபொற்பொடிவண்டுமேற்பூச
நாவிரிப்பனவடகலைதென்கலைநல்லோர்
பாவிரிப்பனபதப்பொருளனையகற்பகப்பூங்
காவிரிப்பனவெள்ளநீர்க்காவிரிக்கரையே. 1

முல்லைமல்லிகைசெவ்வந்திமுதிர்மருக்கொழுந்து
குல்லைகூவிளமாதவிகுருக்கத்திகுளிரி
எல்லையுள்ளபூத்தலங்கவித்தலமெனவெவைக்கும்
தொல்லையுள்ளனகனிகளென்பனவெலாந்தொகுவ. 2

மதகஜேந்திரன்வாய்வரமூலமென்றழைய
முதலைவாய்க்கொளக்கால்பற்றிக்கேட்டதுமுன்னே
இதமதாமுபதேசமென்றெண்ணிவாட்கவியன்
மதனையீன்றவன்வாய்வரக்கேட்டதுமறையோ. 3

என்னில்யானைமுன்னிடருற்றுச்சொன்னதவ்வியல்பே
பொன்னில்வந்தவன்புன்கணிற்புகன்றதுமறையே
தன்னில்வந்ததுதத்துவப்பொருளெனத்தடந்தான்
நின்னிலென்பதியமனையுங்கற்றநன்னெறியே. 4

பத்திலக்கமும்பயந்துபல்குறச்செயும்பண்பால்
இத்திருத்தடமேழிலோர்கூறுமால்வயிற்றை
ஒத்திருக்குமூலப்பொருள்வெளிவரவுற்ற
சித்திரத்தின்மூலத்தடம்பொய்கைமேதினியில். 5

தெய்வமூலகற்றீர்த்தமூலந்தனைத்திகழ
வையகத்திடைவைத்ததுமூலநாள்வருத்துச்
செய்தவத்தினர்மூலமுகண்டாலெனத்தேவர்
உய்வர்மூலமிதென்றுணர்ந்தும்பலிங்குளாக்க. 6

பதுமமேமுகமன்னவர்க்காயுளும்பதுமர்
மதுமணந்தருமேலைகளுமள்ளர்கள்வாயும்
எதுவுநன்மையேதீமையென்பனசற்றுமில்லை
புதுநலந்தினம்பொருந்துறுங்கவித்தலம்பொலிய. 7

இல்லையென்பதுபொய்யெனவிரவலரில்லை
எல்லையில்லனபல்வளக்காவிரியெல்லை
வல்லையேற்சொலவருகெனுமனத்தனைவல்லை
முல்லைநன்னிலமுதல்வன்றன்சவித்தலமுழுதும். 8

பச்சைமாமலைபோற்றுயில்பவளவாயவனை
அச்சுதாவெனுமவரைவந்தித்தமரரை
நச்சுவாளயில்கொண்டெறிந்தறநலிவாரின்
மொய்ச்சுவாளையுங்கெண்டையுங்கிளர்வனமுழுநீர். 9

ஈகையேற்றமரல்காலெனநீண்டிளநீரால்
ஓகைசெய்துதேவருக்குமுன்பலமுதவுவதாய்
சாகைபற்பலதழைப்பதுநீழலுந்தந்து
தோகைபாகனிற்கண்களும்பெறுந்தொகுதெங்கு. 10

சீர்த்துசெந்தமிழ்க்கவிதெரிவோர்திறத்திரவு
பார்த்துவாய்மலர்முகமலரொளிர்தரப்பகரும்
வார்த்தைதவண்டெனமதியென்றுமணமதுமருவத்
தீர்த்தமென்பதுகஜேந்திரதீரபுட்கரணி. 11

நண்டுகோளரிநாயகர்தமைக்கண்டுநாளும்
கொண்டுகொள்கெனக்குளிரினுங்காயினுங்குறிநீர்
மண்டுகோளுறும்வாவிபெண்மகப்பெற்றுவழங்கிக்
கண்டுகொண்மெனப்பெறுமரக்காம்பல்பைங்கமலம், 12

சேற்றுநாறுபன்மலர்களுந்தன்வயிற்செறிய
வற்றநீர்சார்ந்தவுநற்குய்முலைத்தொக்க

மாற்றுமீனுக்கும்பாம்புக்கும்வாறலைமலங்கு
நேற்றுமின்றும்வேற்றுமைசெய்யும்வேசியைநிகர்க்க. 13

எங்குமிக்கவல்லிருளினைவாயிடவெடுத்து
நுங்குமுக்கணுமுள்ளதுதலைமிசைநோனா
தங்குநின்றிருவொருவழிக்கொண்டெனவதன்கீழ்
தங்குதசவொடுநிற்பனபலவுளதாலம். 14

பல்விதததினமகங்களுக்கெய்தவிப்படிமே
லெல்லைநிற்றவினிருநிலத்தேவருணீத்து
மெல்விலைக்குமேலனதுவர்க்காய்வருவிபுதர்
புல்லநீட்டுவகரங்களைப்பொருவபூகம். 15

வடமொழிப்புலவரும்தமிழ்க்கவிஞரும்வகுத்துத்
திடமுறுத்தியசெய்யுட்களாமெனச்சிதைவு
விடநுனித்தினித்துக்கண்டுவெல்லஞ்சர்க்கரையென்
றிடநிலைத்துநாற்பொருளெனநீண்டதின்கரும்பு. 16

பதிகளேழெனப்பயந்தணைந்தனள்பராசத்தி
நதிகளேழுநல்கிக்கலந்தனநதிபதியை
விதியின்மேவியகங்கையேமுதலியவியனீர்
துதிகளாகமூலத்தடம்பொய்கையிற்றொக்க. 17

சுவைக்குமூலநானென்னும்வேர்ப்பலவினைச்சுளித்திங்
கெவைக்குமீவின்முற்பாகநானென்னுமின்கதலி
அவைக்குநான்புளிப்பினிப்பருளுவனெனுமம்மா
இவைக்கெலாஞ்சுவையெனுமதின்வந்தபேரீந்து. 18

இன்னமெத்தனைகனியுளவவைக்கெலாமினிய
அன்னநற்கனிபழுப்பனவவைசெழுஞ்சாலி
என்னநிற்பநீர்நிலைபொன்னின்மேனியுமியைவ
மன்னுருப்பசிக்குவப்புறவளர்வான்மருவி. 19

தானியங்களெல்லாம்விளைதலங்கவித்தலந்தான்
மானியங்கவித்தலத்தினர்க்கென்றும்வைகுந்தம்
கோனியங்கியகுடிக்கெலாமூப்பனார்குலமாம்
தேனியங்கியபெருக்கினால்வழிதொறுஞ்சேறு, 20

## வெண்பா.

விலையோலை வாங்கல்மனை விக்கென்றன் றேயென்
நிலைகண்டுஞானகிநன்னேயன் — தலையாய்பூ
வாசமுறச்செய்தான்சீர்வானரத்தூர் ஸ்ரீராம
தாசன்துரைசாமிதான். 21

ஒண்மணியசோலைதக்கொருதூதுசெங்கமலப்
பெண்மணிக்குக்கண்மணிநப்பின்னைக்கு — மண்மணிக்கு
மின்றளிர்த்ததங்கமொளிர்விண்மணிமேற்பாயுமரு
மன்றலத்திற்சிந்தாமணி. 22

காதசித்தாந்தசபாநன்னலத்தவென்னவைத்த
வேதசித்தாந்தசபாமேன்மக்காள் — நீதசித்தாம்
தாவரமாநானன்றுசங்கமமாச்சங்கமுற
வேவரமாஞானன்றுமேல். 23

பெற்றவளேபிள்ளைக்குப்பேயாய்ச்செந்நீர்பருகி
உற்றதசையுமுண்ணலுற்றாளேல் — மற்றினியார்
தெய்வம்வடநூறெளிசெந்தமிழ்க்கவிஞா
உய்யவெளியேனுக்குரை. 24

## பிரகடனப்பத்திரிகை.

மங்களவல்லி விலாசம்—(இது மாமிமருகியர் விவாதங்களைப் பற்றியது.) மாமி மருமகளுக்குச் செய்யும் கொடுமையும் மருமகள் மாமிக்குச் செய்யுங் கொடுமையும் கூறும்) இதன்விலை தபாற்கூலி உள்பட 0 13 0

மாமிமருகியர்வாழ்க்கை—(2-ம் பதிப்பு) (இதுவும் மேற்படி விஷயங்களைப் பற்றியது.) 0 4 6

விநோதசரித்திரம்—இது வேடிக்கை பார்த்துக் காலங்கழித்ததினாலுண்டான துன்பத்தைப் பற்றி கதாரூபமாய்ச் செய்யப்பட்டது. 1888-ம் வருஷம் Matriculation Examination Prose ஆக விருந்தது 0 6 6

விவேகசரித்திரம்—இது விவேகன் விநோதகனென்னுமிரண்டு சகோதரர்களது விருத்தாந்தங்களைப் பற்றியது. (விநோதன் தன்பாலிய தசையில் கல்வி கல்லாததினால் அடைந்த தீங்கும் மாதர் தர்மம் முதலியவைகளும் கூறப்பட்டுள்ளன.) இரண்டாம் பதிப்பு 0 9 0

சுக்ரீவபயநிக்ரகம்—சுக்ரீவனது பயத்தை இராமன் போக்கினதைப் பற்றியது. (இராமாயணசங்கிரகத்தைச்செய்யுள்நடையையொத்தவசனநடையால் எழுதப்பட்டுள்ளது.) 0 9 0

சித்திரங்காட்டிச்சத்தியம் நிறுத்தியகதை—நான்கு பிராமணப் பெண்கள் அநித்ய வஸ்துக்களை முதலில் உயர்த்திக் கூறிப்பின் நித்தியத்தைச் சாதித்தமை கூறுவது.—இரண்டாம் பதிப்பு. 0 7 0

அரங்கரலங்காரமாலை—இதில் ஒவ்வொரு பாட்டில் ஒவ்வொரு அலங்காரத்தின் பெயரை முதலில் வைத்து அதனதன விதி உதாரணங்களைக் காட்டி நூறு அலங்காரங்களும் கூறப்பட்டுள்ளன. 0 4 0

ஸ்ரீரங்கப்பட்டணசரித்திரம்—F. A. Examination of 1896. Tamil Prose 0 8 0

---

இப்புத்தகங்கள் பெங்களூர் சென்றல்காலேஜ் தமிழ்ப் பண்டிதர் தி. கோ. நாராயணசாமி பிள்ளை யவர்களிடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



# ஸ்ரீ நாகைப்புராணம்.

ஹரி: ஓம் நன்றாக.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

வாழ்த்து.

பொன்னிவர் மார்பன் புகழ்தனைப்பாட
மன்னியஞான மவிந்துளரான
பன்னிருமேலோர் பதங்களை யென்றன்
சென்னியிற் சேர்த்தித்தினம் பணிவேனே. 1

சிரீசைலேசன்றனைக்குத் திருந்திய பாத்திரஞானந் திகழ்சலங்கள்
மரியகுண வாரிதிபூதூர் முனியைவழுத்து மணவாளயோகி [மேவி
பொரியபதங்களைத் தொழுவாம்பூதூர்மாமுனிதலைக்குப்புகலாய்
இரியவராகிய ஞானதேசிகர் தந்திருவடிகளிரண்டும்போற்றி. 2

திருநாதன் பூவின்மகள் சேனையர்கோன்றமிழ்மாறன் செய்கை
கேட்க, வருநாதனுய்யக்கொண்டார் மணக்கானம்பியாமுனர் தம்
வாழ்மை, தருநாதன் பூதூரில் வருநாதன்றனைக்கிடமாய்த் தழைக்
குஞான, குருநாதன் மணவாளமுனிவேதவியாசபட்டர் குணங்
கள்வாழி. 3

அச்சுதன் சேரடிமலரோயழியாதபொருளெனக்கொண்டதன்மேலா
சை, வைச்சுமற் றெல்லாந்திரண வகையெனக் கொள்வான்
பூதூர்வந்தெல்லாரு, மெய்ச்சு குருநாதனருள் வேலையிராமானுஜ
மாவிமலன்பாதத், தைச்சகஞ் செய்சரணமெனச்சார்கின்றெனனு
தினமும்தாழ்கின்றேனே. 4

பொய்கைபூதன்பேய்பொன் மழிசைக்கோன் றென்குருகூர்பொ
லிந்தமாறன், செய்கைவரை மதுரகவி சேரலர்கோன்பட்டர்

பிரான் செழும் பூங்கோதை, னைகைதவிர்ந்துறு பாணன்றொண்டரடிப்பொடி நான்குகவிநன்கோது, நெய்கை வழிவேற்கலியன் பாதகமலங்கள்சிரமிலக்க வாழ்வேன்.

## வணக்கம்.

பாயுங்கேசரி யிருக்கமானும்பாயும் பாடப்படுதற்கேற்ற
தாயுஞ்சிறறிஞர்முன்னே யறியேனுந் தமிழ்பாடற்கமைவதானேன்
வாயும் பாடுவதுமனம் வந்து நினைத்ததீ முடியும் வண்ணமாக
ஈயும் சால்வதுபறக்கக்கருடனுஞ்சால் வதுபறத்தற்கிரண்டு
மொன்றே. 1

யாகாவாராயினு நாகாக்கவெனல் சிறிதறியேன் யாதேகாப்பேன்
மீகாமனில்லாத மரக்கலமோடாதென்றால் மெய்யோவென்பேன்
ஆகாததவை யடக்கமில்லாத கல்வியென்பதனுவுந்தேரேன்
மாகாவியக்கவிஞர் முன்னடக்கம்புகல வெங்ஙன்வாய்க்கிற்பனே

## ஆற்றணி.

பவ்வமே கதிரினம்மணியெனல் வதிற்பலவென்
கைவளாவுவகவின் கொளயான் புனைகலன்மேற்
பெய்வதா மணிமணி நிழலென வகைப்பேசுந்
தெய்வமா கதிக்கணிபல வழுத்துதல் சிலவே. 1

வெள்ளி வெண்படாம் விரித்தென விளங்கியமேகம்
தள்ளின் மாயையின் றனிநிறந்தானெனச்சார்ந்து
தெள்ளுதெண்டிரை மேய்ந்து காரொளி நிறத்தேவின்*
எள்ளில் யோகிகாண் வடிவென மீண்டனவென்ப. 2

மாயை நீங்கிய யோகிகாண் வடிவுடை மாமால்
காயமெங்கணுங் கருகிக்கைமாறு வேண்டாது
தோய மாநிலஞ் சிசயமேற் பொழியுநீர் சுரந்து
மேய்யோகிதன் விழிவழி யானந்தவெள்ளம். 3

வள்ளியோர் கொடைமகிழ்வொடு வழங்குதன்மான
வெள்ளியோங்கலின் விளங்குறச்சையமேல்விண்டு
துள்ளிநீணெடுந் தாரைவீழ்த் தருவியந்தூநீர்
அள்ளிவாரமேனித் திலக்கோவை கோர்த்தனைய, 4

---

* தேவின் வடிவெனக் கூட்டுக.

*
தன்னில்வேறிலாத் தலைவனை யொத்தவத்தண்கார்
பொன்னின் மார்பகம் புணரொளிமணியெனப்பொலிவின்
மின்னியாங்கவன் வின்முழக்கென விடிமிகுத்து
மன்னியவ்விலின் மழையெனக்கோடைமேல்வகுத்த 5

சுந்தரச்செழுஞ் சோதியுந் தண்ணளிதுளிக்கும்
கந்தரப்புயலுஞ் செறிதண்டுளிகவிழ்க்கும்
மந்தரப்பெருமலை யெனச்சையமாமலையும்
தந்தளிக்குமச்சுரர்க்கென நிற்குந்தண்ணமுதம். 6

புறமெலாஞ் சுடுகோடையு மகமெலாம்பொடிக்கு
மறமுலாங் கலிமாய்ந்தென மாய்ந்திடமாறித்
திறமுலாவிய மாயையின் றனிநிறந்தீரா
திறமுலாவின நெடியவன் புகழெனநீத்தம். 7

பாவின்மூழ்கிட வேண்டிடுபவனை யொப்பாமென்
மூலிநீண்முகிலான் முழுகம்மலையதனை
நூலிஞனுணங்கினர் சொலார் காலறிவோன்மை
சால்கிலாதிடுகாட்டிடையாடவுஞ்சாரா. 8

விளைவுசெய்தலில் விரிஞ்சனே வெய்யவெங்கோடை
களைவுசெய்தலிற் கண்ணுதலுளதிலாக்கடவுள்
வளைவுசெய்கலாமணி நிறக்கடவுளேவானம்
உளைவுசெய்வதை யொழிந்தழித்திடுஞ் செயலுளதேல். 9

முடியினீருறலாற் சடைமுடியிலாமுதல்வன்
வடிவிலாச்சுனைக்கமண்டல நான்முகவள்ளல்

---

*நிறந்தவிடாகநிறைந்தபாற்பொங்கனிவேதனர்த்தனித்தனிநிரப்பிச் சிறந்தது பரந்ததனைய வெண்முகில்போய்த் தெள்ளறலுண்டு வாய்தெவுட்டி, வறந்திடம் பொழிவவந்த நன்மழையாய் வரு தோறுங் கண்ணன் கைவாங்கு, பிறங்கலஞ்சனத்த பலவெனக் கறுத்துப் பெய்தனசையங் கண்பிசைய.

கெடுப்பதில் வெல்டிப்புமை வரைசுனைக்கண் கிளர்வதானந்த மேற் கிளர்தல்; விடுப்பது கோடைவெயின் முகங்குலைந்து வெருவுறத் தனிதவிண்ணேறு, கடுப்பது துளிகள் வெறுக்கைகளிறைக்கக் கண்டது கொண்டுகைம்மாறு, கொடுப்பது வேண்டா குலகலம் வேண்டு கோளினர் குணங்களைக் கொண்ட.

அடியின்மாநதியாகலின் மணிசிறத்தண்ணல்
நெடியமால் வரையென்னவும் பொலிவுறுநீத்தம், 10

கால்களாகிய வருவியிற்றவழ்ந்துகைத்திரையால்
மேலுலாவிய பொருளெலாம் வாரிவீழ்வெள்ளக்
கோலமாமகள் குன்றெனுந்தாயுடல் குலுங்க
வாலிதாமவன் மடியினின்றிழிந்தெனவழிந்த 11

## வேறு.

மண்மடந்தையவரை முலைப்பால் வழிவதென்ன மலைத்தீந்தேன் வடிவதென்ன, வெண்மடந்தையும்வியப்பவளங்கெழுமப்புரந்துசுவை மேவலாகி, எண்மடந்தை காந்தனெழிற்றோள் வீழுமாலையென வியம்பக்கேட்டுத், தண்மடந்தை காவிரியினூற்றுமோகடற்பெருக் குந்தகாதென்ன. 12

காவிரிகண்டோர் கங்கைகண்ணுறவேண்டிக் கங்கைகண்டாராகி மாவிரசைதானோ வைகுந்தமோ மதிலரங்கமெனு மாண்பாகித் தேவியலினொருமுனிவன் கமண்டலநீரன்று சிவன்றீண்டலாலே மாவிரதக்குறுமுனிவன் கமண்டலநீரே புனிதம்வாய்ந்ததென்ன. 13

வெள்ளமன்றுமேகமெனுங் காட்டெருமைக்கணம்வடித்தவெண்பா லென்ன, உள்ளவரைப் பொருளனைத்துங் கவர்வுறலானறன்குறு லைப்பானென்னக், கள்ளநெஞ்சன்குங்கலங்கக்காவேரியேதெளிவு கண்டபோதிற், றெள்ளமைந்த சான்றோரே யன்றவரைத்தே னுகர்ந்த சிறியர்போலும். 14

கண்ணருவிசோர்ந்தொழுகக் கால்வீழ்வதிதுவென்றுகழறக்கேட்டு நுண்ணறிவு சாலுமன்பினோன்பினரோ வெனநதியாய் நுழைவ தென்ன, விண்ணநதி பொன்னிநதி யெனும் பெயரைமேவியிந்த விபுலைக்கெல்லாம், தண்ணளிசெய்தொழுகியது தானென்னக் குறிஞ்சி யெல்லாந்தடவலாகி. 15

உலகவாம் பேரறிஞனுறுதிருக்காவேரி யூருணியென்றுண்மை நிலவவாய்ந்துள்ளது காத்தருள்செய்குள மூவொல்லா நிரப்பிக் கோடற், கிலகவாய்ப்பொன் விளைவாய்த்திரை சிதறப்பொன்னி யென விசைந்துபூங்காக், குலவலாற் காவிரியாய்க் குவலயமெல் லாங் குறிக்கக்குறித்ததம்ம. 16

பொன்சிதறி யுலகமெல்லாம் பூசுதல் போலவும்புகுந்த பொன்னி வெள்ள, மின்சிதறு மணிசிதறி விடியற்காலத்திரவி விளங்கிற் றென்ன, என்சிதகு மானிறத்துக் கேற்பமணி கடலீந்ததென்று தானுந், தன்சிதற லாற்றினமு மொருமணி வானுற வெறிந்து தயங்குமாதோ. 17

தின்ஞ்செய்மணி பன்னிரண்டே தெரிந்தது நித்திலத்திரளே திரை யின்வீச, நனந்தலைவான் விளங்குமுடிப்பொன்னையுந்தந்துறலாலே நாரணற்கு, மனஞ்செயுங் கொள்ளிடமாகிக் காவிரியப் பூவிரிகா வணமேற்கிட்டி., இனஞ்செய் கலைத்திங்களையும் பலவிதச்சங் கினங்க ளனவெறிந்து சூழ்ந்து. 18

இருபுறமுந் துயலுமணிமாலை யரங்கங் கோயிற்கெனவே நீண்டு பொருவறுங்கிங்கரச் செயல்கள் பலபுரிந்து தாசோகம் பொலிய வூக்கி, மருவுதலாலாறெனக்கு நின்பாதமே சரண்காண் மாயா வென்று, சருவுதலுஞ் செயும் பொன்னித்தனி நதிபோலெங்கு சீர்தயங்கிற்றென்ன. 19

புயல்சுமந்துசிலைசுமந்துமான்சுமந்து விளங்கொளியம்புலியுந்தாங்கி இயல்சுமந்த சங்கேந்தி வேய்பொறுத்துக் கோங்கரும்பு மிலங்கக் கொண்டு, மயல்சுமந்து தருங்கொடிகார் மணற்கொழிப்பு வாழை ஞெண்டு வராலோடாமை, அயல்சுமந்து தன்னிரோ யாவரும் யாவையுமமைவ வாகவாழ்ந்து. 20

கடற்றலைவன் களிப்புறச்செல் கன்னியிவள் காவேரிகாமமாதே இடத்தெனவெல்லாம்வீழ்ந்துமல்கு பயன்றுய்த்திடச்செய்செய்கை சேர்ந்து, மடக்கொடிநல்லார் போலாவாருகி வளைநழுவ வழுவ லாலே, நடத்திரு நீரமுங்கலந்து நண்ணுதலாற் பொன்னேந்து நங்கைதானே: 21

பதிபிறரென்றுன்னுது கலந்துறுபெண்ணுறளித்த படைப்போ வேறு, நதிபிறந்து தவழ்ந்து சென்று நாயகனைப்புணரியெனநயங் துகூடி, வதிதரச்சார்வனத்தழுவிப் பெருக்குசெறிவடிவாகிவறழ்ந்து காய்ந்து, துதிசிறந்ததாறென்று பெண்ணுருக் கொண்டாற்கண் டார்துய்ச் சாராதே. 22

கதிப்பெண்ணே யெங்கெங்கு நாளுந்தழுவுதற்கு நண்ணும்
பெண்ணே, விதிப்பெண்ணேயென்று விண்ணின் மேலுங்கையே
முதலினர் வீழ்விமலப்பெண்ணே, துதிப்பெண்ணே யார்கலியுந்
தொடர்பெண்ணே கற்பகத்தேதோய்ந்துசான்ற, மதிப்பெண்ணே
வானவர்கோன்வழி நோக்கப்போக்கவந்து மருவும்பெண்ணே. 23

ஆதியாங்கலுந்தன் கால்வழியொழுக நன்னீரினலம்பும் பொன்னி
நீதிநதியுந்தன்கால்வழி யொழுக நன்னீரினிரப்பிமேவும்
சோதி திருவடியார்க்குந் தொழவுளது நதியும்வந்து தோயவுள்ள
தோதிலிதனுற் புனலுடோங்கியது பயனும் வளர்ந்துற்றதன்றே.

வேறு—ஏகபாதம்.

அரிமாவாரத்தாவாய—அரிமாவாரத்தாவாய
அரிமாவாரத்தாவாய—அரிமாவாரத்தாவாய

(இ-ள்) அரி-மலையினது, மா-பெரிய, வாரத்து-அடிவாரத்தினின்று ஆ-ஆகிய, வாய அரி-நீர்த்தொகுதியானது, மா-வெறுப்போடு வார-வாரிக்கொள்ள, தா-கெடுதி, ஆய-ஆகிய, அரி-சிங்கத்தோடு, மா-மிருகத்தையும், ஆர்-நிறைந்த, அத்து-சிவந்த, ஆ-பசுக்களையும் ஆய-ஒன்றை யொன்றுதேட, அரி-அரித்தலோடு, மா-அழகிய, வாரம்-கடலில், தா-தாவிய, வாய-இடத்தையுடையது. 25

வேறு.

நாகம்விட்டபொற்கற்பகநாண்மலர்-மேகம்விட்டபுயல்வழிமேவவே,
சோகம்விட்டசுவைமணஞ்சூழ்ந்துநீர்த்-தாகம்விட்டதனிக்கடல்சார்
பெலாம், 26

சூலுமாய்வளைநூங்குமருவிவாய்க் - காலுமாயலைக்கைகளுமாயெழீ
இச், சாலுமாசுனை சாரவுந்தானுறு - மேலுங்கீழும் விராவின
வெள்ளமே. 27

தலையிற்றங்குதமனியப்பட்டமே -னிலையிற்றங்குமணிநெடுமானிகர்
முலையிற்றங்கு முழுமணி கோயின்மே-கலையிற்றங்கு மணியதன்
காலரோ. 28

ஆதியானவரங்கனெனும்பரஞ்-சோதிதன்றலைசூழ்சுடர்ச்சோதியே
வீதிவாய்நிழல்விண்மணியென்பதால்-நீதிநீள்பயமாகியொளிர்ந்ததே.

பூத்தநாளெனப் பூஞ்சுனைப் பொற்போடு - வாய்த்தவைசயவரை முழுதாடிய, தீர்த்தமேவித்தின முவர்ப் பாய்க்கடல்-ஆர்த்ததாயிற் றருவ்ருப்பெய்தியே 29

வைசயமாட்த் தனிக்கடலாடமால் - பெய்யவெள்ளம் பெருகப் பெருகின, வையமெங்கும் வளமன்னவாவியும்-வெய்ய கோடை விழுங்குபைங்காவுமே 30

எங்கிருந்து காவேரி யென்றாலுமற்-றங்கவர்க்கினியாம் வினையுங் கெடு, மிங்கிதற்கு முன்னிட்டு தவத்தரே - சங்கைநீரதினை வுறத்தக்கரே. 31

தேடிச்சென்றுதிறலுடைக்கங்கைநீ-ராடித்திருமருவினையாவையும் நாடித்தம்மி னினையகவிவுறும் - வீடிக் காவிரிமேன்மை யெம் மேன்மையே 32

மேயபெண்ணைமடலொடுமேவினோர்- சேயமேனிச்செறும்பிற்றின கரன், ஆயிரம் கரத்தாலும் பொருத்தபுண்-பாயதாரைவெண்பா லெனலாயதே 33

மாரிக்கூட வருமுன் வரைமகள் - பேர்வில் கோடைபுணரப் பெருமையோ, சோர்விலிள்சுனைதோய விடாயெனத் - நீர்வில் குங்குமச்சேதகஞ்சேர்வதே 34

வேறு.

சையத்தருவிதழைக்கத் தனிழைக்கத்தவழ்ந்து
வையத்தறலும் புயலுங் கடல்வந்துமேயத்
தெய்வத்திறமுற் றவமுங் குறைதீர்ந்துவாழப்
பொய்யற்றொழிந்த நதிபாய்தரும் பூவும்யாவும் 35

விதியும்புகழ்கங்கையுந் தாழ்சடைமேவிவெள்கப்
பொதியும் பொலன்மேனி மின்னார்விழிபூத்ததூய
மதியுந்திருக்காவிரி காவிரியென்னவாழ்த்து
நதியுந்தரு நன்னகை முத்தநட்டோர்களுக்கே, 36

ஓதத்தின்மேவுங்கலம்போற் பலவாற்கொடோங்கிப்
பாதத்தின்மேவிவருங் கங்கையும்பண்புகுன்ற
வேதத்தின்மேவும் பரஞ்சோதியைத் தன்னுள்மேவிச்
சீதத்தின்மேவுஞ் செழுங்காவிரித்தீர்த்தநீத்தம். 37

நதிகாற்கடை நீர்பெறஞாயிறு நண்ணுபூதார்
யதிகாற்கடைநீர் பெறயாமு நன்கின்புகூடத்
துதிகாற்கடைநீரெனச் செல்லவுந்துன்னுமொண்சீ
பதிகாற்கடை நீரரங்கச்சினிற் பாய்தலாலே. 38

பொன்னித்திருமாநதியாற் பொழிலுந்தழைந்த
கன்னித்திருநாட்டெழிலுங் கனிந்தேதழைத்த
வன்னித்திடவோ மதகுக்குளவாய்கள்போகும்
துன்னித்திடம்வாய்ந்தவர் வாய்ப்புகுஞ்சோதிதாளே. 39

அடிவந்தயானோர்முடிமேற் செலலாவெனென்று
குடிவந்தகங்கைநிகராது பொன்னிக்குணக்கு
விழிவந்தசெங்கேழ் மணிமார்பிடைவேய்வதாக
நொடிவந்ததாரோ விரசைக்கெதிர்நோற்றதன்றே. 40

ஒளிநீருள தாதவனுத்தமாங்கத்துமேலுந்
தெளிநீருள தாயது காவிரிதேவர்தம்மை
அளிநீரதுவோவரிதா யதையன்றியார்க்கும்
எளிநீரதாகாதழையோ மருந்தென்னலாமே. 41

மான்கொண்டது மாமதிமற்றிது வெற்பில்வாய்ந்த
தேன்கொண்டது தீஞ்சுவைத்தெள்ளமுதிற்சிறந்த
தான்கொண்டுறுபாலு மிந்நீர்குடித்தாயதன்றே
மீன்கொண்டவெர்வேலையும் வெம்புலால்வீசலாமே. 42

தாழ்ந்தோடியுந்தண்மை குன்றுமலுண்ணத்தணிக்கும்
வீழ்ந்தோர்களைநீண்டகன்றேங்குறுவேலைபோலா
தாழ்ந்தோரெழமேலெடுக்குந் திரையங்கைதாங்கும்
வாழ்ந்தோங்குநீரே வரவாய்ந்துறும்வண்மைதேங்க. 43

**வேறு.**

உள்ளயாவையு முதவுமோர்கொண்ட
வள்ளலென்னமால் வரைகொடுத்திடக்
கொள்ளைகொள்வதே யெனினுங்கொண்டுசெல்
வெள்ளங்கள்வரின் விழைவதில்லையே 44

காடுசூழ்கருங்கள்ளர்போன்மறை
தோடுநீரதண்டாவதின்றியே

வேடுகூடுவெம்பாலைமேவியு
காடுகூடுறநகருங்கூடுறும். 46

காட்டைமர்மலையாகக்கண்டுகன், மேட்டைக்காடென விரவித்தண்
பணை, நாட்டைநெய்தன் மேனடத்துநீர்விளை, யாட்டைமால்விளை
யாட்டொடாடாக்கவே. 47

கரைகடப்பது கண்ணன்வேதநீன்
வரைகடப்பது போலுமாநதி
திரைகடப்பது மில்லைத்தீர்த்தன்மேய்
நிரைகடப்பது மில்லைநின்றரோ. 48

கரையிரண்டுநீர்கழுமுகாவிரித்
திரைபுரண்டமாதிமிதிமிங்கலம்
புரையவொன்றுபாற்கடலும் போல்வதே
விரைவதின்றிமால்விரவுகோயிலே. 49

கோயில்சூழ்வதுங்குளங்கடோய்வதுஞ்
சாய்வில்பொன்மணிதருவதும்புரிந்
தோய்விலாதுநீரொழுகலுங்கொடு
வாய்வதாயதுவருவண்பொன்னியே. 50

சுவையுமாமணமுந்தொடர்ந்துநன்
கெவையுமாகிநீரினிமைசான்றுகந்
துவையகண்கைகாலருவிகூர்சுனை
கவையில்வெண்டிரையுடனடப்பவே. 51

ஆறுபல்கியோராறதாகிப்பூ
நாறுபைந்துழாய் மாலைநாயகன்
வேறுசால்கிலாதமைய வேண்டுவோர்
கூறுவாய்மொழி கோப்பநீள்வதே. 52

துளவுவேண்டுவோர் தோன்றல்கண்டுகொள்
அளவில் காலமுமதுவிராவியே
வளவர்கோன்வள நாடுவாய்க்கவே
இளகிமேவுமோரிவறலின்றியே. 53

ஆறலைத்து மாறங்கங்கூறினோர்
சேறலைப்பெருந்திறல் கொள்காவிரி
நாறலைக்கையானனியலைத்தும்வெவ்
வேறலைக்கலார் வேண்டலாவதே. 54

புதியதென் சொலார்புகழ்வுபோலமா
வதிகலந்துவாய் வழிநுரைக்கவே
விதியையஞ்சுருவிறல் கொள்காவிரி
நதியையென்சோணாடுசெல்லுவாம். 55

ஆற்றணிமுற்றிற்று. ஆ. விருத்தம்—64.

நாட்டணி.

தருநெயும்பாலும்வெண்டயிருமுண்டானிடைத்தாம்புகுழ்போ
தருமையும்பெருமையுங்கொண்டுகட்டுக்கடங்காறுபோலப்
பொருநையும்வையையும்போதராநின்றதேபோதுமேயோ
எருமையும்பசுவுநீடிந்தநாடெந்தநாடென்னலாமே. 1

பொன்னிநாடே பசும்பொன்னிநாடா மெனப்பொலிதலாலே
கன்னிநாடும்பனைக்கண்ணி நாடுந்தினங்கைகள்கூப்பச்
சென்னிநாடாகியெத்தேய முந்தன்வளச்செறிவுபேச
மின்னிநாடாகவே நண்ணுறவெண்ணுமோர்விண்ணினாடே. 2

மாரனாடனையநல்வளமுலாஞ்சனையெலாமருவியாட
ஈர்நாடாகியெங்கெங்குமேசென்றுநல்லின்புசெய்து
சேரனாடும்பொழிற்செஞ்சிலம்பாறுடைத்தென்னனாடும்
வாரநாடாகவேவாழுமோர்சோழனுள்வளநனாடே. 3

முல்லையானகைசெய்தும்பாலையால்வெம்மையைமுயல்வுசெய்துங்
இல்லையாய்மேனிலைத்தேவரைக்காணுமாசெறிவுசெய்தும்
எல்லைதீர்செல்வமால்முன்னர்நின்றுடுநீரெய்தலாலே
நெல்லையாகாயமாநெறியெல்லாநிமிரவேநிறவுகாடு. 4

சூல்வழிந்தொழுகவான்மேய்சிலம்பாறுதோய்த்துறைகளெல்லாங்
கால்வழிந்தொழுகுநீரால்வளர்ந்தெழுசெழுங்கதலியங்கான்

றேல்வழிந்தொழுகராமேனடந்துழலவண்சுவைகொள்காரான்
பால்வழிந்தொழுகுமுன்றேன்வழிந்தொழுகுநன்பழனநாடே. 5

மாங்கனிக்கேங்குருமந்திமுன்கீசகம்வன்கைகொண்டு
தாங்கனிப்பலவுவீழ்தரவுடைந்திடமிருற்சரகமோதத்
தூங்கனிச்சம்புவின்றெருகுதிமேலேதெனத்தொடங்கர்த்த
தேங்கனித்தேனுடைக்காமலேமதகெலாஞ்சிறைசெய்நாடு. 6

செல்வமாளுகணைச்சேர்தலாற்பாற்கடற்செல்வியோடு
புல்வமாவனெலாம்பொலிவுறப்பொன்னியும்புனலுமோடிச்
சொல்வமாகடலொடுஞ்சரர்மதித்திடவரிற்றேய்தலன்றி
வெல்வமாராவமுதுறுதுணைக்கொண்டெனமேவுநாடே. 7

நீரைமேவுறுவதின்முறைவலார்பதின்மராய்நிமிர்தருஞ்சான்
றோரையேய்திருவரங்கப்பெருங்கோயிலாமூரைமேவுஞ்
சீரையும்பெறுவதிற்றிருவையும்மறிவையுஞ்சேவையுந்தந்
தாரையுக்தெளிவுறுத்திந்நாடெந்நாடனையதாமே. 8

ஒப்பின்றெனவுரைத்தப்புறஞ்செல்வதற்கொண்ணுநாடோ
செப்புசெப்பென்பர்செய்தப்பிலொப்பென்பவன்செய்கைகண்டோ
வெப்பகன்றெய்ப்பொழிந்தப்பொளுடுறைருவோர்மேவலாலோ
வைகப்பதின்றேவரும்பொற்பமாபுகழ்செயக்கருதுவாரே. 9

முக்கணும்மெண்கணும்மாயிரங்கண்ணுமாமுனிவர்காணத்
தொக்கநாடிதனினேர்சொல்லவோசேடனுஞ்சுமைபொருளுய்த்
தக்கவாறேதுரீனெழுதுவோர்மழுவினுஞ்சக்கரத்துங்
கைக்கள்போயினரெனிற்கண்டுரைத்தெழுதயார்கழறுவீரே. 10

வேறு.

ஆடுமயிலேல்றவாதரவாகிமாதங்கியனவள்ளியொடுபுணர்ந்து
நீடுசுரருந்தாழநின்றுநெடுமாவடங்மிர்ந்துருதலைநிலாவித்
தேடுதவஞானயோகியரடைவதாகவுயர்தீதிவிடமாகினாலும் (றே.
பாடுபெறுதானெனவிசைந்தபடிகண்டுவன்ரபருகடவுனின்றதன்

பொழிப்புடுதலானவுலகேனுவெனவிளங்கனிபொதிந்தகல்பொருப்பி
துகையாற், பிடிபடுதலானகந்துகங்கள்செய்குநிகனிபிறங்குநிறமு

ளதங்ஙனே, கடிபடுதலானவிதழ்கண்டிங்குகொவ்வையங்கனிகின்
னைகவ்வுவதலால், நெடிபடுதலானவெற்பன்குறத்திக்குமகிழ்கிலகு
லைதவிலையென்னவே. 12

குறவரும்மருளுவதுகுன்றென்பதோன்றே குறத்தியர்துடிக்குறழ்
மருங், கிறவருங்குன்றுமாமேயெனப்புணர்குன்றிரண்டினுங்கால்ப
டுதலோ, பெறவருங்கைபடுவதற்கேசிறந்தளபெருங்குன்றுகளுமா
தவத், தறவரும்விரும்புறுசுவர்க்கமெனவாயுறுவதங்ஙனேயலதெங்
ஙனே. 13

சந்தைசொல்வதுகிளிதனக்கெனத்தவமுனிவர்தங்கிடமெலாம் வதி
தரச், சிந்தைசெல்வதுகண்களெனவிளங்குறமயில்செயுங்களிநடங்
தினமெலா, நிந்தைசொல்வதுமறைபயின்றெனப்புரிநடனநேயரிங்
கிதனினையநீ, டுந்தைசெல்வதுதெரியுனக்குறுகரம்பலவுணர்திக்கி
லெனவுறுவதே. 14

கொல்லவஞ்சாததுகொடும்புலியெனச்சமண்குலைவுகொளவெவர்கு
றுகினும், வெல்லவஞ்சாததுவிறற்சியம்ராமனெனமேவியகுடாவ
டியிருட், செல்லவஞ்சாததுநிசாசரரெனக்கவர்தல்செய்தவருமின்
சொல்செவியிற், சொல்லவஞ்சாததுமதங்கொண்டுகைம்மலைசுலாயு
றுவதெம்மலையுமே. 15

அம்புலிப்பிள்ளைதவழ்முன்றில்சுற்றுங்களிநல்யானையங்கன்றுடனு
லாம், வெம்புலிப்பிள்ளைநிழலொண்பளிங்கிற்றெரியமெய்யிஃதெ
னார்குறவரோ, டும்புலிப்பிள்ளையொடுறங்கிடச்சிறுகுடிகளேவிய
முனாற்றியகொலோ, பைம்புலிப்பிள்ளைமனையென்றிமைப்பிலர்நி
னைவர்பாறைக்டொறும்பொலியவே. 16

வாயிரக்கருவிநறுமல்லிகைகன்முல்லைவெண்மணிமாலைவாசவனலம்
தோயிரங்கணியிரெனவேசரும்புறவதிதி சுதனிருந்தெனவோமுக
முன், போயிரந்துநிலசுரர்பொன்றவெம்புட்கடவுபுகழ்நினைந்தனு
தினமுநன், காயிரக்கண்களிலுமானந்தநீருறலனையதண்ணஞ்சுனை
களே. 17

வேங்கைவெறிவீசவரிவேழமெனவேகுமுறவினவிமேவிடுபோர்
வைதோ, லாங்கையிலைவாழ்கமக்கெனவுணர்த்தியவரனடைத்தாயி-

டைத்தாங்கிய, பூங்கைக்கிராயலர்வகாந்தளவைகாணமகிழ்பொங்கி
மரகதநிழல்விரா, யோங்கையிலிருனெவுமைக்கும்வடிவுற்றதென
வொளிர்குறிஞ்சிகண்மலர்வவே. 18

ஆரமுயர்,தேக்ககிலசோகநாகஞ்செறிவதாயமலையன்றுதேவ
தாரமுதலைந்தருவிருந்தாலுமும்பர்நிலைதங்குவித்தின்றியன்றே
ஈரரலைக்கண்வரலாயினவதன்செயல்கிடப்பருனியமென்னமுன்
மாரனனவோர்மதலை வித்தெழுத்தெட்டென வருத்தபடிமரவகை
களே. 19

வேரலுண்டைவனம் விழைந்துதின்றிடுதோனைவிளைவிரதமும்பரு
திமா, வாரமதுவொடுசுவைத்திடநலறமுதனுண்குமண்மிவளர்கின்ற
வனைய, நீரமுதந்தருவதன்றேவெனிற்பரவுநிலைமத்துவாசுகிநிலா
வீரமுதனுயகற்கியைவிலையநேகமிங்கெங்குமுண்டங்குமுண்டே.

மாலுக்குவையகமளந்தமணவாளற்குமன்னியதுகடலுலகெனக்
கோலுக்குமுதிர்பறைமுழக்கிற் கறங்கிசைகொளுந்தொண்டகங்கு
முறவெண், பாலுக்குமோர் தரும்படிகலங்கிப் பதறுபற்றினவிலங்
கொடுநிலா, மேலுக்குநின்றுதலைகீழுக்குநன்றுசெலமேவுமிரவும்பக 21
லுமே.

எழ்தழுவுபொழில்களுஞ்செவிமடைபுகுந்துளமினிப்புறும்படி குறி
ஞ்சி, யாழ்தழுவுமால் வரையதிற்கற்கள்வெண்ணெயெனலாயின
தழைந்தனபசுங், கூழ்தழுவுசெந்தினைக்குரல்குதறுகிள்ளைதங்குரல்
மறந்தனவினிதுநன், கூழ்தழுவுசெவிகளுளரல்லராயிரமமரருணர்
வொடுமெதித்துறையவே. 22

வேறு.

பண்பொருந்தும்படிபாடிப்பறைமுழக்கிவெறியாடல்பயிலவேண்
டி, விண்பொருந்துங்கடவுளருங்குறையிரப்பவினைதிறங்கள்விளம்
பிமேவற், கெண்பொருந்து மலைநெல்வித்தித்தினைகாத்துத்தேனழி
த்தங் கீகைவைப்பின், மண்பொருந்துகிழங்ககழ்ந்துநீரருவிதோய் 23
ந்துசுனைமருவுவாரே.

அணங்குடையநொலையல்பொரிபுழுக்கல்பிண்டிகளிதருந்தேனழிக்
தவெள்ளை, நிணங்குடர்நெய்த்தோர்நிறைத்துக்கையிரீஇமண்டை
கணகிரம்புகூளி, இணங்குறுகோளரிக்கொடிபாய்கலையூர்திசக்கரா
யுதியெயன்றேத்தி, வணங்குறவாள்வேன்மறவர்பொரமுயலின்முந்
துற்றுவளருங்கன்னி. 24

வையிலைவேற்காளைமண்டுமெரியுண்மரத்தடிநிகிடலின்மானமீளி
கைசிலைவாங்கும்விடலைகாமம்விளைக்கையெயிற்றிகருமென்கூந்தல்
நெய்புழுகுமணநிரம்பக்குடங்களுணுங்குணநிரம்பிநேயவின்பம்
செய்தருமாசுவைதெரிந்துதேவருமேக்கங்கொடுவான்றிசிவரன்றே

எயினரெயிற்றியர்மறவர்மறத்தியரென்றெவருமெடுத்தினிதுகூறக்
குயினறுசீர்பெறுவேனினண்பகல்பின்பனிபிரிவுகொண்டுகூடி
வயின்வயின்வேற்றூர்மேற்செல்சினஞ்செங்கண்டீர்வது மன்னிக்க
ளித்துப், பயினலஞ்சான்மதர்நோக்காலெனவுறுதம்பருவம்விளைப
யனுந்துய்ப்பார். 26

புறவுபருந்தெருவைவெம்மைபோய்விண்மேன்மண்டிலமாய்ப் பொ
லிந்ததாக, உறவுறுதம்பெடைதழுவிக்குளிர்தூங்கிமகிழ்வனகண்டு
லகில்வேற்றுப், பறவையெலாம்பரன்முரம்பிற்பயின்றதவம்பலித்
தன்றேபயன்றுய்ப்பென்ன, நறவுறுகொம்பிற்கேகாமுடவனென
நணுகவெண்ணிநண்ணுவன்றே. 27

குடர்கவருங்கழுகுசெந்நாய்கூத்தயரும்பேய்கள்விண்ணுங் கொளுந்
துகானற், றிடர்கனலுங்கூர்ம்பரலெய்போற்கிடப்பக்கணைகளுடல்
சிதைக்கப்பட்டுத், தொடர்களின்றூர்போர்முனின்றூர்பாகவதர்த
மைப்புறஞ்சூழ்சொன்னூர்சுற்றம், அடர்கின்றவரைகளெல்லாமட
ங்குவனகொடுங்கலியுமடங்கவம்மா. 28

ஓட்டுதற்குமுடியாதுவாகையொடுங்குமயொடுரிமோதினூர்க்கு
வெட்டுதற்குநெகிழாதுவரைகளைப்போல்வச்சிரத்தால்விண்ணுளிக்
குச், சுட்டுதற்குக்கூடாதுமேருவரைசூழ்ந்துவருசுடரோனுக்குக்
கிட்டுதற்குநணித்தாகாததுபகடூர்திக்குக்கல்கெழுகுறும்பு. 29

ஈர்ங்கைவிதிரார்கயவர்கொடிறுடைக்குங்கூன்கையிலார்க்கென்பத
ன்றிச், சார்ங்கவரிவில்லாளன்றனக்கன்றிச்சிதைவுபடாத்தகுவரே
போற், கூர்ங்கருவிகொடுதோண்டினலதுகுழிவறுங்கூவல்கொடா
நீரென்ன, நீர்ங்கிணறுபலவுமுளநிச்சநிரப்புத்தெலனநீர்நிசம்பச்செ
ய்ய. 30

அராவணைசேரமலனன்னவடிவானதனைக்கவெனவவனைநோக்குங்
குராமலரமடநடைப் பூங்கொம்பன்னூரணைத்தல் செய்க்குழுமப் பூ
த்து, விராயதனைக்கண்டுவிண்டுமீன்வடிவாய்ப்போக்குவதைவியந்
துநின்ற, மராமலரநோக்கியவைமுடிப்பர்திருமாற்காவிமானமா
தோ. 31

உழிஞ்சிலேபாலையேயோமையேயிருப்பையேயுயர்தேர்யானை
கழிஞ்சநொறிலுறுபாய்மரக்காலரொன்றினையவெங்குங்கலந்தரி
ன்று, தழிஞ்சிபுரிதரும்வெருவிச்சாய்ந்தார்மேற்படராமை சாதிப்பா
ர்க்கு, வழிஞ்சபெரும்புகழ்போலவானேனுங்கிவளருமறமலியமாதோ

வழக்குகதிக் கொண்டனவுஞ் செழும்பதிக்தட்கவர்ந்தனவுமகிழுஞ
வென், ஒருகுங்கினர்சொற்றனர்தேவருணவென்கோவவையயில
வொழிவின்றுண்மை, முழங்கவொருமூவுலகுமறமாயாமுதல்வரெ
னழுந்துமார்ப்புத், தழக்குநெடுங்குரல்கேட்டுச்சார்த்நூலக்கேசரி
சஞ்சரிக்கவஞ்சும். 33

பன்றிபுல்வாயென்றினையபசுஞ்சுவையூனுகர்ந்துமதுப் பருகியாவுங்
கொன்றுதிரிகின்றவர்வெங்குடர்நிறையக்கொழுத்தவர்செய்கொடு
மைதோன்ற, முன்றிருெறுமுகின்முழங்கக்கடன்முழங்கமுடங்கு
ளைக்கோளரிமுழங்க, ஒன்றுபடும்படிமுழங்கும்பகைத்துடிசிறார்மற
வர்க்குளதோன்றன்றே. 34

ஆலையார்கரும்புசெந்தேனமுதகுயில்பூவைகிள்ளையருமைப் பிள்ளை
சோலையார்முக்கனிதீங்குழலினையசெவிப்புலத்துச்சொல்லவுண்டு
மேலையார்சுவைக்கினியதிதென்னவொரோவொன்றைவியந்து பே
சிப், பாலையாழிசைபாடிநாரதனுந்தும்புருவும்பகைதீர்ந்தாரே. 35

பஞ்சரம்போலினியதென்றின்றெனவியந்துதணிந்தது வேபயில்வ
தாக, வெஞ்சமமும்பகற்குறையாடுவதும்விரும்புவதுவேதகன்னு
லெஞ்சுவதின்றடையவுரைபொருளெனமற்றெஞ்ஞான்றுமினிது
மேகந், துஞ்சுவரைபடுவவெலாம்படவிமிர்ந்துவன்பாலுஞ்சோர்வி
ன்றின்றே. 36

வேறு.

வாணிவைத்தமறைநாவனரன்வைப்பிலெனவே
நீணிலத்துநெடுமானடுவினின்றனனவன்
காணிக்கைக்கொள்வதுகாலளவுகண்டெனவிடும்
பாணிகைக்கொள்பவனெண்ணினர்பயன்படவுமே. 37

தொடர்குறும்பொறைநனுடன்வருதோன்றல்மகிழ்தற்
கிடரில்கற்புறுகிழத்திமனையாளெனவெலாம்
படர்புகழ்க்குநிலையானவர்பசுஞ்சுடரும்வெஞ்
சுடருமொப்பர்பதிதோன்மருவுறுந்தொடர்பினே. 38

பிரமருத்திரர்களுக்கிடைமைபேசவுறுவோன்
வரவடுத்திடையராய்ச்சியரெனற்குவழுவா
வுரமிகுத்துமழைமாலையெனவோதுபொழுதா
தரமனைத்துமுறுவோர்நலன்வழுத்துதகவே. 39

ஞானவாரணமழைத்துநெடுநாளளவுருன்
மானவாரணமழைக்கவருவான்வரல்விளர்ப்
பானவாரணமழைப்புறுகடற்கனையவரங்
கானவாரணமழைப்பதுமிகக்கருதியே. 40

மான்முயற்குமதியேயிடமெனச்சொலவலோர்
நான்முகற்குமிருக்குமிலனல்கியவெலாஞ்
சான்முதற்கெனவுரைப்பதுதனித்தனியவா
மேன்முகிற்குவிழைமென்மயிலெனக்குலவியே. 41

நீடிநாளுமுயல்கின்றவர்நெடும்பணியெலா
நாடிநீர்புலர்நறும்புகைதரும்பொழுதினே
கூடியாடுகுரவைக்குழலிசைப்புகொளுவிப்
பாடியாடுதல்பயின்றதுதினம்பாடியே. 42

கூறுபாய்வதுகுறுஞ்சுனைகுளிர்ந்துவருகான்
யாறுபாய்வதயலுங்குளிரவெம்மையகல
நீறுபாய்வதுநனெற்றியெனநீள்நிறுவிச்
சாறுபாய்வதுதனக்கமுதுதந்துதவவே 43

குல்லைமுல்லையிவைகொல்லைகளெல்லாம்வளர்வகண்
டில்லையெல்லையென்வேன்றுநிறைதோன்றிநிறமங்
கொல்லையல்லையும்வெறுட்டியுறவோர்க்குபிடவம்
நல்லையல்லையெனநாறமயினன்கலர்வவே. 44

காசைகண்மலரமாலைநிறைகொன்றைகவின
வாசம்வீசுறகுருந்துகண்முருந்துமலிவ
நேசம்வீசவெதிர்நிற்பதுதெரிந்துநினைவிற்
கூசமூசுவகொடுப்பவிலைகொள்குறியினே, 45

தாறுலாய்க்கதிர்கொள்சாமைவரகென்பதருநன்
சோறுலாய்முதிரைநெய்யிடைசொரிந்துதயிரிற்
சேறுவாய்தருசெழுங்கருணைதின்றுழுகர
வீறுவாய்வதுவிளம்புமளவோவினைவிலே. 46

ஏற்றுவெம்பறைமுழங்கவதிலேழ்கடல்களுந்
தோற்றுநின்றுநரைகண்டிலதுயர்க்கெனுமதே
காற்றுறுந்திரைபுலம்புதல்கலங்குறுதலே
போற்றுறுங்குயின்முழங்குதல்பொருந்துயரினே. 47

அடிபடப்பொறைகொளாமுகிலுமன்புசெறிவிற்
றடிபடப்பிறழ்வமுல்லைவிரைதங்குதனியாழ்
நொடிபடத்துவளிடைச்சியர்நகைக்கமலருங்
கொடிபடப்பொலிவுகொண்டுகுழுமிக்குலவுமே. 48

பாரிலேதுங்கராதபரனும்பயிலுசா
தாரிபாடிவரகுக்குநிகர்சாமைதகவித்
தேரிலாயகளைகட்டரிதல்செய்திகல்கடா
நேரிலாகவிடுதெந்துநிறைகொள்வர்நெடிதே. 49

கொன்றைவேய்ங்குழல்குறித்தெருமைகோதுரவையர்
மென்றமூவினமும்மேய்த்துவிறலேய்வதுதெரிப்
பொன்றுசேவினமணைந்துகுரவைக்குரலுராய்
நின்றுகான்விரவுநன்னதிதுளைந்திறுபவே. 50

வேறு.

மந்திரமறையவர்முதல்வருணந்தோ
றுந்திரநிலைபெறவந்தனையுறவே
சந்திரநிகர்முகசுந்தரிதழுவ
விந்திரனியல்வதுமுந்துறவெளிதே. 51

கற்புறுமனைவிகிழத்திகலத்தற்
பொற்பமுமகிழ்வுபொருந்துநலூரன்
கற்பதுகல்விகரப்பதுலோபம்
நிற்பதுநீதிநினைப்பெழின்மாலே. 52

உழவருழத்தியரொப்பவுவப்பப்
பழையர்களைப்பருகிப்பயில்காம

விழவுதொடக்குதல்விண்ணவர்காண
நுழைகரிமைப்பறநுகர்சுவைகொண்டே. 53

அன்னமகன்றில்வண்டானநாரை
முன்னுகுரண்டமுதற்செறிகம்புள்
இன்னவளப்பிலவெய்துவவெளிசர்
துன்னவமைப்பர்சுலாவுவதென்ன. 54

எருமைகுதிப்பவுளிரைதெரிகீர்நாய்
வருமுனெதிர்ப்புறுவாளையைவவ்வக்
குருகுகினைத்தல்கொளாதுறுபோதா
வெருவுதல்கண்டும்விடாததுதாரா 55

மன்னர்பெருந்திறைவவ்வலிதொன்றே
நன்னர்தருந்தருமென்னுநலஞ்சார்
கன்னல்வளர்ந்ததுகண்டிதுபேரு
ரென்னவிளங்குவதெங்கணுமூதூர். 56

யாறுமனைக்கிணறேரிசிரப்பும்
பேறுபுயற்புனல்பெய்வதுகொண்டோ
வீறுகடற்கிறைவிட்டதின்விஞ்சி
யூறுதிறத்திலுலப்பிலகொண்டே. 57

செங்கழுநீர்செருகிக்குழல்சேர
அங்கலர்குவளைதமஞ்செவிமீதே
கொங்கலர்தாமரைகொள்வர்கையென்னிற்
றங்களமேதுதரிப்பவியப்பே. 58

காஞ்சியையஞ்சிகலந்துறமருவும்
பூஞ்சினைமருதெழில்கண்டுபுகுந்து
நீஞ்சியகிருதிகெடுங்கரநீட்டி
வாய்ஞ்சிகழ்சீதையைவவ்வுதன்மானும். 59

தேனினுமினிமைசெழிப்பனசெந்நெல்
மீனினுமமுதினுமிளிர்சுவைவெண்ணெல்
வானினுமுயரவளர்ந்துதவுஞ்சோ
றூனினுமேய்வதினுங்குயர்வாமே. 60

நெற்கதிர்சடனிகழ்த்துறுகிணைமன்
றற்கதிர்முழவமதிர்ப்புறுதோறும்
அற்கதிர்கொடியினமாவதுகலிவா
னிற்கதிர்தோய்மலரேதிருவென்ப. 61

யாழ்மருதப்பணோடாமையகட்டுச்
சூழ்கிணைமுழவுதுளங்கவிழாக்கோள்
வாழ்வுவகுத்துவயற்களைகட்டுப்
போழ்வர்தெழிப்பர்பொரும்பகடுய்த்தே. 62

ஓடுநெடும்புனலூறுபுனலாடற்
ஈடுதருந்திருவெய்தினரென்றே
நீடுசெழுந்திருநின்மலரென்றே
கூடுறுநீர்பெருகுங்குறிகொண்டே. 63

வேறு.

கருணனைமுதலகண்டகரென்கங்குலுக்
கருணனைமிதிலைவந்தவளுக்கன்புகூர்
தருணனையனைவழிதரற்குத்தாழ்த்திய
வருணனைவருணன்வழுத்துநீரதே. 64

விரிதிரைப்புலம்பன்விண்ணவர்தம்வேந்தனும்
பரிவுறும்பரத்திதன்பருமவல்குலாய்த்
தெரிதருசுனையிடைத்திளைப்புச்சேர்கலான்
பெரிதுபெண்குறியுடல்பிறங்கரணியே. 65

மணிகொணர்கடலர்தம்வலைச்சியர்க்குமே
லணிவுறவிலைவையினலைத்தூற்றின
பணிவிலபதரெனப்படல்பதிந்துமீத்
திணிவனதாரகைதெரிவவென்பவே. 66

விலையறும்பொன்னெனவிளங்குமேருமா
மலைதனதொளிபெறுவதுவுமாட்சியோ
தலையுறன்மாட்சிவேறுறவுந்தக்கதென்
றலைகடற்காக்கைகள்கரைவவங்கெலாம். 67

சிறூர்க்கருள்செய்ற்குமால்சிறந்துளோரென
பெருப்பயன்கடவுளர்பெறத்தந்தார்கடல்

இருத்திறவினதிதென்றியவேகொலோ
சுருக்கொடிதாங்கினன்சுரும்புநாணினன். 68

மட்டிலாமணியும்வெண்மணியுமின்னலான்
முட்டிலாக்கதிர்மதிமுயங்குமூரெனக்
கிட்டினர்க்கியாவுநேர்கிடைப்பக்கேழ்கிளர்
பட்டினம்பாக்கமென்றியம்பப்பட்டவே. 69

வாணியைநாவகல்கென்றுவந்தயன்
காணியசுவைபெறீஇக்காமன்வில்லென
நாணியல்கன்னலினிரதநாறுநீர்க்
கேணிகளளவிலகிடைப்பகிள்ளவே. 70

நெய்தல்முண்டகமணநிரம்புகண்டகக்
கைதைகளடம்பொடுகடிபரப்பவோ
பெய்துறுதுளிகளும்பயிரும்பெட்புற
மைதவழ்கடல்களும்வாசம்வீசுமே. 71

கண்டலும்புன்னையுங்கடிசெய்ஞாழலும்
வண்டிமிர்தரமலர்வயங்கிநிற்பன
வெண்டிரைமுழக்கினைவெருவியேகொலோ
பெண்டிர்களிரங்கல்கண்டேபிதற்றவோ. 72

புலவுமீனுப்புவிற்றுறும்பல்பொன்கொளீஇ
நிலவுபல்பண்டமுநிரம்பப்பெற்றனர்
குலவியசுவைகள்கூட்டுண்டகொள்கையோ
நலனுகர்தேவர்கீழ்நணுகவஞ்சலே. 73

ஆர்ப்புறுமுகிற்கடங்குவதன்றங்குமின்
கோட்பறைவேற்றுமைகுறிப்பதன்றுநா
வாய்ப்பயில்பம்பையுநரலையோதையும்
தாய்ப்புகுந்தண்டமுந்தகரத்தாக்குமே. 74

விளரியாழ்செவ்வழிவிரும்பிவெண்ணிற
முளரியாள்விளர்ப்புடன்முழுதுங்கொண்டதே
தளர்வெனுவிசைவலோர்தாலமேவியே
வளர்தலால்யாவரும்வாணியென்பரே. 75

உப்பொடுமீன்படுத்தணக்குமின்கொள
மொய்ப்புறுபறவைகளோப்பிமுந்துவார்
எப்பொருள்களுங்குறைவிலையென்றெய்துவார்
தப்புறிற்குறையெனச்சலதிமூழ்குவார். 76

வேறு.

களிறபடுக்குங்குராலுரப்புங்கழனிப்பகட்டைக்கன்றறக்கும்
விளிவின்றெழுசெவ்வழிதுடிக்காய்மீன்கொள்பறவைகளைவிலக்கும்
தெளிவண்டிசைசெந்தினைகாக்குந்திகழ்சாதாரித்தேன்றுளிக்கும்
புளிஞர்நிலத்துவெதுப்பகன்றுபோகப்போகம்பொதிவுகொண்டே

மீள்ளர்முழக்கோபறைமுழக்கோவலிந்துபொருவாரணமுழக்கோ
வெள்ளமுழக்கோவிழாமுழக்கோவேள்விமுழக்கோவியன்றகர்தாக்
கெள்ளின்முழக்கோசிவன்முழக்கோவிகல்கேசரிமாசார்த்துலக்
கொள்ளைமுழக்கோகுலைமுழக்கோ குறைந்ததழுவெங்குரன்முழ
க்கே. 78

காந்தள்கதுவப்பொன்னவிழ்க்குங்கருங்கோடுறுகன்னிப்புன்னை
பூந்தண்மலர்தாழ்பொலன்கொன்றைப்பொதுப்பெண்டிரைப்போ
ற்பொலிந்தங்கு, நேர்ந்ததளவமகிழுமலர்நிறைந்தசோகம்விளக்கே
ந்தும், வாய்ந்தபுலகண்கொடுகோணுமரம்பார்ப்பனபோன்மயிலிரு
ந்தே. 79

ஆடுமயில்போலகமகிழாதடங்குங்குயிலுக்கையோவென்
றீடுபடுமன்றிலைக்கண்டங்கென்னென்றிரங்குமெழிலிபொழி
லூடுபடுபூங்கொடிதளொல்கவுறைவண்டினங்களுகந்தினிசை
யாடுங்கிளிவாய்மொழிகேட்டும்பயிற்றும்பூவைபாங்கெங்கும். 80

மலையிலுறங்குமழைமுரம்பின்மதமாவுறங்குமலையின்முழைத்
தலையிலுறங்கும்வயமாமாதவிக்கீழுறங்குங்களிமஞ்ஞை
அலையிலுறங்குங்குருகினஞ்சங்கலர்மேலுறங்குமகன்றுறுநீர்
நிலையிலுறங்குஞ்சினையாமைநிழல்கண்டுறங்குங்கருமேதி. 81

மணிவெம்பரலேமணல்பொன்னேவருநீரமுதேமரமெல்லாம்
திணிவிண்டருவேசாலையெல்லாந்தெங்கேகமுகேசெழுங்கரும்பே
பணிதண்குளம்பானெடுங்கடலேபவளஞ்செறிந்துபடர்கொடியே
தணிபுங்கதவிக்கிடைகருப்பஞ்சாறேசேறேசெருங்கட்டி. 82

கமலமடவார்பதிமுகத்தைக்கண்டுகுவியவரக்காம்பல்
விமலமுறலைநறுநீலம்விழித்துநோக்கும்வியன்குளத்தில்
அமலங்குவளைபுலம்பவஞ்சாதாரல்புகுத்துமதன்மூக்கிற்
குமலங்குதவின்றுறவடைக்குங்கொழுத்தவரால்வாளையுங்குதிக்கும்

சங்குதவழுங்கடற்றவழ்ந்துதருமாகலத்துத்தமனியத்தின்
பொங்குதவழுஞ்சகடெதிர்ந்துபோதப்பலவும்பொலிசகடு
பங்குதவழும்படிதவழப்பதைத்துநெளிந்துபணச்சேடன்
கொங்குதவழுங்குழலார்தங்குறிபோன்மறைந்தான்குவலயத்தே.

சேடன்றலையிற்சுமையடைபோற்றிகழ்பார்தனிலேசிறப்பவொற்
றை, மாடன்பதியுப்பெனமலிந்துவழங்கநறியகருப்பூரம்
நீடன்பினருக்கினியதெனநெடுமால்பதியுமுளதெரியா
மூடனுணரான்புலவனெனுமொழிந்தானேலுமுதலென்றே. 85

* சிவனேர்பதிகள்பலவாகத்திருமால்பதிகள்சிலவாகல்
எவனேயென்னிலறிவுடையோர்சிலரோபலரோவெனுமாறு
செவனேகாட்டுமவைசேர்ந்தசெய்கைசிறுபுல்லொடுநெல்லும்
நவனேர்பெறவேவளர்கழனிகாட்டுஞ்சோழநன்னாட்டில். 86

வேறு.

பாணர்பிரான்கண்டுசொன்னபடிகாணத்திருவரங்க
நீணகரேசோணாடாநிலமகடன்றலையதணி
பூணெனுஞ்சூடாமணியேபோல்விளங்கப்புயங்கமிசை
யாணர்மணிபடிந்துளதியான்வழுத்துந்தரத்தேயோ. 87

கலக்காமலுயிர்களுள்ளங்காலடங்குங்கணக்கதென
நிலக்காவல்செயமுடிவினிறையமருவியவுறையூர்
வலக்காதின்மேலணியுமணிக்குழையின்மணவாளன்
செலக்காணத்திருவிளங்கித்திகழ்ந்துசிறந்துளதன்றே. 88

கரையாதமனங்கரையக்காதணிபொன்னூசனறு
விரையாரும்பூஞ்சோலைவிரவிநெடுந்திசையளப்பத்
தரையாவும்பெறுமரசர்தருமநிறைதயையினொடு
வரையாதுகொடைவழங்கிமருவுதஞ்சைமாமணியே. 89

அன்பிலிடக்காதணியவாடுறுபொன்னூசலென
இன்புசெய்துவிளங்கொருவற்கெதிருண்டோசதுராக

முன்புகழ்த்தியவணிகண்முறைபிறழவிளங்குவது
தன்பெருமைதனக்குநிகர்தானலதியாதுளதே. 90

முத்தநிரைத்திரைவீசமுளைத்தமுழுக்கதிர்சாய்க்க
வித்தமிடுகென்விலைக்குவிளங்குமணற்குவைகிடப்ப
வுத்தமனென்றுலகோதவோங்குதிருக்கரம்பனூர்
நித்தமணிக்குழைமீதுநிமிர்செவியினிலவுவதே. 91

உரமேவுசெழுங்கமலைக்குள்ளறைநேர்வெள்ளறைமேல்
வரமேவவருள்செழித்துவழிகமலமலர்விழியோன்
சிரமேவச்செருகுநறுஞ்செண்பகப்பூஞ்செண்டெனநூ
புரமேவுகுரலெனவெண்புள்ளலம்பப்பொலிவுறுமே. 92

நீண்டுவழிந்தொழுகநிழனிலவுதிருநெற்றியின்மேற்
பூண்டமணிச்சுட்டியெனப்புள்ளம்பூதங்குடிவா
ழாண்டவனைக்காண்டல்செயயார்க்குமனத்தார்வமுற
வேண்டுவதேபோனோக்கவேண்டுவதும்வியப்பேயோ. 93

சிட்டர்பலர்தொழுதேத்தத்திருவிளங்கச்சிறந்ததுதற்
பட்டமெனக்கோயிலடிப்பரமன்விளங்குதனோக்கி
லிட்டநிறைந்துறநாளுமெழிலொடுசம்பத்துமிகும்
துட்டவினைதொடராதுதூய்மைகனிதொடர்வுறுமே. 94

உலகநிறைந்திருவர்தமக்கொருதனிநாயகனென்று
குலவுமறைகுதித்தாடக்கோதறுசெந்தமிழ்பாட
நிலவுதிருப்புருவநடுநிமிரவொளிர்நெற்றிமிசைத்
திலகமெனத்திருவாதனூர்விளங்குந்திருமாலே. 95

வெருவருவெங்கலிதிரவியன்கவியன்றமிழ்விரும்பி
ஒருவருமங்கழைப்பதிலரெனக்கோழியுணர்த்துகுரல்
மருவமதவாரணத்தின்வழுத்துகுரலெனமயங்கிப்
புருவவுருவெனமருவுந்திருவழுந்தூர்ப்புண்ணியனே. 96

சுற்றுநெடுநேமியொலிதுவைப்பமுழவெனமயில்கள்
முற்றுநடங்காட்டமுயல்முகிழ்நகைநல்லார்வியப்ப
மற்றுமொருபுருவவடிவெனவயங்குஞ்சிறுபுலியூர்
பற்றுநெடுமால்கமலபதங்காணார்பதங்காணார். 97

ஒண்மணியொன்பானெனவுற்றுளபயிரெல்லார்ந்தழைப்ப
விண்மணியும்பெறற்கரியவியன்கதிர்ச்சிந்தாமணிபோற்
பெண்மணியொன்றகலவரைபிறங்குவரைசெறிதளவோன்
கண்மணிபோல்வளர்சேறைகலந்துறுவன்காதலித்தே. 98

மலைச்சங்கராகமெங்குமணப்பதுகொண்டொருமுனிவன்
முலைச்சங்கம்பெறப்புரியமொழிந்ததுணர்முதுமறையோர்
நிலைச்சங்கமிதுவெனநன்னிதிபெருகவொருநெடியோன்
தலைச்சங்கநாண்மதியந்தழைப்பதுங்கண்மணியெனவே. 99

அடந்தையொடுநடந்தைவனத்தழகுகண்டுசனகபிரான்
மடந்தையொடுகாடுறைந்தவருத்தமகன்றுறுமெனவோ
இடந்தையெனத்தமிழ்வழங்குகேழ்கிளரவிளங்குதிருக்
குடந்தைதிருமூக்கெனவுங்குருமணியொன்றுளதன்றே. 100

சேய்மதுரமொழிவினவித்தினமுமகிழ்வுறுகின்ற
தாய்மதுரயாழ்விரும்பாத்தகுதியெனத்தமிழ்க்கவியன்
ஆய்மதுரகவிவிரும்பியலதுவிரும்பார்நிரம்ப
வாய்மதுரந்திருக்கண்டியூருறுமாலெனவயங்கும். 101

பண்ணவருமுனிவரும்பயில்வேதபாரகரும்
கண்ணகன்றதிருநாட்டிற்கதித்தோங்குபலகுடியும்
சுண்ணமெழநிரம்புதலாற்றூயநகைமகிழ்வனைய
விண்ணகரேமண்ணகரின்மிருந்ததெனவிளங்குறுமால். 102

தண்ணவிறைபுயன்மறைக்கச்சவியடங்கிற்றெனக்கதிரின்
வண்ணமறைதரக்கலந்துமகிழ்நர்புயத்தணிந்துதிர்ந்த
சுண்ணமெழக்கமுகுவிடுசுருளலர்ந்துதொடைத்தகற்றுங்
கண்ணபுரத்தடிகளையேகருதுமுகக்கவினென்ப. 103

சூலின்முதிர்மழைதுளிக்கத்தொளைக்கநெடுங்கதிர்ச்சாலி
வேலிவிளைகரும்புவிண்ணின்மேய்பசுச்செருத்தல்பொரும்
ஆலிநகரேகழுத்தங்கதிலுறைவோனேயணிந்த
தாலியெனத்தவந்தானந்தருமநின்றதகவுறுமே. 104

நாளணியுந்திருவிழவுநடத்துபெருங்கம்பலையால்
வேளணியுங்கொடிகடவிழ்ப்பிவருவபெருமீன்குதிக்கும்

கோளணியுங்குளம்பெருகக்குளிர்வரைத்தேன்குலைகலைக்கும்
தோளணியிற்றிருநறையூர்ச்சுடர்க்கொழுந்துதுலங்குறுமே. 105

செந்திருவாழ்மணிமார்பன்றிருவடியேசரணெனக்கொண்
டந்திதொழுந்திருமறையோரரவநெடுங்களிவிளைக்க
வுந்திபுகுந்தடத்திலனமுறவொருதோளணிபோலு
நந்திபுரவிண்ணகரநனுகுறுநாராயணனே. 106

அணிக்களந்துந்துகிற்களந்தும்கன்றுமிகச்சுவைசெய்கன்னற்
றுணிக்கனுக்கச்சிறுமியர்க்குத்தொகுநிதிக்குத்தொலைகயுளவோ
மணிக்கடகமுன்கைநிகர்மாலதிந்தளூர்மருவிக்
கணிக்கவலமதிநலத்தார்கவின்மதிக்குங்கருத்தினரே. 107

சத்திரநேர்த்துணைவறியார்தாழ்வுவரிற்றாழ்வதின்றி
மித்திரநேயரில்விரும்பிவிளைந்தழைத்துவிருந்துசெய்யும்
பத்திரமேமிகுந்துமற்றும்பயிலுமணிக்கரம்போன்மால்
சித்திரகூடமுந்திகழ்ந்துதிருவளித்துச்சிறந்துளதே. 108

கொண்டபெயில்குணமுளருங்குறியோகநலமுளரும்
தண்டுதவின்றமைதிபெறத்தகுமனைகடழைத்தோங்க
வண்டுதிரிகமலமலர்வாவியொடுமலர்க்கரம்போல்
விண்டுவுறைசீராமவிண்ணகரும்விளங்கல்செய்யும். 109

நருக்கூடுகெழிப்பதெனக்கழித்தெடுத்தமணிக்குவையி
னெருக்கூடுகுவித்தநெல்விளைநிறைவுநிகர்நோக்குமகிழ்
நருக்கூடுமணிமுலைநல்லாரொடின்னுநவில்கரம்போற்
றிருக்கூடலூருமொருதிலசமருவச்சிறந்துளதே. 110

கொடியநடம்புரியமன்னர்குலநெருங்கிக்குறுகநெடு
முடியுமுடியொடுபொருந்தமுத்தொடுபொன்மணியுதிர்ந்து
படியுமணிவிரல்களெனப்பதிமனைகணெருங்குகண்ணன்
குடியும்விளங்குறுகுறைவில்குடிகளளவிலநெடிதே. 111

கள்ளவிழுங்குழலில்வண்டுகனிந்துணாக்குங்காமரத்திற்
றில்லைபெண்களொடுதுயிலக்கிளர்ந்துசெல்வநிறைந்துயர்ந்து
வெள்ளியவெண்சுதைதீற்றவிளங்குநிரைமிளிர்மாட
வெள்ளொளியாற்கண்ணமங்கையுநிர்களெனவுறுமொருசார்,

பொங்குநதிபெருகவயல்புதுக்கணிக்கப்பொருவானை
எங்குநிமிர்ந்தெழுவதனுக்கிரியலொடுமிணைக்கொங்கைச்
செங்குலிகச்செப்பனையார்திரள்வெருவமற்றொருகை
அங்குலிகவெனவிளங்குமரவணையான்கவித்தலமே. 113

வேறு.

புள்ளியம்பறவிறையொடுபொருந்துமாளிகையும்
தள்ளில்வெண்ணிறக்கொடிகளுந்தழைந்துமீத்தவழ்ந்து
கொள்ளைவெண்ணிலாக்குளிர்வபோலெங்கணுங்குலவ
வெள்ளியங்குடிதானும்வெள்ளுகிறெனவிளங்கும். 114

வாயில்வந்துறுமனங்களிப்புடனன்புமருவத்
தாயிலும்பெருந்தண்ணளிகொண்டவன்றயங்க
ஞாயில்கொண்டுயரெயில்செறிநலமணிமாடக்
கோயிலுந்தனக்குவைநிகர்குறிநனிகொள்ளும். 115

மண்களிக்கவும்வானகங்களிக்கவுமலர்மேற்
பெண்களிக்கவும்பெருகியசிறப்பதுபேசில்
எண்களிப்புளவரனரணிந்திரன்முதலோர்
கண்களொப்பவன்களிக்கும்வைகுந்தவிண்ணகரம் 116

நந்தையாழியொடேந்தியகரங்கொண்டநம்பன்
முந்தையோரெனமொழிபவர்தமக்கெலாமுதல்வன்
தந்தையாயவனுறைதலினுதரத்தைச்சாலும்
விந்தைமேயதுதிருவரிமேயவிண்ணகரம். 117

ஆமின்றொண்டெனவறைவதுபோன்முழவதிரத்
தூமின்விண்ணிடைதுடிப்பதுபோலிடைதுவள
நாமின்பெய்துறநாரியர்நடிப்பதுநாளும்
தோமினன்மணிச்சுடர்திருத்தேவனார்தொகையே. 118

தழுவக்கொங்கைகள்பரந்தருமிடைக்கெனச்சாற்றும்
பழியைக்கொள்வதல்லாலொருபழியுமில்பண்பாம்
வழியைக்கொண்டுயிர்வண்புருடோத்தமம்வழுவா
எழிலுக்கும்வணாயிட்டெனவிளங்குவதென்றும். 119

செயிலெலாஞ்செயுஞ்சீதரன்மூர்த்தியைத்தெரிய
வயிலெலாம்வரைசித்திரநிறத்தொளியெய்த

மயிலெல்லாங்களிநடஞ்செயமர்க்கனிச்சோலைக்
குயிலெல்லாந்துயில்மருங்கரோசெம்பொன்செய்கோயில். 120

வெற்றியெங்கணும்விளம்புறவீரத்தைவிளைக்கக்
கற்றறிந்தவர்க்கென்குறைகாமனுங்கலங்கிப்
பற்றநின்றவன்பதம்புனையாரொடுபயில்வெண்
றெற்றியம்பலிஞ்சேர்ந்துளதுங்கியிற்றிகழ்ந்து. 121

நட்டசெங்கெலங்கழனியுநளினியுநதியுங்
கிட்டவன்பினர்கிளைகள்சுற்றெங்கணுங்கெழுமி
உட்டதும்புறத்திருமணிக்கூடத்தையுமெத்தப்
புட்டதென்றனர்பன்மலர்மேகலைபடிய. 122

இச்சையொத்துறவெழுதருமேனிகொண்டெழுந்து
செச்சையொத்துறத்திகழகலத்திடஞ்செறிந்து
பச்சையொத்துயர்வரையினையுள்ளுறப்பதித்த
கச்சையொத்துயர்கர்வளம்பாடியுங்கவினும். 123

பொய்த்தமாந்தரில்லாததுபுகழ்புரிந்துளது
நித்தநான்மறைமுழக்கமேகிமிர்ந்ததுநினைவரல்
மெய்த்தயோகியர்மெய்யுணர்வொளியெனவிளங்கும்
உத்தரீயமேதிருவெள்ளக்குளமெனவுறழும். 124

பார்த்தன்பள்ளியொண்பதக்கநன்மணிவடப்பண்பிற்
சேர்த்தறிந்தவர்செப்புவரணியெனத்திகழ்வோன்
தீர்த்தனென்பதுதெரிந்ததேயாயினுஞ்சிறந்து
கூர்த்தவன்பினர்குறைவுறுநலத்ததுகொண்டே. 125

விண்புகழ்ந்ததுமுளதெனக்களிவண்டுவிரும்பிப்
பண்பகர்ந்திடக்கூந்தன்மேற்பரிபுரம்படித்தல்
மண்புகழ்ந்ததென்றுரைசெயமேனியாய்வழங்கச் 126
சண்பகஞ்செறிபொழிலுமங்கொருபுடைதயங்கும்.

இன்னதாமெனவெழில்சிலவொருபடிவியம்ப
மன்னலாகியநாடெனுந்திருவுறுமடந்தை
தன்னதாருயிர்த்தலமெனத்தக்கதார்ந்தகுதி
நன்னர்மேயதுநாங்கமற்றதனெழினவில்வாம். 127

நாட்டணி முற்றிற்று. ஆ விருத்தம் 191.

## நகரணி.

### வேறு.

போக்குச்செற்றபுலவர்பல்லாண்டொலி
வாக்குக்கொக்கமறைமுழங்காநிற்கப்
பாக்குச்செற்றினிதாடுறும்பாலர்க்கு
நாக்குநற்றமிழ்பாடுநன்னாகையே. 1

வெல்வங்கல்வியின்விஞ்சினம்யாமெனுஞ்
சொல்வந்தெய்தச்சுடர்தூண்டுகோலென
வல்வர்தாலவியாதுவழங்குமா
செல்வமல்கித்திகழுந்தென்னாகையே. 2

பூணிற்கம்புலிதங்களப்பொட்டென
வாணிற்கத்திகழ்வண்கடன்மாநிலஞ்
சாணிற்கஞ்சுதமனியப்பொன்பெறும்
மாணிக்கத்தின்மயத்ததென்னாகையே. 3

பாசமாமடியார்த்திறம்பாலிக்கும்
நேசநீலநெடுமணிநீள்சுடர்
வாசமாருதம்போலவயினெலாம்
வீசநாளும்விளங்குந்தென்னாகையே. 4

பஞ்சமோடப்பலிக்கப்பயிர்வளந்
தஞ்சமோடத்தழைக்கத்தமிழ்நலம்
அஞ்சமோடவிடுத்துநல்லன்பர்பால்
நெஞ்சமோடநிலவுந்தென்னாகையே. 5

நொக்கெலாங்குலையக்கொடுங்கூர்நகந்
தொக்கெலார்தொலைதண்டப்புள்ளோனளி
நக்கெலாநகருக்குமென்றநலந்
திக்கெலாம்புகழ்தின்னுந்தென்னாகையே. 6

எனையமாடெதிர்ந்தாலுநன்கின்புற
அனையவாடையலம்புதண்சீகர
முனையமல்லிகைமுல்லைமணமுகம்
கனைநறும்பொழினாறுந்தென்னாகையே. 7

வல்லதென்னவழிங்குமுலகெலாஞ்
சொல்லவல்லசுரருந்துனைதலால்
வெல்லநீரடிமேவியநீரென
நல்லீர்நளினிக்குநன்னாகையே. 8

சிரணங்குநிரம்புசெழும்பதி
வாரணந்தொனிமங்கலவண்பதி
காரணம்பலகாண்கனகப்பதி
நாரணன்பதியானநன்னாகையே. 9

வெம்புவெந்துயர்வீழவிடுக்குமூர்
அம்புராசியகழியினயலூர்
பம்புபுண்ணியம்பல்கவிளங்குமூர்
நம்புமெய்ப்பலனுந்தருநாகையே. 10

வேறு.

நாண்முதலநான்குநெடுகல்லரணெனக்கொண்
டாண்முதலையேயதரமானதிருநாகை
நீண்முதலைநீரரணெடுங்கடனினைப்பிற்
கோண்முதலைநீளுவதுகொள்வதுகுறித்தே. 11

யானையுநமேகமெனவெண்ணியதிலேய்வன்
மீனையயமேய்பொழுதுவிண்கொடுவிளக்க
வானைமகரம்பொரவியவல்லதெனமாற்றுர்
சேனைகணெருங்கவிடர்செய்வதுசிறந்தே. 12

நீலம்விழியாம்பன்மலர்வாய்குழன்மைநெய்தல்
கோலவிதழ்செங்கிடைகுளிர்ந்தவரவிந்த
சாலமுகமங்கையடிதங்கவலைதன்னால்
ஓலமிடவள்ளைசெவியொப்பவகழோங்கும். 13

கோகமெழவன்னமலர்குந்துதல்விடக்கங்
காகமுழுகப்பெரிதுகம்புள்வெருவச்சூழ்
நாகநிகழப்பரிவினந்துழாடுங்கா
வேகநிகழக்கரவுவீசுவனவெவ்வால். 14

வேலினெழுகெண்டையைவிகங்கமுகவாவாள்
போலியலுவாளைகிளர்போதறியுமென்னுக்

காவிரியமாமைகிடுகிற்கடுகல்கண்டோர்
பாவிரிவமுட்டியிடிபட்டுருளுநீர்நாய். 15

போனதுதெரிந்திலர்கிலச்சுமைபொறுத்தங்
கூனமிலனென்பூரகழாழமதினுட்போய்
நானறிவனென்றுமுனைநண்ணுமொருசேடன்
ஆனவனெழுந்திலனழுந்தினனொழிந்தான். 16

வற்றுறவிடுத்தவழிவார்புனலைவையஞ்
சுற்றுகடலென்றறிஞர்சொல்லுவர்தெரிந்தால்
முற்றுறுசுரப்பொடுமுழங்குதிரைமுந்திப்
பற்றுவதிலாயதுபகீரதியுமேலே 17

அன்னவகழிக்குமதிலுக்குமிடையாகத்
துன்னுபடிகத்தலமிமைப்புறுசுடர்க்குட்
பொன்னுருகவைப்பியதுபொற்பமணிபொத்தப்
பின்னுசுடராலிருள்பெயர்ந்துறைவபெட்பின். 18

சூழவமைபொற்புறுசுடர்ப்படியின்முத்தம்
தாழவலைவீசுவதுதன்னிலுறுபோதா
வாழவிடுமுட்டையெனவந்தடைகிடப்ப
கேழலைதுயிற்றவெழுகிற்கிலகிளர்ந்தே. 19

சேவலொடுசிறைபெடைநீவிழலெனச்செம்
பூவலருறப்பொலிபுனற்செறிவுநீலத்
தோவலறுநச்சைமுனுடற்றுநாவெல்லக்
காவல்புரியானையிடைகட்டியதுபோலும். 20

ஆயுதமெனைத்துளவனைத்துமிடலங்கைக்
கேயபொறிபற்பலவிமைப்பனமதிற்கண்
மேயினர்முடித்தலையறுத்தரன்வியப்பத்
தூயினகழுத்தணிவதொங்கலெனவங்கே, 21

அன்னதுதெரிந்தனரதன்றனரதன்றேல்
இன்னல்செயவந்துறுவரென்பதுதெரிந்தோ
பன்னுதிறல்கொண்டபொறிபற்பலவுமங்கே
நன்னருறுகின்றனநலந்தெரிதரற்கே. 22

நால்வகைபதாதிகளுநண்ணியமர்கின்ற
போல்வனவமைந்தபொறிபொங்குமதில்விண்ணின்
மேல்வளர்பிதாமகன்விரும்பினன்வியப்பக்
கால்வினமணிச்சுடர்விளக்கொளிகடுப்ப. 23

அன்றயனளித்தவுயிரத்தனையுமாரா
ஒன்றமுனிராப்பியதையுய்த்துணர்தியென்றே
நின்றநெடுநீளிலைகண்டுநனிநீளா
நின்றுமவனெய்தினனிதாரறிகிலாரே. 24

வட்டமதிலும்புனல்வளாகமும்வரைப்புங்
கிட்டவொருநாலுதிசையுங்கெழுமுகித்த
விட்டநெடுவாயின்மிசைவிண்டுவும்விரும்பப்
பட்டபறவைக்கிறைபறப்பதிலைபண்டே. 25

ஆரையுயரத்தையறியாரமரர்வாயில்
நேரைநினைவுற்றிலனெடுந்திசைமுகத்தோன்
சீரைமுதுகிற்சுமைசெயுந்திறல்கொளாமை
வேரைவிடிலேதுபொறைமேலுறவிரும்பும். 26

பொன்னின்ஞெளிமேன்மணிபொழிந்தனபொருந்தத்
துன்னுசுடரால்விழிதுளங்கியசுடர்க்கோன்
முன்னருறுசாரதிமுகிழ்த்துமுடமானான்
தன்னடிபிழைத்துறுதலாவதுதகர்த்தே. 27

மதிகதிரிடத்துறுதல்வவ்வொளிவழங்கிக்
கதிரிகர்துன்ஞெளிகலந்துவெளியெங்கும்
பொதியிருளகற்றுதல்பொருந்தியலவோகண்
டதிசயமுறப்புரிவதங்கொடிவணெங்கும். 28

கட்புகுகணக்கில்கடைகாவலர்நெருக்கத்
தெட்புகுவதேனுமயலெண்புகுவதின்றால்
உட்புகுவமேருவுமொடுக்குதடையின்றிப்
பெட்புறுவசித்திரமிமைப்பதொடுபேச. 29

## புறநகர்.

வாழைகமுகோங்குமனைவாயில்வழியெல்லாம்
தாழைகளுநின்றுகுலைதங்கிநிமிருஞ்செய்

தாழைவழுவின்றுபுரியொளியிருபாலுந்
ஏழையகல்வீதிதெரிகிற்பதெழியாலே. 30

வீதிவகையத்தனையும்விண்ணவரெனச்சார்
நீதியனசாமரநிரப்பியனகைகள்
கோதில்பனிநீருட்டல்குளிர்ப்பவுறல்கொண்டு
மீதியலவீசுவனவீடுதவருதே. 31

யானைபரிதேரின்மிசையெய்துமெவருக்கும்
மேனிலையினின்றுவிழவீசுவதனாலே
ஊனமறுகுட்டிமமுதிர்ந்துதிமிர்சுண்ணம்
தானமிழ்வமேலெழுவதண்ணென்மறுகெங்கும். 32

பொன்னுருவமுத்துருவபூவுருவவெல்லாம்
மின்னுருவமீனுருவவில்லுருவவென்னத்
துன்னுவனவீழ்வபுவிதோயுமுனரோகால்
பின்னுவனகொண்டகல்வபெய்வனபிறங்தே. 33

திட்டையிருபாலினுமிமைக்கநிலைசேர்கா
லிட்டவழியின்மறைவெனைத்துளவனைத்தும்
கட்டியசெயற்றெரிவுகாணினுமமைக்கப்
பட்டவவட்டதிசைபற்றொருவராலும். 34

மணிவகைகளொன்பதெனவைத்ததுவழக்கன்
றணிவகையதுணைநிரையத்தனையும்பொன்
திணிவகையபோதிகைசெறிந்தனதுலாமேல்
பணிவகைகள்கண்டளவுபற்றினர்தமக்கே. 35

பன்மலர்நிறைந்தபடுகர்க்குளமமைந்து
நன்மலர்செறிந்தபொழினுறுசிறுதென்றல்
முன்மலர்சுருங்கையொடுமுந்துமனையெல்லாம்
பொன்மலர்செய்பந்தர்மணிபொற்பநிரைநிற்ப. 36

தேர்கரிபரித்திரள்செறிப்பநிரைசேர்வ
பார்கருதுறப்புரிபல்பாடைகன்படிப்ப
ஆர்கவினிடத்தினையளந்தறிதரற்கோ
நீர்கருதுகிற்பதுநிதானனியமிப்பே. 37

சந்திரனைக்கேவத்சமைத்தணிவுதந்தோ
அந்தவமுதத்தினையளைந்தபடிகொண்டே
சுந்தரவனத்தொடுதொகுத்தமனையெல்லாம்
மந்தரகிரைப்பொலிவுவந்ததெனவைகும். 38

வேறு.

தோரணநிரைத்துக்கும்பந்தொகுத்துநீர்தோய்த்துச்சூதஞ்
சிரணங்கமையமஞ்சட்செறிதிரளரிசிசேர்த்து
நாரணன்விழவுக்கேற்றநலனெலாநிரம்பக்கொண்ட
ஆரணமறைவல்லோர்களடுத்தநல்லகங்களெல்லாம். 39

பொருளுறுகுணங்கொள்செய்கைபொதுமையொண்சிறப்புக் கூட்
டம், கருதியபாவமேழுஞ்சற்றறிந்துத்தேசித்துத்
தெருளிலக்கணமுங்கண்டுதெளிவதுந்தெரிந்தசீர்சால்
பருணிதர்மொழிகட்காயபடிகளும்பயில்வதெங்கும் 40

சந்தங்கற்றறிவதோர்பாற்றனிநடம்பயில்வதோர்பால்
முந்தவெண்ணுணர்வதோர்பான்முறையொழுக்கறிவதோர்பால்
அந்தமின்மறைகணான்குமறிவதுமங்கங்கோர்பால்
செந்தமிழுணர்வதோர்பாற்சிறந்துளதினங்களெல்லாம். 41

கேசவன்முதலநாமம்கிளர்திருவடிவுகொண்டு
வாசவண்டுளவுசெந்தாமரைமணிமாலைதாங்கிக்
கோசமுங்கொள்வார்கீண்முக்கோலொடுகுசையுங்கொள்வார்
நேசவொண்கோபிசந்தநிலவுவெண்ணீறுதோய்வார். 42

வேறு.

அரமதாயவிழியங்கனையரன்பின்விழைவோர்
தரமுலாயநிலைதங்கவொளிதாவரதகம்
பரமனானபடியன்றியிலையென்றுபயில்வோர்
பிரமயார்கநிலைபெட்புறுவகட்புலனிலே. 43

வேதமோதுதல்விடாதநிலையன்றிவிபுதர்க்
காதனுதியுபசாரவகையாவுமமையப்
போதரோமநிலைடொங்குபுகைவிண்புகுதன்மால்
பாதமீதுநிமிர்பண்பொளிர்பளிக்குமுகடே. 44

தன்னிலுற்றனவெலாமெனல்சமைக்குமுதலின்
மன்னியுற்றபடிமக்கலன்மாளிகைவிராய்

முன்னியிட்டபலிமுந்துபெறுபூதநிலையெங்
கென்னிலெற்கலமைவவீவகொளலென்றமைவவே. 45

அப்பளிக்குநிலையண்முபிதிர்யாகநிலையிற்
றர்ப்பணப்பணிதனக்கமைவதர்ப்பணமென்று
தற்பலக்குருமணிக்கமைவதுள்ளதுகொலோ
பொற்பமெய்ப்படியதெப்படியெனப்பொலிவவே. 46

மனிதருக்குணவுவைப்புநிலையிற்பொருவநே
ரினவெண்முத்தினரிசிக்குவைபருப்பெறிகறி
கனருருக்குநறுநெய்தயிர்நலம்பெருகுபால்
அனவனைத்துமனையன்னநிறமாயமைவவே. 47

நிலவுவெண்மணியினீர்பெருகநேர்முகமினார்
குலவுதம்முயிரினையகொழுநர்க்குறுகலார்
இலவின்மெல்லிதழ்சுவைத்தனையவின்புகெழுமு
நலனின்மெல்வளிநனைப்பமயிர்நட்டுறையவே. 48

மடிவிலாவிடைவருந்தநிமிர்கொங்கைவனாயா
முடிவிலாதமகிமாவிவருமுந்தினரென
அடியின்மீதலறுநூபுரமனைக்கணவர்தம்
படியையாடவர்பயின்றனர்பயன்பெறவரோ. 49

மஞ்சர்நெஞ்சுருவவல்லதயில்வான்விழிமதர்த்
தஞ்சநுண்ணிதமருங்குலெனவண்மினாயே
கெஞ்சுகின்றதுகிளப்பகிளிகேழிலரென
நெஞ்சுநைஞ்சுருகிநின்றனாநினைந்தனையவே. 50

விழைவபெற்றுநிறைவிட்டிடுகிலார்விலகொணா
அழகுகட்பொலியவாள்பவரனைத்துமருவப்
பழகல்கற்றவர்பரம்பரனெனப்பதிகளைக்
குழைவுறத்தழுவுகொம்பனையருட்குளிரவே. 51

அகககர்—வேறு.

* அடுக்குமாக்களுக்ககமகிழ்ந்தன்புமிக்கூர்
மடுக்குந்தன்மையதான்முத்தானமுமணியும்

எங்குமிரணைன்றியம்புபசாரங்களியற்றிக்
கொடுக்குமிலைகயர்ப்போன்றனகுறைவிலாவீதி. 52

* சங்கமுமணியுந்தூயதன்மையமணியும்போற்றும்
துங்கமும்பளையுமாதர்தொகுதியுந்திருவுங்காவும்
புங்கமும்பொருந்தலாலப்பொருகயலோடுநார
சிங்கமுமெடுத்தமாலைச்சிவணுவதெருக்களெல்லாம். 53

* பண்ணிலாவுறுவெண்சுதைமாளிகைப்பரப்பு
மண்ணிலாசறவந்தமாதவனடிவணங்க
விண்ணிலாவணியுருத்திரர்பலர்குடிமேவி
உண்ணிலாவுறநிறுத்தியவெண்மலையொப்ப. 54

* மிடையுற்றோங்கியவெண்ணிலாப்பளிக்குமேனிலையில்
உடையுற்றோங்கியகொடிதம்மீதுறுசெயல்சகியாக்
கடையுற்றோர்தமைக்கரத்தினாற்புடைப்பபோற்புடைப்பப்
புடையுற்றோடுவவிருசுடர்தினமலைபுகுந்து. 55

* பத்திகொண்டகங்களங்கமில்பளிங்கெனவிளங்கிச்
சுத்திகொண்டயிர்பூசைகள்தெய்வசூத்திரங்கள்
சித்திகொண்டமந்திரந்திருவாய்மொழியுறலால்
முத்திகொண்டவச்சுதனடியாரொப்பமுன்றில். 56

* வாய்ந்தசித்திரமரகதமணிபலகுயிற்றி
வேய்ந்தநீணிலாச்செய்குன்றுவிரிபசுங்கதிர்வான்
சாய்ந்தநீழலைமாலெனச்சிறியர்சற்சனர்போல்
ஓய்ந்தகோகிலமொளித்தனகளித்தனவோகரம். 57

* தெரிமலர்களத்தெரிவையர்தேகங்கைசுகத்த
கரியவார்குழற்குழையணியிடைமுலைக்கனத்த
பெரியகேத்கணுமலர்களும்பெருகியகள்ள
உரியமாமுகிலோடையாயுதங்களுமுறைய. 58

* சம்பராசுரன்றனைவென்றோன்றனைவென்றவெழிலார்
செம்பராகநற்றெரியலர்கரந்தெரியலர்க்கேற்
றம்பரமவருகைத்தலால்வாய்க்கரமணியார்
வெம்பராகவாம்பரிநிரைவரய்விலாழியவே. 59

* மாதர்மேனியுமாமறுகிடமுமாதங்கம்
சூதர்பாடுவவேறுமாதுகளில்கந்தருவம்
வாதர்செய்வதும்வண்டுகண்மொய்ப்பதுந்தருக்கம்
போதர்கம்மியர்புரிவதுபுனையகப்பர்த்தி. 60

வேறு

* கூடனீக்குறச்சகிப்புருக்கொழுநர்தம்மடவார்
ஊடனீக்கவந்தவருதைபதமலருறுத்த
வாடனேக்கியங்ககற்றியமாலையையரவென்
றூடனிக்குருமயின்மருண்டெடுத்தறநாணும். 61

* மன்னுமங்கலார்முலையொடுமிளைஞர்தோண்மருவ
வுன்னுமுன்னவையுறுத்துமென்றகற்றியமணிப்பூண்
துன்னுநன்னலத்தேருருளுருடொறுந்துகளாய்
மின்னுமின்னலோடொலியுருவீதிகள்பலவால். 62

* பளிக்குமேனிலைத்தசும்பினிபயிர்செய்கான்முல்லை
அளிக்குநேர்ந்துதேனுறெனச்சேறுசெய்தொழுகல்
களிக்குமேலவரிரப்பவரிரப்பறக்கரத்தின்
தொளிக்குமாறிலாப்பொருள்வெளிப்பெருகுவவொப்ப. 63

மறையவர் வீதி.

* ஆரணந்தமிழிற்செய்தவருமையின்பெருமைக்கேற்பக்
காரணங்கார்யம்வஸ்துகட்டுவிடியம்பியண்ட
பாரணம்பண்ணிஞானபரமென்றுபிறமதத்தை
மாரணஞ்செய்துவேதம்வளர்ப்பவரிருக்கையீதால். 64

* விதித்தமுன்னூன்மெய்சொன்னவிண்டுசித்தனைப்போல்ஞோர்
உதித்தமாமரபில்வந்தோராதலாலுலகமெல்லாம்
கதித்தபுன்புறமதத்தகளிறுகைத்தாதிநூலாம்
பதித்தவங்குசத்தடக்கிப்பவனிசெய்வோர்வீடெங்கும். 65

* வேதமும்வேதஞ்சொன்னவிதிப்படியொழுகுந்தூய
போதமும்போதமொப்பப்பொறுமையும்பொறுமைக்கேற்ற
நீதமுமிவர்மாட்டென்றும்நிகழ்தலாற்பொன்னியாறும்
சீதமுமுடைத்தென்றுஞ்சான்றோர்சாற்றினர்சோழநாட்டை. 66

* மறைமொழியென்றுசொல்லும்வாசகம்வழுவவேதம்
அறைமொழிமறையோர்வாழில்லடங்கலும்பாலர்சந்தை
இறைமொழிபோலக்கேட்பவியம்புவரினியமந்த்ரம்
நிறைமொழியெதிமன்றூற்றிநிகழ்த்தியபோலவெங்கும். 67

* செம்மையாரோதலாதியறுதொழில்செய்துமாந்தர்
தம்மையாரீயவெல்லாந்தபவறுதொழிலர்மார்பில்
மும்மையாநூலர்சங்குசக்கரமொய்ம்பிற்பெற்றோர்
இம்மையார்முக்தியுமிருபிறப்பாளரெங்கும். 63

* மாட்சியார்தெய்வவெண்மண்ணீரறுவயினணிந்தங்
காட்சியார்வீடுசேரெட்டெழுத்தமர்பாஞ்சராத்ரம்
பூட்சியாரின்னநூலும்புகல்பரமரியேயென்பர்
காட்சியார்முக்கோலன்றியேந்துவார்க்ரத்திற்செந்தீ. 69

* மழுவதுகையிலேந்திமாதுமைக்குரைத்தமந்த்ரம்
வழுவதுகற்பியாதவாய்மையகீதைஞானம்
குழுவதுகற்குநாதங்கோசலைமகனீத்தங்
கழுவதுசெய்யும்வாரியோசையையடக்குமாதோ. 70

* தீவினையறுக்குஞ்செய்யநீவினையாளரென்றும்
மூவினைதாமேசெய்துமூன்றுலகளிக்குமொய்ம்பர்
தேவினைவசஞ்செய்தெந்தச்செயலையும்புரிவோர்வீதி
நல்வினைநாட்டிப்போற்றனம்மனோர்க்கெளிதோவம்மா. 71

வேசியர் வீதி.

* விரும்புந்தொண்டையங்கனியெலுமிச்சமென்கனிதண்
டரும்பும்வாழைசெவ்வாம்பலின்றேனணிவார்கொள்
கரும்புந்தம்பணந்தந்தெவர்களுக்கும்விற்பார்கல்
லிரும்புந்தோற்றநெஞ்சவர்கடையெனுங்கிடையீதால். 72

* பாடகம்பூண்டகாலர்பாடகம்பூணுக்காலர்
கோடகஞ்செய்துதம்மெய்க்கோடகம்பகர்ந்தியாரும்
நாடகம்விரும்பச்செய்துநாடகம்பயின்றன்னோரைக்
கூடகஞ்சற்றுமின்றிக்கூடகம்புரிவாரெங்கும். 73

* எலுமிச்சங்கனிபோன்மேனியெழிலுமஃதுடலாவற்
றிலுமிச்சம்புளிப்பேபோலுமின்பத்தோடெரிப்புமுள்ளார்

வெளுமிச்சம்போகங்காட்டித்தண்மைவெம்மையவாலம்போல்
கொளுமிச்சகஞ்சொல்வார்களகத்தொறுகுலவிநிற்பார். 74

* கொழுத்துவாரணிந்தகொங்கைக்குவட்டினிலேற்றிக்கீதம்
பழுத்துவாயினியவோசைப்பாடலாம்பாசத்தார்த்துள்
ளிழுத்துவாழிசைவல்லோரையிலங்கியவளைக்கீழ்ச்சார
அழுத்துவாரரம்பைமாரையடிமையாவைப்பரெங்கும். 75

* நீதங்கந்தளமாக்கொண்டயோகியர்நிமலபோத
வோதங்கந்திடவிறைப்பரொளிர்முலைக்குடங்கொண்டெத்தி
காதங்கந்தஞ்செல்மாலைக்காளையர்கவரக்கொங்கை
மாதங்கந்தந்தன்னோர்தம்மாதங்கம்பரிப்பாரெங்கும். 76

* தசைபெறவரிந்துதந்தோன்றனியுயிர்நீங்கமெய்யை
நசைபெறவளித்தோனென்பர்நாமரிந்திலமன்னோரை
இசைபெறவுயிருமெய்யுமியாவர்க்குமீவதன்றி
மிசைபெறவளைநாண்யாவும்விடுவரோவெவரேயொப்பார். 77

* சேயதாமரைப்பொன்வாழ்க்கைச்செங்கைவீணையளாய்வெள்ளை
யாயதாமரைப்பெண்வாழ்க்கையடைந்தவரின்பம்யாவும்
ஏயதாமரைத்தாண்மாதரிவரிடைவிரும்பியுற்ற
வாயதாமரைத்திண்டோளார்வைப்பரோவானவின்பம். 78

வேளாளர்வீதி.

* நறைமலிமகிழ்ந்தாமநாவலன்றமிழிற்றந்த
மறைமலிநாவரன்னோனுதித்தமாமரபில்வந்தோர்
துறைமலிதுறந்தோராதிமூவர்க்குந்துணைவின்மூன்ற
முறைமலிசெல்வர்வாழ்க்கைமுதுமறுகெதுவுமாதோ. 79

* மன்னவர்க்குரிமைசான்றமந்திரத்தலைமைபூண்டும்
அன்னவர்க்கணியமௌலியளித்துறுங்கடமையாறில்
முன்னவர்க்கொன்றையீந்துமுத்தமிழ்மாலையாய்த்து
சொன்னவர்க்களிப்பார்சொன்னமுத்தமிழ்மாலைசூட்டி. 80

* தொழுகுலத்தவர்போலாறுதொழில்புரிந்திசையுஞ்சால்பும்
எழுகுலத்தவரெண்ணான்கென்றிசையறமிசையநாளும்
கொழுகுலத்தவர்பார்போலக்கொடும்பகையவர்கண்மார்பை
உழுகுலத்தவர்பொன்மேழிக்கொடியுயர்த்தவர்களெங்கும். 81

* அலமுறுபடையோர்மன்னரழற்சுரந்திருத்திவித்திச்
சலமுறமருதம்போலப்பயிர்புரிசகைகொள்வீரர்
வலமுறுவலனைச்செற்றோன்வாயின்முன்வரிசையாய
குலமுறுமுகிலின்மேதிகுழீஇயவான்மூன்றிலார்கள். 82

அரசர்வீதி

* பரசியன்மறநூல்சொன்னபான்மைசெங்கோண்மைமேன்மை
முரசியன்முழக்கமேடுமுனைபிகன்மன்னரீண்டிச்
சிரசியன்மகுடமோதுஞ்சிலைப்புறுவாயில்காட்டும்
அரசியன்மூவிரண்டோரகமிகவுடையவீதி. 83

* திருமொழிபுனைந்தசேரன்செங்குடிப்பிறந்ததன்மை
யொருமொழிசாற்றியன்பருண்மையைவிளக்குமாண்போர்
குருமொழிகேட்டுமென்ஞேன்கொழுந்தமிழ்ச்சாரம்வேட்டும்
பெருமொழிவாய்மைகாட்டும்பெற்றியகொற்றவீரர். 84

* வியன்மிசைசெருக்குவாய்ந்துவிண்டலத்தியங்கலிக்கு
நயன்மிசைமண்டலத்துக்கொணர்ந்தனநடையவாக
மயன்மிசைவண்டரேங்கமாமதவாரிதூங்கப்
புயன்மிசையூர்வார்செல்வப்புரந்தரினும்பொற்புள்ளார். 85

* பணிபெறுங்கள்வர்நாகைப்பதியின்றெனினுமத்தத்
திணிபெறுங்கள்வனூர்த்தேவிலாலயத்தில்வைப்பார்
அணிபெறுமாம்பல்வாரியலர்ந்திலவெனினுக்கச்சைக்
கணிபெறுங்கறுத்தவாம்பல்கணிப்பறவாரிதிற்ப. 86

* மின்னவிர்மருங்குலார்கண்வேலொடுபகைவர்வேலும்
பொன்னவிர்சுணங்குபூத்தபுணர்முலைக்கோடுந்தைத்த
மன்னவிர்மார்பில்வாசக்களபக்கோடன்றியோடைத்
தென்னவிர்களபக்கோடுஞ்சேர்த்துவாழிளைஞரெங்கும். 87

* உன்னியென்றிவுளிக்கிட்டகாரணக்குறியையோராச்
சென்னியென்றவனுந்தேசற்கச்சிருரவைப்பயிற்றலோர்பால்
பொன்னியொன்றயமென்றோர்ந்தும்செண்டுபோதிப்பர்போல
மன்னியொன்றியபாய்மாவைமன்னவர்பயில்வரோர்பால். 88

* வளைபடுகடைநாள்வீசும்வளியினுங்கடியகண்டும்
உளைபடுங்கலினமாவைக்குசைதொடுவொருங்குசேர்த்துத்

தளைபடும்படியசைக்கப்பணைதொறுந்தகைந்துநிற்ப
விளைபடுங்கடனீர்கூலமிகாதடங்குதலைப்போலும். 89

* அரங்கமீதுறுபடையெலாமாழியானசுங்கி
இரங்கமீதுறுவேகமுட்பொற்கொடியிமைப்பும்
துரங்கமீதுறுமாலெனத்தொடுத்தனபாய்மா
தரங்கமீதுறுமிரதமந்திரந்தொறுந்தகைவ. 90

வேறு—மடக்கு.

* மாடமாலையமந்திரமுத்தமர்—மாடமாலையமந்திரமுத்தமர்
கூடமாவரிதானவரங்கெலாம்—கூடமாவரிதானவரங்கெலாம்

(இ-ள்) மாடு-பெருமை, அம்-அழகிய, மாலைய வரிசையாகிய, மந்திரம்-அரமனை, முத்துஅமர்-முத்துப்பதித்த, மாடம்-உப்பரிகைகள், ஆலயம்-யானைகட்டுமிடம், மந்திரம்-கோயில்கள், உத்தமர்-பெரியோர், கூடு-கூடுகின்ற, அ-அந்த, மா-லட்சுமிநாயகனாகிய, அரிதான்-விஷ்ணு, அமர்-விரும்பிய, அங்கு-அவ்விடம், எல்-பிரகாசம், ஆம்-ஆகிய, கூடம்-மா-பெரிய, அரி-குதிரையினது, தானம்-இடம் அரங்கு-சபை, எலாம்-இவைஅங்கிருப்பவைகளாம். 91

*தேரும்பல்லியறென்கந்தருவமே-தேரும்பல்லியறென்கந்தருவமே
ஆருந்தாரந்தளஞ்சிலம்பின்னன—ஆருந்தாரந்தளஞ்சிலம்பின்னன.

(இ-ள்.) தேர்-ரதங்களும், உம்பல்-யானைகளும், இயல்-நடையையுடைய, தென்-அழகிய, கந்தருவம்-குதிரைகளுமுளவாம், தேரும்-ஆராயும், பல்-பல, இயல்-தன்மையுடைய, தென்-இசையாகிய, கந்தருவமும்-இராகமும்(இசையும்,) ஆரும்-தங்கிய, தார்-கிண்கிணிமாலையும், அம்-அழகிய, தளம்-சேனையும், சிலம்பு-ஒலிக்கின்ற, இன்னன-இவைபோன்றவொலிகள், தார்-மாலைபோன்ற, அம்-மேகமுலாவிய, சிலம்பின்னன-மாலையைப்போன்ற, அம்-அழகிய, தளம்-மாளிகையும், ஆரும்-நிறையும். 92

* கொடியுந்தாமமுங்கூம்பினகோநகர்—கொடியுந்தாமமுங்கூம்பினகோநகர், கடியுந்தாரையுங்காவலர்கோலின—கடியுந்தாரையுங்காவலர்கோலின.

(இ-ள்.) கொடியும்-சீலைக்கொடியும், தாமமும்-ஒழுங்கும், கூம்பின-தேர்க்கொடிஞ்சியுடையன, கோ-ஆகாயத்தில், நகர்-நகர்கின்ற,

கொடியும்-பூங்கொடியும், தாமமும்-வீடுகளும், கூம்பின-கூடியுள்ளன, கோநகர-மேலானநகரம், கடியும்-காவலும், தானையும்-கொடிப்படையும், காவலர்-அரசரது, கோலின-செங்கோலையுடையன, கடியும்-வாசனையும், தாரையும்-ஒழுங்கும், கா-நந்தவனத்திலுள்ள, அலர்-புஷ்பம், கோலின சூழவிருக்கின்றன. 93

* மாதங்கங்கண்ணகன்றனமாதிரம்—மாதங்கங்கண்ணகன்றனமாதிரம், போதங்காவியங்கண்ணியரம்பையர்—போதங்காவியங்கண்ணியரம்பையர்.

(இ-ள்.) மாதங்கம்-யானைகள், கண்ணகன்றன-தாக்ஷண்யமிழந்தன, மாதிரம்-மலைபோல, மாதஙகம்-பொன்குவியல், கண்ணகன்றன-இடமகன்றிருக்கின்றன, மாதிரம்-திசைகளிலே, போதம்-அறிவையும், காவியம்-காப்பியத்தையும், கண்ணியர்-மாலையாகவுடையர், அம்பு-ஐ-பாணத்தை, ஆர்-பொருந்திய, போது-மலராகிய, அங்காவியங்கண்ணிய-அழகியநீலோற்பலம்போன்றகண்ணையுடைய, ரம்பையர்-ரம்பாஸ்திரீகளுக்குஒப்பானவர்ஆவர். 94

வேறு.

* கிஞ்சுகச்சூட்டுச்சேவல்கிளர்பதம்வீக்குவாளால்
கஞ்சுகச்சூட்டுக்கோபாங்லஞ்செசீர்சூட்டிற்கால
விஞ்சுகச்சூட்டுக்கொங்கையாருரைதவிருப்புற்றார்போல்
கஞ்சுகச்சூட்டுமோலியாரவைபொருதல்காண்பர். 95

* துப்புறக்கனிந்தகாமத்துயிற்சுவையுணர்ந்தநல்லார்
வெப்புறக்கலவிப்போரில்வெயர்வுறவனையின்மீது
குப்புறப்பனிநீர்தூற்றுங்குடமெனக்குளிர்ப்பிததென்றும்
செப்புறப்பணிசெய்தாற்றுஞ்செழுங்கதிருக்குத்திங்கள். 96

* துன்றலுற்றமர்பளிக்குநீள்சுவர்த்தலத்திற்றோன்றி
யொன்றலுற்றெளிர்தஞ்சாயலையலவுருப்போற்கண்டு
மன்றலூற்றன்பர்மாட்டுமருவியமடநலார்பால்
தென்றலுற்றூடனீக்கச்சிரித்தெதிர்நாணிநிற்பார். 97

* நீன்மழைதவழுமாடநெற்றியிற்சந்த்ரகாந்தம்
கன்மழைதவழ்ந்துதிங்களிடறியகதிர்வெண்கற்றைப்
பான்மழைபயிர்செய்முல்லைமல்லிகைபணித்துவீசுந்
தேன்மழையிடையறாதுதெருக்கலைச்சேறுசெய்வ. 98

* மீயிடைக்குயிற்றிச்செக்கர்விரிமணிப்பத்திமுற்ற
வாயிடைக்கணவரோடுவன்புறவூழ்வேற்கண்
வேயிடைத்தோளினல்லார்மேவுதலைவர்க்காகந்
தீயிடைப்பிறந்துநின்றதேவியைச்சிவனுமாதோ. 99

* முல்லையொன்றரும்பொடுசருங்கேழ்மணிமொய்த்தசங்
கெல்லையொன்றிலபலகணிவெயிற்புடைமாடம்
சொல்லையொன்றுமந்நகரெழில்தன்னகர்கொளவும்
இல்லையொன்றுகண்ணாயிரனகைப்பதியையும். 100

வணிகர்மறுகு.

* சீர்செயுங்கோல்கைக்கொண்டுசெவ்வனிறைநண்டிறுத்தும்
நீர்செயும்பொருள்கொள்வோர்க்குவியதியிற்பகர்ந்துதீர்த்தும்
வார்செயுமந்திரஞ்சேர்பிடிகைமருங்குவாய்ந்தும்
நேர்செயும்வேந்தர்போல்வார்வியமஞ்சூழ்வணிகரெல்லாம். 101

* கருத்தினோடுபல்பதப்பொருள்காட்டிவையெவர்க்கும்
திருத்தியோடெதிர்தேசிகர்பகர்வர்காண்டிகையே
அருத்தியோராயமகல்வெப்பொருண்மெய்மையெஞ்சா
விருத்தியேபுரியறத்தினர்நூல்கொள்வேதியரால். 102

* மதியிடைதவழுஞ்சையப்பொருள்வின்பொருளையெல்லாம்
நதியிடையடைந்துமுத்தொக்கோலைநற்றுகிர்சங்குப்புப்
பொதியிடைவேலைமாலையன்பர்போற்பொருந்தநாகைப்
பதியிடையிருப்பபோன்றவாவணப்பரப்பின்கூலம். 103

* ஒளிகொளுஞ்சசிபொன்னுடையுயர்சங்கம்பதுமமாரம்
களிகொளுஞ்சுரியயானைகவின்மாவின்னவெல்லாம்
அளிகொளுஞ்சௌரிமார்பத்தமர்திருவுடனேவந்த
நளிகொளுஞ்சார்பினாலிந்நகர்க்கடையகலாபோலும். 104

* திருத்தகுமிலங்குலோகஞ்செம்மணியாரநீலம்
உருத்தகும்வண்ணந்தண்டம்புட்கரமொளிவில்சங்கம்
குருத்தகுமாழிகுல்லைத்தாமமாரரவங்கொண்ட
மருத்தகுமாலின்மேனியொப்பனவணிகர்வீதி. 105

* கனமணிக்கம்பலத்திற்கதிரொளிபரப்பிக்காந்தும்
இனமணிக்கம்பவேதியெழிற்படாமெனக்கண்டேரும்

சினமணிக்கம்பமேவழந்திங்கத்தனநின்றுமாதர்
தனமணிக்கம்பக்கோடுகொண்டலுஞ்சரிப்பவல்லே. 106

* நாள்படர்பகல்தண்டிங்கள்சேயணிபச்சைநற்பொன்
கோள்படர்வெள்ளிபங்குகுலவிருசுடர்விழுங்கும்
கேள்படர்பணிகளுய்கர்கிரகங்களுறலால்வானம்
வாள்படர்கிரகஞ்சாரவைத்தனர்புலவரப்பேர். 107

* வளங்கனிவணிகர்முன்றில்சிந்தினமணிவெண்முத்தைக்
களங்கனியிரிட்டமாதிப்பறவைகள்கண்டுசோறென்
றுளங்கனிவுறவேகொத்தியுட்கொளினரிப்போர்கையில்
விளங்கனிமணிகள்வாய்ப்பவெண்ணிலவியக்குங்காலே. 108

* செல்வகைச்செங்களுய்கச்சிறுமியர்பாதஞ்சேப்ப
நால்வகைப்பொன்னேடேற்றநவமணிக்குவைகொண்டோடிப்
பால்வகைக்கனிகளாதிப்பண்டமாற்றுவரேயென்னின்
சால்வகைச்செல்வம்யார்க்குஞ்சாற்றுறுந்தகைமைத்தாமோ. 109

* தூக்கணங்கனையமின்னார்வயின்றொறுஞ்சமைத்தசிற்றில்
மாக்கணங்கூடியாடச்சிதறுசெம்மணியோடாயம்
மிக்கணங்குழையுதிர்த்தவெயின்மணிகொடுபோய்க்கூட்டில்
தூக்கணங்குருவிவைக்குஞ்சுடர்விளக்கிவையேயன்றோ. 110

* மந்தரத்திருந்ததோளார்மாதர்தம்மூரல்கண்டு
சுந்தரத்திருந்தமுத்தங்கணமெனச்சேந்தசெவ்வாய்ச்
சுந்தரத்திருந்தவாயவிதழ்த்துகிர்துணையாக்கொண்டங்
கந்தரத்திருந்திருந்தகொங்கையாரங்கண்டிருந்ததென்பார். 111

* குழலுறுதுணையவாகிக்கோடியாழுறைபயிற்றுங்க
எழலுறுமொழியார்பாடுமின்னிசைசெவியின்மாந்திக்
கழலுறுகழலார்தாஞ்செயறத்தினைக்கழலாரன்றோர்
நிழலுறுவதுபோலின்பநீப்பறத்துய்ப்பர்பல்லோர். 112

* மின்னிடைமுறிந்துகோணிவிண்ணிடைப்பரவவென்ற
துன்னிடைபோலன்றோர்தானலம்பருகவெண்ணி
மன்னிடையருதுசின்றுதுவளுவர்மாற்றுர்ஞாட்பின்
முன்னிடைவுறவெல்வல்லார்முனைவுறத்துவன்கிலாதார். 113

நகரணி முற்றிற்று, ஆ விருத்தம்—304.

* நூபுரமெலாநின்றுபணியும்பொற்பது
மாபுரஞ்செற்றவன்மலையையொப்பது
நூபுரரம்பையர்நோக்கவந்திழி
கோபுரவேணியாயுற்றகோபுரம். 1

* அயர்வறுமமரர்கடிணமுமேத்தெடுப்
புயர்வதுதூபிகைசிகரமுற்றது
மயர்வறுமதிகலசியுமாண்பது
துயரறுகாட்சியிற்றோன்றுங்கோயிலே. 2

* சேவிலோதிமத்தினிற்செல்லுந்தேவர்கள்
காவியாராயிரங்கண்ணனாதிய
தாவிலாவதிதிதான்றந்தமைந்தராம்
கோவிலார்வந்துவந்தனைசெய்கோயிலே. 3

* மண்ணியசிலாதலவனப்புவாய்ந்ததந்
தெண்ணியலரும்பிரகாரமேய்ந்தது
கண்ணியபொன்மதிற்காப்புத்தோய்ந்தது
விண்ணியல்விமானத்துமிளிருங்கோயிலே. 4

* மெய்வருமரியதென்மறையும்வேதமும்
உய்வரவ்றதினமொலிசெயிட்டது
வைணவக்குழாம்பலவகுத்தசார்பது
செய்வனகர்த்தனச்செல்வக்கோயிலே. 5

* பாற்கடலெனவிரும்பவ்வமுற்றதங்
கேற்குமக்கடலிடையிலங்குகோயில்போல்
பாற்படுநுரைபந்துழாய்ப்பரமன்பள்ளிகொள்
சீர்ப்படுசித்திரத்தெய்வக்கோயிலே. 6

வேறு

தன்னுருக்குநிகரில்வயிரத்தலத்துத்தளவரிசைதனின்மாணிக்கம்
பொன்னுருக்கிப்புகப்பெய்துசுவரேற்றிச்சாளரத்துப்புளகக்காழ்
மேல், மன்னுருக்குவயிடூரியநிலைமாட்டி வரிசைவழாமாடகூடம்
மின்னுருக்குவெயிலுருக்குநிலவுருக்குமிருள்பதுங்கமேன்மேலாகி,

பவளத்தூண்மரகதப்போதிகைநிலாநிலம்புட்பராகமுத்து
தவளக்கோமேதகந்தொண்டணிந்துளதுபுறநகரும் தோற்றல்போ

லத்,தவளத்தாமரைமலருந்தனித்தாமரைமலருந்தழைப்பப்பூத்த
குவளைக்காண்மலர்விரியுங்குளம்பொலியக்குடிபலவுங்கொண்டுமே
வும். 8

குடையாகிப்பாதுகையாயுரகநெடுமோலுக்குக்கோலச்செங்கண்
படையாசப்பாயலுமாய்ப்பட்டணமுந்தன்பெயராற்பதிவுசெய்து
விடையாளுக்குபதேசவியாகரணபண்டிதனாய்விளக்கலாலே
சடையாகந்நயங்கவணிப்பூணாகக்கொள்வானுஞ்சார்ந்துளானே. 9

உலககாரணனேமோக்ஷத்துக்குமேகாரணமென்றுரைப்பக்கேட்டு
த், தலநாதாதருமுருந்தாவெனுந்திருநாமம்புகன்றுதங்குகின்றான்
அலவாறுற்காயாரோகணப்பேரொவ்வாறுவருமான்வாழூர்க்கு
நலராமநாமமேநன்னெஞ்சுநிறைந்துநாநவின்றுதேர்ந்தான். 10

சுந்தரிபூசிப்பதனைத்தொடர்ந்தரனும்பூசித்ததொன்மையன்றே
வந்ததுசுந்தரநாமநாகைக்காரோணமெனமருவுமூர்தான்
நிந்தனையின்றிடப்பாகஞ்சிவனுறுதுங்கச்சுந்தரிபுணர்ந்துற்றுளே
அந்தமில்பேரின்பநுகர்ந்தங்காமமராதினமுமேத்த. 11

காயாரோகணமெனவேலகாரோணமெனமருவக்கறைக்களத்தோன்
சாயாதுநின்றதிருமாலுமம்வாய்புகலச்சவுந்தரன்றன்
மாயாததிருவுருவம்மனங்கொண்டேதங்கவைத்தமணிச்செஞ்சூட்டுப்
பாயானதின்பெயர்கொளூரிருந்தானருள்செய்துபதுமநாபன். 12

நாகையேதிருமூர்க்குநகராகக்காரோணநகர்காண்மேவி
ஓகையொடுதில்லையிலேகண்வளரக்கண்டாடற்குகந்துநின்றான்
மாகைலாயத்துறுவோன்மாதங்கிதனையாடவகுத்துநேரே
ஈகைபெறவேயமைத்தானிவ்வளவோசெவ்விநகர்க்கெதிரொன்றி
ன்றே. 13

வேறு

முடிகுடைகவரிதோட்டிமுரசுசக்கரமேயானை
கொடிமதிடோரணங்நீர்க்குடமலர்மாலைசங்கு
கடலொடுமகரமாலைகயலிணைசிங்கந்தீபம்
இடபமாசனமென்றின்னசின்னங்களெங்குமெங்கும். 14

கோயிலணி முற்றிற்று. ஆ விருத்தம் 318.

முதலத்தியாயம்.

ஆமதிரசத்தினதாழம்வாய்ந்தது
மாமதிக்கவிகளின்வளமெலாந்தரத்
தோமதில்லாததுசுரருந்தோய்வது
கோமதியெனுமொருகுளிர்ந்தநன்னதி. 1

அப்பெருநதிக்கரைக்கரைக்கணுகரைமிச
மைப்பெருவனநிறைறவென்றும்வாய்ந்தது
முப்பெருமகிகளுமுழங்குந்தூயதொன்
றெப்பெருங்கனிகளுமலருமேய்ந்ததே. 2

பூமியந்தரச்சுவர்க்கங்கள்பொங்குபி
ராமணச்சிரீயலங்காரநல்லவர்
மாமணப்பாகவதலக்கண்ம்வதி
துமுனிவரரவிசொரிந்துவேட்டரோ. 3

சிரீஹரிமூர்த்திக்குத்திருவாராதன
மரீஇயவவ்வனத்திடைவகுத்திருந்தனர்
தெரீஇயுளவதிலயன்றிருந்துலோகமே
இரீஇயனபெருநிலையொன்றுண்டென்பவே. 4

மற்றதிலுறைமுனிவரர்க்கெல்லாமொரு
நற்றவப்பெருமையினவையிலார்முழு
முற்றுணர்குலகுருவாய்முயன்றவர்
குற்றமில்லாநெடுங்காலங்கொண்டுள்ரர். 5

சவுனகரெனுந்திருநாமஞ்சான்றவர்
அவர்பசுப்பெண்முதலானய்யாவையும்
நவையில்சீரரிவயினன்புசார்நலம்
தவநனியுறவுபதேசஞ்சாற்றியே. 6

போகமங்கெவர்களும்பொருந்தப்போதரும்
பாகவதோத்தமரானபண்புசால்
யோகர்மற்றவர்தமிலுயர்ந்துளோரொரு
மாகனபுராணிகர்மதியின்மிக்கவர். 7

யாதறியாததியாவுந்தேர்ந்துள
ருதபுராணிகரானதூயரை

மாதீவச்சவுனகர்வலம்வந்தங்ஙனே
ராதனத்திருத்தியன்பொடுபணிந்தரோ. 8

ஐயரேநீர்பெருமதியினாழ்ந்துள
மெய்யர்முக்காலமும்விளைவுகண்டறி
துய்யர்மாமதிதலந்துன்னுவோர்க்கெலாம்
பொய்யறுதேசிகரானபுண்ணியர். 9

அல்லவோவெனமதித்தாய்ந்தசூதர்தம்
மல்லல்வாண்முகமலர்மலரநோக்கியே
சொல்லுவாரேதெனிற்சுவாமிதேவரீர்
நல்லவிப்பொழுதிடைநவிலுகின்றதோ. 10

புண்ணியக்ஷேத்திரப்புதுமையன்னதின்
மண்ணிடைச்சவுந்தராரணியமான்மிய
நண்ணியதலமுளதாய்நவின்றுளீர்
அண்ணலங்கதைவிரித்தறையவேண்டுமே. 11

சுவாமிவாரீர்மகாதுல்லியப்பிரபோ
அவாவுறநாளிதுவளவுமன்பொடு
தவாதுறுவருணவாச்சிரமதர்மமும்
குவான்மிகுமரசர்கள்குலவுதர்மமும். 12

நித்தியத்தோடுநைமித்தியத்தினீள்
சத்தியக்கிரியைகள்சாதிக்கேற்பவா
யொத்தியல்வேள்விகளோடுதீர்த்தமா
கத்தியக்ஷேத்திரங்கதுவுதர்மமும். 13

ஆதியசகலதர்மங்களுஞ்சொனீர்
நீதிமாமுனிவரேகேளிர்நீடுசோர்க்
காதிபசுகங்களுங்கருதுமோக்ஷமும்
தீதிலாதுதவிடச்சிறந்ததாகவே. 14

நன்மைசேர்தருமங்களாய்நவின்றுள
தொன்மைகள்யாவுநீர்சொல்லக்கேட்டனென்
இன்னமுஞ்சவுந்தராரணியத்தேற்றமாய்
மன்னியமகிமையைமகிழ்ந்துகேட்கவே. 15

ஆசையுண்டாயிருக்கின்றதாதலால்
நேசமாய்மகிழ்வுறநிசழ்த்திடப்பிர
தேசமெவ்விடத்துளததனிலேதினம்
வாசமாயுறைபவர்க்கெனவண்மையே. 16

அந்தமாசவுந்தராரணியந்தன்னிலே
சிந்தைநன்குறத்தவஞ்செய்துளோர்களுக்
கெந்தநீள்பயன்கிடைத்திடுமிதேமுதல்
முந்தியவகையெலாமொழியவேண்டுமே. 17

என்றுகேட்டுளசவுனகரென்றோர்பெற
நின்றமாமுனிவரைநோக்கிநீதிசேர்
கின்றபௌராணிகரானகேடிலா
வன்றபோதனர்மிகமகிழ்ந்துகூறுவார். 18

ஓமகாபாக்கியவானெனன்றேத்திசீர்
மாமுனியேநலம்வாய்ப்பக்கேட்டுளீர்
பூமியிற்சவுந்தராரணியப்பொற்புள
தாமகிமையையொருவருமறிந்திலார். 19

அதுமிகரகசியமாகியுள்ளதே
இதுவரையொருவருக்கேனுஞ்செரற்றிலேன்
புதுமைசாலதைமிகப்புகழ்ந்துகூறிடக்
கதுவுறின்முடிவுறுவென்றுகண்ணியே. 20

உமக்குநான்சுருக்கமாயுரைக்கவிப்பொழு
தமைத்துரைக்கின்றதைமனவடக்கமாய்ச்
சமைத்துநீர்கேட்டிடத்தகுமென்றந்தமா
கமைத்தவச்சவுனகர்காதுக்கேற்கவே. 21

அந்தமாமகிமையையறிந்தருதரா
முந்துநீள்புராணிகர்மொழிவதாயினர்
வந்தமாசிருட்டிக்குமுன்புவாய்த்ததா
மிந்தவீரேழுலகென்பயாவையும். 22

வேறு.

திருவிளங்குலவருண்டத்துக்குக்கீழாகவேசிறந்தமூலப்
பிரகிருதியால்வியாபிக்கப்பட்டிருளாகப்பெரிதுநின்ற

கருதியின்மைதென்றறியக்கூடாததாகியின்னகணக்கதென்று
தெரிவரிதாயிவ்விதமென்றாகிக்கநதக்கதாய்த்திகழ்வதாகி. 23

இன்னவிதமென்றறியத்தக்கதாயெப்பொழுதுந்தூங்குகின்ற
தென்னவிருந்ததுபின்புசிருட்டிகாலம்வந்தவுடனேயேய்ந்து
மன்னும்ந்தப்பிரகிருதியிடமாகமகதத்துவம்முண்டாயிற்
றன்னதினின்றகங்காரமுண்டாயிற்றந்தவகங்காரந்தானே. 24

சாத்துவிகம்ராஜசந்தாமதமென்றுமூவிதமாய்ச்சத்துவத்தி
னேத்தகங்காராபிமானியெனுமான்மாவுக்கியலுநாமம்
கீர்த்தசியெக்கியனென்றும்ராஜஸாகங்காராபிமானியான
ஆத்மாவுக்குப்பெயர்தான்தைஜஸனென்றறைவதேயாகுமன்றே.

தாமதாகங்காராபிமானியெனுமான்மாவுக்குத்தாவெனன்றும்
நாமம்வைகாரிகன்முன்சொன்னதாமதாகங்காரத்தினின்றும்
ஆமதுவேசத்தமதினின்றுமாகாசமதிற்பரிசம்வாயு
காமவுருத்தேஜசுவேரஸந்தண்ணீர்கந்தமண்ணிற்செறிவதாமே. 26

இவ்விதமாயொன்றிவிருந்தொன்றுண்டாயிற்றுனவிந்தவைவந்தேன்
ஓருவ்வியபூதங்களையுஞ்சேஷியாம்ஸ்ரீஹரிதானெவ்வொன்றையும்
வவ்வியரெண்டுக்களாகப்பிரித்துப்பூதங்களைந்துமன்னித்
தவ்வியவிலண்டமாகச்செய்துசிருட்டித்தார்தாமேமாதோ. 27

அந்தப்பூதங்களொவ்வொன்றிலும்பாகம்பாதியாயமையகான்கென்
றுந்தப்பூதங்களின்பாகங்காலாய்க்கலந்தனவிவ்விதமாயோங்கிச்
சந்தித்தேயனேகவண்டந்தானுகிபத்தியிலேதயங்கும்பூமி
முந்தப்பூமிதனைமற்றப்பூதங்கள்சூழ்ந்துகொண்டுமுயங்குமாதோ.

அன்னவிதமானவண்டந்தனிலுள்ளபூமிவிரிவானதைம்பான்
மன்னியதோர்கோடியோசனையென்றுசொலப்படுமெற்றதனிற்பத்
தென்,றுன்னுபங்குவிஸ்தாரம்சலமாகுமதற்குமேலுரைத்தபங்கே
துன்னியதேஜஸின்விரிவாமதற்குமேல்வாயுவுக்குச்சொன்னபங்கே

அதற்குமேற்பத்துப்பங்காகாயமதற்குமேலந்தப்பங்கே
முதற்சொன்னவகங்காரமதற்குமேலப்பங்கேமொழிவதாக
விதப்புறுமேமகதத்துவம்மதற்குமேல்முன்னேவிதித்தபங்கே
மதத்தமூலப்பகுதிதத்துவங்களைனைத்தையுந்தான்மறைத்துநிற்கும்.

மற்றதற்குமேல்விரஜாநதியென்றோராறுளதுவழங்கவ்வாற்றின்
முற்றுகரைதனிலெல்லையில்லாததாய்முதுவேதங்களாலும்
பற்றியறியாததாயுளதாம்ஸ்ரீவைகுண்டபதியிலேதான்
நற்றுபகவானுனநாராயணனன்வாழ்வார்நலஞ்சேர்ந்தன்றே. 31

முன்சொன்னவண்டங்களின்விரிவைச் சுருக்கமாய்மொழிவேன்கே
ளும், இன்சொல்லிங்கெனக்குரைத்தசவுநகரேயென்றுபுராணிகரா
யேய்ந்து, மின்சென்றசூதர்சொல்லுகின்றார்மற்றவைகளிலேவிள
ம்பூமி, மன்சென்றுவதிகின்றநிலைகளியான்சொல்லுகின்றவவை
நீர்கேண்மின். 32

ஜம்புபில க்ஷம்சால்ம பிகுஜகிர வுஞ்சசா கபுஷ்க ரம்மென்
றிம்பருளதீவேழேயிவைகளேஜம்புத்தீவென்பதொன்று
பம்பிநடுவேயிருக்கின்றதுவதற்குநடுவிலேபகருகின்ற
செம்பொன்மலையோஜனைநாற்பத்துநாலாயிரமாய்ச்சிறந்துநீண்டு.

மேருமலையெனப்பேர்பெற்றுலகிலுள்ளமலைகளுக்குவேந்தனென்
னும், சீருடையவதுபூமிக்குக்கீழேபதினாறுயிரமாய்ச்செப்பும்
தூரயோஜனையிறங்கியிருக்கின்றததினுச்சிசொல்லுகின்ற
பேரகலமுப்பத்திராயிரம்யோசனையடியினகலம்பேசில். 34

பதினாறுயிரமென்னும்யோசனையேயந்தமலைபாராம்பூமி
யதுவானதாமரைப்பூமத்தியிற்காயிருப்பதுபோலமைந்துநிற்கும்
பதிவாகியம்மலையைச்சுற்றிச்சம்புத்தீவாய்ப்பரந்தபூமி
அதுதானென்பதுபாகமாகவேவிரிக்கப்பட்டிருப்பதாமே. 35

அதனைநவவருஷமென்கின்றதுவதிலேயிளாவிரதவருஷமென்னும்
இதனையந்தமேருமலையைச்சுற்றிக்கொண்டிருப்பதென்பதாகும்
உதனையந்தமேருவின்றென்பக்கத்தில்யோசனைதானுரைக்கலாவ
தெதனையெனிலாயிரத்தைந்நூறென்பதுவேவடபக்கத்தில்,

அவ்வளவேயோசனைதானிவ்விதமாயோன்பதினாயிரமென்றுரைக்க
வவ்வியயோசனையகலமப்படியேகீழ்மேலும்வகுத்துச்சொன்ன
தெவ்வளவோவவ்வளவேயந்தவிளாவிரதவருஷத்தின்கீழ்பால்
ஒவ்வியதேபாரியாத்திரகமென்னுமெல்லைமலையுளதுமேற்கே. 37

மாலியவானும்வடக்கேநீலந்தெற்கேநிடதமலைகளுன்காய்க்
கோலியவெல்லைகள்முன்னேகுறித்தமாலியவானுமலைக்குமேற்கே

நீலியவக்கடல்வாயிலுங்கேதுமாலமென்றுமிசைத்தநின்ற
வாலியதாம்பாரியாத்திரமலைக்குக்கிழக்காழிவரையுமாதோ. 38

பத்திருசுவம்மென்றுமிரண்டுவருஷங்களுளபகர்ந்தநீல
அத்திரிக்குவடக்கோரம்மியகமென்றோர்வருஷமதன்வடக்கேசுவே
த, குத்திரமென்றோரெல்லைமலையதனுக்குவடக்கேகுறிப்பதாகச்
சுத்தவிரணியமென்றோர்வருஷமதன்வடக்கேசிரங்கிருமும். 39

எல்லைமலையதன்வடக்கேயுள்ளகடல்வாயிலுஞ்சிரேற்றமாகச்
சொல்லுமுத்தரகுருவென்றோர்வருஷமிந்தவிதமாகச்சூழ்வடக்கே
புல்லுவனமூவருஷமிடதமெனவேயெவரும்புகழ்மலைக்கு
வல்லதெற்கேபிரதிவருஷந்தானுமற்றதற்குவாய்த்ததெற்கே. 40

கிரியேமகூடமேயதன்றெற்கேகிம்புருஷவருஷந்தானும்
சரியானவதன்றெற்கேயிமயகிரியதன்றெற்கேசாற்றுகின்ற
ஒருவருஷம்பாரதமென்றிவ்விதமாய்த்தென்புறத்திலோங்குமூன்று
வருஷமிதின்மேருமலைக்கடுத்ததெற்கும்வடக்குமிருமலையுமாதோ.

இருகடல்களின்வாயுமொவ்வொன்றேயிலக்கம்யோசனையினீளம்
மருவுகிழக்கும்மேற்கிலிருக்கின்றவாமற்றவடபுறத்தும்
கருதுகின்றதென்புறத்துமிருக்கின்றமலைகளிருகடல்களாறும்
தருவதொன்றுக்கொன்றுபதிணாயிரம்யோசனைநீளந்தனிற்குறைந்
தே. 42

இவ்வாறுமலைகளுந்தாமொவ்வொன்றுமோரமிரண்டாயிரத்தி
னவ்வாகும்யோசனையுமகலத்திலவ்வளவுமாமல்லாதும்
தவ்வாதமேருமலைநாற்புறத்துநான்குமலைதாங்குமுட்டாய்
எவ்வாறென்றிடிற்கிழக்கேமந்தரந்தெற்கேகந்தமாதனம்மே. 43

மேற்கேதான்விபுலமலைவடக்கேசுபார்சுவமலைவிளங்குமிந்த
நாற்கிரியின்மந்தரத்திலடப்பமாங்கந்தமாதனத்தினுவல்
ஏற்குமந்தவிபுலமலையினிலிச்சில்சுபார்சுவத்திலெய்துமாலம்
தூற்குமிந்தப்படியானநான்குமரங்களினுயரநுவலக்கேண்மின். 44

ஆயிரத்தோடொருநூறியோசனையாமொவ்வொன்றுமவற்றினுவல்
வாய்பழுக்கும்பழங்களோவொவ்வொன்றும்யானையளவாகவாய்ந்த
தாயுருக்கக்கனிந்திரதம்பெருகியோராறுமோடுகிறதாகிப்
பாய்திறத்தினாலேஜம்புத்தீவென்றதற்கொருபேர்பகர்வர்தாமே. 45

அன்னசர்புநதிமணலோவாயிரத்தெட்டெனுமாற்றுத்தங்கமாகி
மின்னுமந்தத்தங்கத்தின்பெயர்சாம்பூநதமென்னமேவுமிந்தப்
பொன்னவிருமாஞ்சிறந்தவிதனலேயித்தீவுபொலியுஞ்சம்பு
மன்னியதிவெனநாமமுன்சொன்னபாரதமாவருஷமொன்றே. 46

இந்திர கசேரா தாமிரபரண கபஸ்திமா ஞக சவும்ய
கந்தருவ வாருண பரதமென வொன்பதுகண் டமாகத்தானே
முந்துபிரிக்கப்பட்டதாமொவ்வோர்கண்டமுந்தான்முன்னூண்டோ
னும், வந்தசகரன்குமாராலே தோண்டப்பட்டவாரிசூழ்ந்த. 47

அந்தநவகண்டத்திவிந்தவிடம்பாதகண்டமாமென்றோர்க
கெந்தமாதனமலையுங்கயிலாசமெனுமலையுங்கிளத்துதற்கு
முந்திமயமலையினுக்குவடக்கிருக்கின்றனவின்றுமொழிவதான
இந்தநல்லஜம்புத்தீவேகிழக்குமேற்குந்தெற்கும்வடக்கும். 48

இலக்கம்யோசனைவிஸ்தீரணமுளதாமிதைச்சுற்றிலவணவாரி
சொலற்கிரண்டிலட்சம்யோசனைவிஸ்திரணமிந்தக்கடலைச்சூழ்ந்து
பிலக்ஷத்தீவிரண்டிலக்ஷம்யோசனைவிஸ்திரணமாய்ப்பேசுமித்தைக்
கலக்குறுமோநாலுலக்ஷம்யோசனைவிஸ்திரணமாய்க்கருப்பஞ்சாறே

ஆனகடலிப்படியேயிரட்டியிரட்டியதானவளவுகொண்டு
மேனவிலுந்தீவைந்துங்கள்ளொடுநெய்தயிர்பாலேவிரும்புநன்னீர்
மானவளர்கடல்கள்சூழ்ந்துள்ளனபிறருமானசோத்திவ்வந்
தானுளதுவிருத்தாகாரமதாநமத்தியின்மற்றனைச்சார்ந்து. 50

சுற்றிலுந்தங்கப்பூமியிரட்டிப்புமற்றதனைச்சூழ்ந்திருக்கும்
முற்றியலோகாலோகமென்னுமலையிதைச்சூழ்வாய்முன்னேசொ
ல்ல, வுற்றபூமியொடுகடல்மலைகளெல்லாஞ்சேர்ந்தவளவுளவிஸ்
தாரம், பற்றியதினிரட்டியளவுளபூமியிருள்மூடப்பட்டதில்லை. 51

சேருனகடலாகியிருக்கிறவிவ்விதங்களாய்ச்செறிவதைம்பா்ன்
பேருனகோடியோசனைவிஸ்திரணபூமியிறங்குமென்ப
மாருமலப்பூமியடிமுதலோரெழுபதினாயிரமாய்வாய்ந்து
வீருன்யோசனைகொளுயர்வுக்குமேலிருக்கும்விளங்கிதழ்தானே. 52

அந்தப்பூமியினுயரமெழுபதினாயிரம்யோசனையதேயாகும்
மூந்தஇன்கீழ்யதலம்விதலஞ்சுதலங்கபஸ்திதலமேமூவா

துந்தும்காதலஞ்சுதலம்பாதாளமெனவேழென்றுளவுலோகம்
தந்தவொவ்வொன்றும்பதினாயிரம்யோசனையுயரந்தழுவுமாதே, 53

பாதாளலோகத்தின்கீழஷ்டநாகங்களாலும்பன்னிற்
குதாகாதுளவஷ்டகஜங்களாலும்பூமிசுமக்கப்பட்டுத்
திதாகாதவைகளின்கீழேயாதிசேடன்றன்சிரமேற்பட்டும்
மிதாகக்கீழ்ப்பகவான்கூர்மவடிவாய்ச்சுமந்துவிளங்குகின்றார். 54

ஆமர்தவிடத்திலேதென்புறத்திலரோகவிதநகரமுண்டு
பூமியின்மேலேலட்சம்யோசனைக்கப்பாலேதான்புகன்றலட்சம்
தாமெனும்யோசனைவிஸ்திரணமாசச்சூரியமண்டலந்தான்றங்கும்
வாமதற்குமேலிலக்கம்யோசனைக்குமேல்மதிமண்டலந்தான்மன்
னும். 55

அந்தமதிமண்டலமுஞ்சூரியமண்டலத்தளவேயாமதற்கு
முந்திலக்கம்யோசனைக்குமேலுடுவின்மண்டலந்தான்முயலுமேலே
உந்திரண்டுலக்ஷம்யோசனைக்கப்பாற்புதனதுமண்டலந்தானோங்
கும், வந்ததற்குமேலேசுக்கிரன்குசன்ராஜாசனிமண்டலங்கள்வா
ய்க்கும். 56

இக்கிரமமாகவொவ்வோர்மண்டலங்களொன்றன்மேலொன்று
யெய்ந்து, மிக்கிரண்டுலட்சம்யோசனைதூரத்துக்குமேல்மேவுமொ
வ்வொன், றுக்கும்யோசனையேழென்றுரைக்கவுளமண்டலங்களும்
விஸ்தாரம், அக்கிரகங்களுக்குமேற்சோதிச்சக்கரமிலக்கம்யோச
னைத்தே. 57

அதனடுவிலேதுருவரிருக்கின்றாரிவ்விதங்களாகமூன்று
விதவுலகமிருப்பதுவுமதினுயரமுந்தெரியவிரும்பிச்சொன்னேன்
இதமுடனேதுருவசக்கரத்துக்குமேல்மகாலோகங்கோடி
பதவியயோசனைதூரமதற்குமேற்சனலோகம்பதிவதாமே. 58

இருகோடியோசனைதூரத்தின்மேற்றபோலோகமெட்டுக்கோடி
மருவியயோசனைதூரமதன்மேற்சத்தியலோகம்வாய்ப்பதாகும்.
கருதியநாற்பத்தெட்டுக்கோடியோசனைதூரங்காண்பதற்குப்
பொருவரியபிரமலோ கமென்றுபெயர்சுருக்கியிங்ஙன்புகன்றேன
ன்றே. 59

மண்டலங்களின்னிலையைக்கண்டுகொள்வீர்சவுனகரேமற்றுமெல்
லா, அண்டங்களைக்கோட்டிலும்மிந்தவண்டமேயதிகநன்றும்

விண்டதிலும்பூலோகமிகநன்றுமதிலுஞ்சம்புத்திவோதான்
உண்டுமிகநன்றனவுத்தமமாயதிலுமிகவுளதுநன்றே. 60

பாரதமாவருஷமதிலும்பாரதகண்டமோபகரினன்றும்
சேரதிலேசிறந்தமோக்ஷம்வேண்டும்பேர்களெல்லாஞ்சேர்ந்துவாழ
வாரதுளவிடமதிலுஞ்சோழதேசத்திற்காவேரிதீரம்
போரநன்றுமதிலுந்தென்புறத்திலுளசாரக்ஷேத்திரந்தனக்கும்.. 61

சருடாசலத்துக்குமத்தியிலுங்காவிரித்தென்கரைக்கும்வேத
அரணியத்துக்கும்மத்தியிலுமஞ்சியோசனைவிஸ்தீர்ணமாகப்
பொருளானகிருஷ்ணக்ஷேத்திரம்விளங்குமதனடுவேபோற்றிப்பே
சும், தரமாகச்சவுந்தராரணியதலந்தான்விளங்குந்தகவுகொண்டே:

அத்தலத்துக்குக்கிழக்குமேற்குந்தெற்கும்வடக்குமளவோரோச
னைத்தரத்ததூரமுளபூமிபரிசுத்தமிகுசலத்ததாகும்
மெய்த்தவந்தத்தலஞ்சகலபாவங்களையும்போக்கும்விரும்பிவாழ்
வோர்க், குத்தகவாகியமோக்ஷஞானசுகங்களையினிதுகொடுக்கு
மாதோ. 63

அந்தக்ஷேத்திரத்தின்முன்னேயைந்துவயதுளதுருவரடைந்து
தூய, சிந்தையொடுதவம்புரிந்துதிருமாலாகியதேவதேவன்செய்யும்
முந்துகருணையினாலேமோக்ஷஞானம்பெற்றுமுகில்போன்மேனி
எந்தையடிக்கினியவைணவப்பிரதானரேயாகியிருக்கின்றாரே.

கேளுநீர்சவுநகரேயெனச்சூதபௌராணிகர்சொல்கின்றதாக
ஆளுமிந்தப்பிரகாரம்ஸ்ரீபிரமாண்டபுராணத்தடைவதாகி
நீளுமுத்தரகாண்டத்திற்சவுந்தராரணியத்தினெடியசீர்மை
கோளுமுதலத்தியாயம்மெனவேயிவ்வளவுங்கொள்வதாமே. 65

முதலத்தியாயமுற்றிற்று. ஆ விருத்தம் 383.

## இரண்டாம் அத்தியாயம்.

இப்படிச்சொல்லாநின்றசூதனைநோக்கியேதும்
தப்பிலாதுயர்ந்தஞானச்சவுனகர்வினவுகின்றார்
வைப்பினிற்றுருவரென்போர்யாரவர்வாலிபத்தில்
எப்படித்தவத்தைச்செய்தாரெவ்விதமுலகநாதன். 1

ஆகியஸ்ரீமன்னாராயணனருட்கருகரானார்
யோகியல்சூதரேநீருரைத்திடவேண்டுமென்ன

ஹாகியல்குதர்தாமும்கிழ்ந்துசொல்கின்றார்கேளும்
போகியல்ஞானவாழ்விற்புகுசவுநகரேமேனாள். 2

அந்தமாதுருவர்பாலனாயிருக்கும்போதன்னார்
எந்தமாதலத்திலேதானிருந்தவமினிதுசெய்து
முந்துசாசுவிதமாகமொழியிடந்தனையுற்றாரோ
ஸீமந்தராமவர்சேர்தற்குவாய்த்ததுமகிதலத்தே. 3

சவுந்தராரணியமானதலமதன்மகிமைதன்னை
உவந்துநான்சொல்லுகின்றேனோங்கியமனுவென்றோத
நிவந்தவைவசுதவேந்தினெடுந்தனிக்குமாராகிப்
புவந்தனையசற்றுத்தானபாதரென்றொருவர்வாழ்ந்தார். 4

அவனாநீர்கேட்டிருக்கலாகுமேயவர்தமக்குத்
துவளில்வைணவரேயாகந்தோன்றலார்தோன்றமுன்னே
பவமகன்றிடுமுத்தானபாதரெத்தவஞ்செய்தாரோ
உவமைதீர்துருவரென்பாரொருவர்வந்துதயமானார். 5

நீதிசேர்அரசனுக்கிகழுமுத்தானபாதர்க்
கோதியசுநீதியென்றுமுவக்கின்றசுருசியென்றும்
தீதிலாக்குணத்தின்மிக்கதெரிவையரிருவர்தம்மில்
ஆதியாளொழியப்பின்னையவளவர்பிரியமுள்ளான். 6

இப்படித்தருமமாகவிராச்சியபாலனஞ்செய்
தொப்பிலாதொழுகுநாளிலுனாத்தவச்சுநீதியென்பாள்
தப்பிலாவரசன்செய்ததவப்பலனாலேநோன்பின்
ஒவப்பெனத்துருவர்தோன்றமற்றவனும்பெற்றாளே. 7

ஒருபிள்ளையிருவர்தம்மிலுத்தானபாதரென்போர்
மருவியவிளையாள்பெற்றமைந்தன்மேற்பிரியமென்மேற்
பெருகினர்மூத்தாள்பெற்றபிள்ளைமேற்பிரியங்குன்றித்
திருகினரெனினுமேதுந்தீதிலாத்துருவரென்போர்.

மாலரிதமக்குநேசம்வளரநன்கிருந்தாராகிச்
சீலமோடமருநாளோர்தினந்தனிற்சுருசியென்பாள்
பாலனையரசன்மிக்கபரிவொடுமடிமேல்வைத்துச்
சாலவும்விளையாடிக்கொண்டிருப்பதைத்தாமுங்கண்டு. 9

அப்படிக்காடல்செய்யவரசன்றன்மடிமீதேற
ஒப்புடனருகில்வந்ததுருவனையுவப்புறாமல்
வைப்பதையாளும்வேந்தனிளையவள்மயலிலாழ்ந்து
கைப்படாதஞ்சிவாளாவிருந்ததைச்சுருசிகண்டு. 10

கனிமிகக்கருவங்கொண்டுநண்ணியதுருவர்தம்மை
முனிவொடுநோக்கிவாராய்மூத்தவள்மகனேநீயென்
றனிமகன்போலவேந்தன்றன்மடிமீதிலேற
இனிதிசைவுறுவாயானாலென்வயினுதித்தல்வேண்டும். 11

அன்னவாறென்பாற்றோன்றற்காகியதவஞ்செய்தாயேல்
நின்னதுவினைவகூடுநீயந்தத்தவஞ்செய்யாமல்
என்னதுசகளைதன்பாலியைந்தளையாதலாலே
உன்னதுவேண்டுகோளுன்றனக்குவந்துறுவதன்றால். 12

இன்னமுமிந்தவேந்தனெழின்மடியென்பதான
உன்னதபதநான்பெற்றவொருமகன்றனக்குவாய்க்கும்
மன்னுமிவ்வரசுமென்றன்மகனுக்கேவாய்ப்பதாகும்
நின்னதுபிறவிக்கேலாதாகலினினக்குநேரா. 13

ஆதலாற்றகாதநீழிறங்கெனவறையக்கேட்டும்
பூதலமன்னர்மன்னன்பொருந்திவாளாவிருப்ப
மேதகுதுருவரென்போர்விளம்பினகேட்டுத்தாதை
காதலில்லாமலஞ்சுங்கருத்துநன்குணர்ந்துகொண்டு. 14

மிகநனிவருத்தங்கொண்டவேதனையுளத்தராகித்
தகவுறவீன்றுளானதாய்முனரழுதுவந்த
மகனதுமெலிவைநோக்கிவாய்மைசால்சுநீதியென்பாள்
நிகழ்வென்னையுரைத்தியென்றுநிகழ்த்துமுன்றேம்பித்தேம்பி. 15

அழுகின்றபாலனார்முன்னன்னையுமழுதிவாய்
இழுதெனக்கரைந்துசோர்வோடென்னதையனேநீ
முழுவினைதுயரத்தென்னைமூடிவறுந்துயரந்தாழ்ந்து
பழுதறுதாய்க்குப்பின்னைபகர்ந்தனபரிவிற்சொன்னார். 16

அன்னதோர்சகளைவார்த்தையானவமகன்றன்வாயாற்
சொன்னபின்சுநீதியென்பாளுளுக்கெனச்சுடருமுற்கை

தன்னைநெஞ்சழுங்கவூன்றுந்தகுதியிற்றளர்ந்துபுண்ணாய்
என்னைசெய்குதுமென்றெண்ணியிரங்கியேமகனைநோக்கி. 17

சொல்லவாய்கூசிமெள்ளச்சொல்லுகின்றனளென்னையா
செல்வநீயழுதல்வேண்டாஞ்சிறந்துபாராளும்வேந்தன்
நல்லநன்மடிமீதேறநற்றவம்விரும்பிச்செய்தாய்
அல்லையென்றிளையாள்சொன்னவதுமெய்யேவருந்திடேல். 18

அரசன்றன்மடிமீதேறியமர்ந்திடவதற்குத்தக்க
விரதமாதவஞ்செய்யாமைமெய்மையேபொய்யன்றென்பால்
வீரவிறலரசன்றந்தைதமற்றவளிளையதாயே
திரமுளவதனுக்காகச்சினங்கொளேற்றெரிதியாகில். 19

தந்தைதன்மடிமீதேறித்தவழ்ந்திடவிரும்பாதென்பால்
வந்தநீசுருசிபெற்றமகனடைபதத்தின்மேலும்
முந்தியபதத்தைச்சாரமுன்னினையுள்ளத்தென்றால்
செந்திருமார்பனானஸ்ரீஹரிமூர்த்திதன்னை. 20

பூசனைபுரிதியந்தப்புவிமகள்கொழுநன்வேண்டு
நேசனன்மகிழ்வாலன்றேநிரந்தரம்பிரமனாதி
வாசவனதிகாரங்கள்வழங்குதலதனாலந்தக்
கேசவன்பூசைசெய்யிற்கிடைத்திடுத்தமநன்மேன்மை. 21

என்றுளமிரங்கித்தன்னையீன்றதாயுரைக்கக்கேட்டு
நின்றவருடனேகொண்டவழுகையுந்தளர்வுநீங்கி
மன்றவுண்மகிழ்ந்துசான்றமதிநலத்துருவர்மாதா
முன்றனிநின்றுநோக்கிமொழிகுவரிதனைமாதோ. 22

வேறு.

அன்னாய்கேணீயன்பொடுசொன்னவவ்வாறே
பொன்னார்மார்பன்பூசைபுரிந்துபுகழ்மிக்க
மன்னாகாரமாலருளாலேவழுவாகா
துன்னாநின்றவொண்பதம்யானேயுறுகிற்பேன். 23

தம்பிக்கென்றோர்தந்தைதனித்தன்பதநல்க
நம்பிக்கொள்கவென்றொருதாயைநமவென்று
வம்பிற்பொங்குங்கொங்கைசுரக்கவலம்வந்து
தம்பிக்கெய்துஞ்சுந்தரமாலைத்தொழவேண்டி. 24

மிகுவிளைவிற்குமுறுமனைவிட்டுவெளிவந்து
நகுநகருக்குப்புறமொருதண்கானலநாடிப்
புகுமுனர்மிக்கதவநலராகிப்பொலிகிற்கத்
தகுமகதித்தோண்முநிவரரங்கேதாம்வந்தார். 25

வருநாரதனைக்கண்டுவணங்கிமகிழ்வெய்தத்
திருமால்பூசைசெயநனிவேண்டித்திட்மான
வொருமாசெயலைப்பெரிதவர்மகிழவுரைசெய்ய
அருமாதவராந்திருநாரதருமன்பாகி. 26

திருவருளங்கொண்டுளதிடமானதொழில்கண்டு
மருவியதருவர்தவமதுபுரியமருங்காதித்
திருநலமந்த்ரந்தந்த்ரவுபாயந்தெளிவித்தார்
தருமவையெல்லாஞ்சவுநகரேயான்றருகின்றேன். 27

கேளீரெவையென்றுலொருவீணைகிளர்தோளார்
ஆளீராகித்திருநெடுமாலுக்கன்பான
கேளீர்வாருந்துருவரேயுப்புக்கினராழி
நீளீரத்துநெய்தனிலக்கோடுறநீடி. 28

எவ்வகையாகிச்செய்துறுபாவமெவ்வயேனும்
தவ்வகைசெய்யத்தக்கதுவாகித்தவமுற்றால்
உய்வகையாகச்செய்வதுவிளைவிலொருதானே
மெய்வகைதர்மக்ஷேத்திரமாகிமிளிர்கின்ற. 29

உண்டதிலேசண்பகமொடசோகமொளிர்புன்னை
கொண்டுயர்ஜாதிபாடலநாரங்கோமெய்ச்ச
மண்டெலுமிச்சைமாதுளைதேமாவண்சாலம்
மிண்டுவருக்கைபச்சிலைதாலமெலடம்பு. 30

ஆதியநேகநன்மாமெல்லாமடர்கின்ற
சாதினிலாவுதண்செடிகொடிவேர்தழைகின்ற
நீதிவிடாதுமூவிருகாலநிகழ்விற்கும்
ஏதினியேனுஞ்சேர்வதிலாதசெயல்கொண்டு. 31

மலர்கனிகளின்மிக்கதுசுவைமூலவகையெல்லாம்
பலநிருமலதிரங்கள்சிறக்கும்படியாகி

நலமிகுமார்க்கண்டேயனையாதிநல்லோர்கள்
குலவுறநீடிப்பலபலகாலங்கொளலாலே. 32

ஆசாரஞ்சால்வதுபலதோஷமனைத்தும்போக்
கேசார்வாகச்செய்திடவலதுகேடின்றித்
தேசார்மிருகபக்ஷிகளெல்லாந்தெறலன்றி
யேசால்வதுதூரத்தினிதாகியெங்கெங்கும். 33

வேறு.

சவுந்தராரணியமென்றுபுகழ்நீடுசெதுரர்
உவந்தவாசிரமமென்றினிதுகொண்டுளதிலே
நிவந்ததாதிலிநெடுந்தவநிரம்பவுறைதிர்
எவந்துளுதுதவமெய்துதலைவேண்டுமினிதே. 34

போயணுவியதிலேபுகழ்புதன்றநமநா
ராயணாயவெனுமந்திரநவின்றுறுதிர்நா
ளேய்வுருதஜபமாதவமுஞற்றுதிருடன்
மாயனானதிருமாலவண்மகிழ்ந்தருளுமே 35

மந்திரமே உபாயம் தந்திரம்ஜபம்பண்ணுகை.

அருளுநீர்மையினருனவனுளன்பின்மகிழ்வில்
தருநினேயமிகலானபதமென்றுதசவார்
திருநன்மால்வடிவமானவவர்சென்றபினர்மா
தருவரானவருவந்துமுனிசொன்னபடியே. 36

வந்தடைந்தனர்சவுந்தரவனந்தனிலொரு
தூந்தருந்தவமுயன்றனருவப்பொடதிலே
சந்தமுந்தவர்தொடங்கினதவந்தனிலிலர்
சிந்தைதழ்ந்துபசிதாகமழைவெய்யில்செறிவே. 37

ஒருவருத்தமுமிலாதுயர்தவஞ்செய்துறலே
நிருவிகற்பசுகசாகரமதாகநினைவு
துருவருக்குறுவதாகியுணவுண்டுதயில்லை
அருவருத்துமனமன்பினிநிரம்புபவராய். 38

உக்கிரந்தவமுஞற்றினரிவ்வாறுறுவதின்
மிக்கந்தவர்வெகுவிக்கினம்விளைப்பனவெலாம்

புக்கவிட்பலம்விராவினபுகந்தகுவரீர்
அக்கலோலகினாயாயறுவவச்செயல்களே. 39

இன்னவாறுமுயலிற்றிரியசிக்கிரகராய்
மன்னலாகிநிலையானமனம்வந்துமருவி
உன்னலாயினருளத்துநெடுமாலுருவமே
பன்னலாயினதுவாய்பகவன்மந்திரமதே. 40

கானலுங்குளிருமின்றிவிழிமூடுகையொடு
மானலந்தருதவஞ்செய்துவரும்பொழுதிலே
ஆனகன்செயலறிந்தடியரன்புகருது
வோனெனுந்திருமணாளன்வரவுன்னினனரோ. 41

பாலனூர்புரியும்யோகமதிலேபரிவனாய்ச்
சாலநீடுதெனதன்புதனிலேபரவசக்
கோலரானதுருவர்க்கினிமைகொள்வரமெலாம்
ஏலவேதரவெதிர்ந்தனனெழிற்கருடன்மேல். 42

பொன்னின்மின்னுமணிபொங்குறுகிரீடமுடியும்
மின்னுகுண்டலம்விளங்குசெவியுங்கவசமும்
மன்னுநூலுமறுவுந்திருவும்வாழகலமும்
பன்னுபொன்னுடையுமைம்படைகளும்பரவவே. 43

நீர்நிரம்பிவருமேகமெனநீடொளிகுலாய்
ஏர்நிரம்பிவரலென்றுதயமெய்துவரைமேல்
சீர்நிரம்புறுநனிலவரைசேர்வதெனவும்
பார்நிரம்புபலபானுவருபண்பெனவுமே. 44

வந்துதோன்றுதிருமாலவண்வயங்குதருவர்
முந்துநின்றுநனிகண்டிதுமொழிந்திடுமுனே
உந்துதந்தவொளியாமமுதுடம்புகுளிரத்
தந்துவிஞ்சுபிரியந்தருதவத்துருவரே. 45

என்றழைத்துமுனரெய்துவினையாவுமகலப்
பொன்றழைத்தமணிமார்பின்றைபொருந்துபொழுதில்
நின்றழைத்துவரநீவினவுகென்றநெடுமால்
முன்றழைத்துவிழிமூடினதிறந்துமொழிவார். 46

வேறு

எனதுநல்விந்தியத்தினையடக்கியதிருவெழில்கொளித்த
வனப்ரபாவத்தினுமனதினைத்துள்பொருள்வடிவுகொண்டு
முனநிலைக்கின்றதோர்பிரமமாம்வேதநன்மூர்த்தியென்று
வினதைபுத்திரனதாகியபிடர்த்தலைநிலாம்விமலனையோ. 47

என்றுசங்காழிவாளெறுழ்வலித்தண்டுவில்லென்னுமைந்து
வன்றிறற்படைதளார்தோள்களுனெனொடிதுழாய்மணமுலாவ
நின்றமாணிக்கமாமலைதனைக்கண்டுதந்நிலைகுலாவித்
துன்றுமாதருவரென்செய்வதென்சொல்வதென்தொழுவதெ
ன்னே. 43

எனமதித்திருகணுந்துளிதுளித்திடவுடம்பெழவியர்த்து
மனதுருகும்பித்துடன்மயிர்சிலிர்த்தின்பமாவளம்விராவி
அனகதத்துவநிலைக்கடலுளேபராபரத்தவசமேவி
உனவெதிர்த்திடுவதொன்றின்றிநின்றுருகுகின்றனர்சொல்கின்றார்.

வேறு. மாலைமாற்று.

* நாகமாநகராவநராகவா—மாகமாநவதாரவதேகமா
மாகதேவரதாவநமாகமா—வாகராநவராகநமாகநா.

(இ-ள்.) நாகமாநகரா-நாகையென்னும்திருப்பதியுள்ளவனே, வந
ம்-அழகிய, ராகவ-ரகுவம்சனே, மாகமா-லட்சுமியையுடையவனே
நவம்-புதிய, தாரவ-துளசிமாலையுடையானே, தேகம்-மேனி, மா-
கரிய, மாக-ஆகாயம்போன்றவனே, தே-தெய்வத்தன்மையுடை
ய, வதா-வரதனே, வநம்-நீர், ஆகு-ஆகின்ற, அம்மா-அம்மானே
ஆகரா-(எல்லாப்பொருட்கும்) இருப்பிடமானவனே, ந-சிறந்த
வராக-வராகாவதாரனே, கநா-மகிமையுடையவனே, நமா-(உன
க்கு) நமஸ்காரம். 50

வேறு.

ஆனந்தபரவசராய்ப்புளகரும்பவானந்தக்கண்ணீரரு
தானந்தமிலதொழுநாதாநீயருள்புரிதிதகநன்றென்று
வானந்தமுறவுரக்கக்கூஉய்க்சதறித்தடி விழுமவ்வாறுவீழ்ந்து
பூநந்தப்புரண்டுநெடுநெடுவ்கியன்புகரையிறந்துபொங்கலாகி. 51

வளங்கிகிளைவில்லாதங்குறுதுருவர்தவநலத்தைமகிழ்ந்துநோக்கி
நின்கொளட்லாழிமாலிருக்ரங்களாற்றடவிநேயங்கூட்டி.

இணங்கவெடுத்தவர்தீரராகிநின்றுவரங்கேட்கவியற்றிவேண்டுன்
அணங்ககலவெனத்துருவர்பகவான்செங்கரம்படுதலாலேநின்று.

வாலிபராகியதுருவரானந்தபரவசராய்மாலைநோக்கி
எலும்வரங்கேட்கவேண்டிநாரதமுதலினோரதமுனிவரினிதுசெ
ய்த, சிலவருளாற்றவத்தாற்சுத்தாந்தக்கரணராய்ச்சிறந்ததன்றி
மாலினதுவெண்சங்கபரிசத்தால்விசேடமதிவாய்ந்தாராகி. 53

நாதனைத்தோத்திரஞ்செய்யத்தொடங்கினர்சங்காழிநாந்தகந்தண்
டோதுறுகோதண்டங்கொளுத்தமனேபத்தர்விழைவுதவுவோனே
போதிலயன்முதலானோருளந்தெரியும்புண்ணியனேபுகழ்ந்துசார்
ந்த, சாதுஜனர்தமைக்காக்குஞ்சாமிசயசயவென்றார்தம்மைநோக்கி.

துருவரேநீர்செய்ததவவலியாற்கிரகமொன்பதுக்குநீரே
மருவியவாதாரராய்மேலானபதவியிடைவாழ்ந்தெல்லாரும்
பொருவரியதுதிசெய்துபூசிக்கவொருகற்பம்போனபின்பு
திருவைகுந்தஞ்சேர்வீரவ்வளவுமன்னையும்பாற்சேர்ந்துவாழ்க. 55

வரந்தந்தேனெனத்திருமாலருள்செய்யத்திருமாலைவணங்கிநோக்
கிப், பரந்தாமனேயிந்தச்சவுந்தராரணியதலப்பண்பரீலன்றோ
அரங்கைசெடவடியேன்செய்தவம்பலித்ததானதினாலெவர்களேனு
நிரந்தரமிங்குறில்வினைதீர்ந்துனதருளாலுயர்கதியினிலவல்வேண்
டும். 56

எனவேண்டுதுருவருக்கீந்தான்றிருமாலவ்வாறேயியைகவென்னப்
பினர்துருவர்திருமால்செய்பேரருளாற்றுயுடனேபெரிதானந்தந்
தினம்வளரமேலானநிலையயர்ந்தாரிதுதெரிந்ததேவரெல்லாம்
தனந்தனிநின்றலர்மாரிதனைச்சொரிந்தாரென்றுசௌனகர்க்குச்சொ
ன்னார். 57

சூதபுராணிகர்பின்னுஞ்சொல்லுகின்றார்சௌனகரேதுருவருக்கு
நாதனருளமுதத்தாலபிஷேகஞ்செய்தருளிநண்ணலான
போதறிந்துமார்க்கண்டரன்பரிடத்ததிபிரியம்பொருந்திநிற்குஞ்
சோதிதிருவடிவணங்கிச்சொல்லுகின்றார்கேண்மினெனச்சொல்ல
லானார். 58

இரண்டாவதத்தியாயமுற்றிற்று. ஆ விருத்தம் 411.

தேவதேவனாகியசகநாதனேசிறியேம்
பாவநாசனேபங்கயக்கண்ணனேபணிவோர்க்
காவதர்னகற்பகதருவேயுன்னையன்பின்
மேவலாகியபூசனைபுரிந்திடவேண்டும். 1

ஆகலாலிங்ஙனாகியவடிவுடனருளி
னிகலந்துறைந்தருள்கவிவ்வனத்திலேநெடிதென்
றேகனைந்துளமுனைத்திடவெம்பெருமானுஞ்
சோகநீதவிரெனச்சிலசொல்லலுற்றனனே. 2

நீவிரும்பியபடிச்சிலநாளிலிந்நிலத்தின்
மேவுகின்றனனதுவனைநீகனிவிரும்பிப்
பூவுடன்புகைகொண்டுபூசனைபுரிகென்று
மாவிரும்புமார்பினனுரைசெய்யமார்க்கண்டர். 3

சாமிநீயெழுந்தருள்வனையானிந்தத்தலத்திற்
சேமமாயுறைகின்றவென்பூசனைசெய்தற்
காமதாகியகிரமமந்திரத்துடனருள்க
மாமினூர்தருமார்பினவென்றடிவணங்க. 4

பாஞ்சராத்திராகமத்திலேபகர்கின்றபடிதான்
வாய்ஞ்சசாத்துவிதம்பவுஷ்கரமெனும்வகையால்
ஆம்ஞ்சதாமிருசங்கிதையவைசொலுமடைவே
தோய்ஞ்சவெட்டெழுத்தாகியமந்திரந்தொடர்ந்து. 5

ஐந்துநல்வகையாகியதீட்சையையடைந்து
முந்துமன்பினட்டாங்கயோகந்தனைமுயன்று
னைந்திடாதெனைப்பூசனைபுரிகுதிநானே
வந்துகூடுவேன்றீட்சைகளைந்தெனும்வகைகேள். 6

திருவிலச்சினையூர்த்துவபுண்டரந்திகழ்பேர்
மருவுமந்திரம்யாகமென்றுரைக்கின்றவகைகள்
குருமுன்னேபெறல்வேண்டுமிக்கொள்கையைக்குறிக்கல்
அருமையானவென்சம்பந்தத்துக்கடையாளம். 7

வேறு.

ஆடவர்தமக்குவித்தையரிவையர்தமக்குக்கற்பு
நீடலங்காரமாகியமித்தபடியேயென்னைக்

கூடவேண்டினர்களித்தக்குறைவிலாத்தீட்சையைந்தும்
தேடருநலத்திற்சேர்வார்சேர்ந்திடார்தேடொணாதே. 8

மாதருக்கணிகள்போலவைணவர்க்கணிகளான
தீசறுமைந்துதீட்சைசிறந்தனபத்திசேரக்
கோதறுமோட்சம்வேண்டிற்கொள்ளுவர்வலத்தோளாழி
மேதருமிடத்தோள்சங்கம்விளம்பியதீட்சைபெற்று. 9

அன்புடனெனையாராதித்தவென்னையடைவர்யாரு
மின்புடன்புகன்றதீட்சையெய்தினோர்தம்முனெய்தித்
துன்பறத்தவஞ்செய்தாலுஞ்சொலுநலமெவைசெய்தாலும்
மன்பெறவளருந்தீட்சைவாய்ந்தவர்தமைச்சேவித்தால். 10.

திரிகரணங்களாலுஞ்செய்வினையெல்லாந்திரும்
ஒருதரஞ்சேவித்தோருக்கொருவருஷப்பேறாகும்
மருவியெவ்விடத்திற்சக்கராங்கிதர்வசிக்கின்றாரோ
அருகியவ்விடத்திற்சேராவஞ்சுவவானவெல்லாம். 11

சக்கராங்கிதமில்லாததலையுடைத்தேவருக்கும்
மிக்சதுவில்லாவன்றோள்வேதிடர்தமக்குஞ்செய்யும்
தக்கதோர்பூசைதானந்தாம்பயனிலவேயாகும்
தொக்கவென்படைகளேந்துந்தோன்றிலக்கணத்திற்றோற்றி. 12

அவைகளுக்கானமந்திரங்களாற்பதிட்டையாற்றிக்
கவைதருமனலிற்காய்ச்சிக்காய்ந்தபின்பூசைசெய்து
நவையறுநியமத்தோடுநலந்தரத்தரித்தல்வேண்டும்
இவைகுலநிலையுளோருக்கேற்பனசதுராசலே. 13

சக்கரமுதலவைந்தின்றாரணத்தாலெனக்கா
இக்கமாமுலகுவாழ்வர்தேவர்பூசிக்கத்தோண்மேல்
தக்கவப்பொறியுளோரைத்தாழ்ந்திடார்கிரியக்காகிப்
புக்கலந்திடுவரின்னும்புழுவதாய்ப்புரண்டுபோவார். 14

என்னுடையடிமையாகவெண்ணினோனூர்த்துவத்தின்
மன்னுபுண்டரந்தரித்துவாழ்வன்மற்றவன்குலத்திற்
றன்னுநாமேலுங்கீழுஞ்சுவர்க்கவீடடைந்துவாழ்வர்
மின்னுமூர்த்துவசன்னமம்விளக்குமொற்றியுற்றேன். 15

அறிவில்லாதென்னைத்தீண்டலாவனெவனெக்காலும்
பிறிவுறுநரகமன்றேபேசியதாசநாமம்
நெறிபுறவெழுத்தெட்டானநீதிமந்திரஞ்சபித்து
குறிகொள்காமியகர்மங்கள்குறித்திடாதெனைப்பூசிக்க. 16

வேண்டுமேற்றெனக்கன்பாகவேண்டினோன்குருவினையும்
பூண்டடிவணங்கல்வேண்டும்புனாகுருவின்பானேர்க்கா
நீண்டியவறிவின்மிக்கானெனினுந்தேசிகன்பாலன்பு
நீண்டிடல்வேண்டுநீகேணினக்கொருநீதிசொல்வேன். 17

வேறு.

சாகலியெனும்பெயர்தழைத்துளவொர்ஞான
யோகிபிரமத்திலுளமுய்த்துணவுபிச்சை
யாகவொருகாலமுழுதுந்தனியமர்ந்து
சோகசுகமாமிருதொடக்குமொருமித்தார். 18

எதிரிசைவினுலொருதினம்புருகலெய்த
யதுநகரிபோயவணமர்ந்தவர்வியாளம்
மதுகரமருவொருவளைக்கைமடமங்கை
கதவுகரும்பன்குழிகள்கண்டுவலம்வந்து. 19

அஞ்சலிபுரிந்துதமதங்கையனதந்து.
சஞ்சலமிலாதுதிரிதன்மையையுணர்ந்து
விஞ்சதிசயங்கொடுவிரும்பியவளைக்கூஉய்ச்
செஞ்சரண்வணங்கிமுறைசெய்துவளர்செம்மல். 20

யோகநிலையிருவகமாகிசனுமக்கே
தீரகவினைவுற்றடியிறைஞ்சுதிரவைக்கென்
போகலனுந்தருதிராவதுபுகன்றென்
மோகமகல்ப்புரிதிரென்றிவைமொழிந்தான். 21

அவ்வகைவினவரசனுக்கறைவதாகச்
செவ்விமுகமன்பொடுதெரிந்துதெரிகின்றேன்
ஐவகையிலெஞ்செயலவைக்குவழிபாடு
மெய்வரவியன்றனனறிந்திடுகவேந்தே. 22

என்றதவ்யோகனாயிறைஞ்சுதல்செய்தேந்தல்
நன்றவையுணாக்கவெனஞானநிலையோகர்

நின்றசெலமைத்தனிலேநீடுநிலைகொண்ட
தொன்றரவெனப்பிறரிலுற்றுறைதல்கற்றேன். 23

ஆதலினெனக்குமனையர்வதையமைக்கும்
நீதனுரகன்றதுமலர்க்கண்வருதேனைக்
கோதறவருந்துசெயல்கொண்டுறையும்வண்டி
னீதநெறிகண்டுபிறரீதலினிறைந்தேன். 24

சோரபுருடற்கிடுகசோறெனவொரேதில்
வாரமனையாள்வயின்வழங்கரிசிலைக்கொண்
டாரநிறைநாழியினளந்தழிசிலம்புங்
கோரவளைசிந்தியொருகோல்வளைகைகொண்டாள். 25

ஓர்மகள்கையோர்வளையுறைந்துகலகம்போம்
நீர்மையைநினைந்துதனிநிற்குநிலைநின்றேன்
சீர்முழுதுணர்ந்தவொருசேவகன்விறுவ
நேர்முனைமொழுந்துபுலைகீடிலமுனேரே. 26

வல்லதிலிருந்துசதுரங்கமொர்டோர்மன்னன்
செல்லலறியாததுதெரிந்துமெய்தெரிந்து
கொல்லனயமுளழல்கொளுத்திமிசைகொட்டச்
சொல்லவறைகின்றசெயல்சோர்விலதுசொல்ல. 27

நானுமறைநாதனடிநட்டுமெனநாணு
தேனுறுதலாயினனொரென்பிசகுருது
கூனுறுகுவெட்டுகுழிகொண்டுபொறைகோடல்
மானுறுதலாயினன்வருத்துதன்மறந்தே. 28

இப்படியொரைவர்களிடத்துமுபதேசஞ்
செப்பமொடுபெற்றநெறிசெல்கைதெரிவித்தார்க்
கொப்பவழிபாடுசெயலுற்றதெனவோத
மைப்பகடனுனவர்மலர்ச்சரண்வணங்கி. 29

தேசிகரெனக்குநலமையன்றியபரேட
லாசெனவரித்தவர்தமாதரவுகொண்டு
மாசின்மிருகண்டுமகனேவலவைராக
மூசுநெறிநின்றனன்முமுட்சுவெனலானேன். 30

சமதமங்நிறைந்துருதாளிணைதமக்கு
நமவெனநல்லனைபிதுநன்கடவுளாக
விமலனென்வேறுகுருவேண்டுவதைவிட்டு
நிமலநிலைநிற்பதுநனெஞ்சினிலைநிற்றி. 31

என்னுமாவழாமலினியானுமையடுத்து
நன்னருறுசேவைதருவேனெனநவின்று
மின்னிமறைநாகமிருகண்டுமகன்மேவச்
சொன்னபடியங்கிலைதொடர்ந்துறைதலானுர். 32

செந்திருமடந்தைபதிசேவடிபணிந்த
இந்தவொர்சவுந்தரவனத்தெனவெதிர்ந்து
முந்தவமர்சௌநகமுனிக்குரைசெய்சூதர்
தந்தனர்விளுவவொர்தகுந்தகதையம்ம. 33

மூன்றுவதத்தியாயம் முற்றிற்று. ஆ விருத்தம் 474.

நான்காவதத்தியாயம்.

சவுநகமஹாமுநிவரேமிகுசவுந்தரவனந்தனிலுறைநந்தவனாகதுக்கமுடனல்குரவுமந்தகனுமஞ்சவமர்வரன்தவமிடசவுந்தரவனந்தனிலொர்வைகவிருவைகல்சமைவானெவனவன்வினைப்பகைகளுனென்பதிலொரையமிலையென்றுணர்திரே. 1

அந்தமில்சௌந்தரவனந்தனிலிருந்துறையுமந்தணர்பசிக்குந்தனம்வழங்கிடினுமொண்பசுவழங்கிடினுமோதுபசுவாய்முந்துபுல்வழங்கிடினுமற்றவர்பிதிர்க்கணனிமோதமுறுவார்வந்தயனுருத்திரன்முதற்புலவர்யாவரும்வதிந்துறுவரே. 2

தங்கணிலைகூற்பமுடிவிற்றபுமெனக்குளிர்சவுந்தரவனத்தெங்கணிலைபின்னதெனவெய்துவர்புழுக்களொடெறும்பெனவுமேபுங்கநிலையெய்திடவிரும்பிமுனிபுங்கவர்பொருந்துவர்புதற்செடிகளாய்,அங்கவைதமைத்தெறிலருந்தவமாயேயெறிதலாய்முடியமே

இந்தநல்வனந்தனிலொரேழைபெறவேதெனினுமீகுறிலதுமுந்துமளவின்றியனதானமறவோர்செயமொழிந்தகுருக்ஷேத்திரனிலே, வந்தகையயிற்றருசிராத்தமெள்ளுத்தானம்வருசெங்கதிர்க்கிரகண, நந்துபுனலில்விடந்தன்னிலேஜலதானநவில்சித்திரகூடத்திலே. 4

தனதானமாமஹோமபலமதனில்வஸ்திரதானமேதானியதானம்
புனலிடுகங்கையங்கரையிலிடபாசலம்பொருமிரும்புத்தானமே
வனயமுனையங்கரையிலாக்களுக்குப்புல்வழங்குதல்கிரிவிரசமூ
டினநெலெண்ணெய்த்தானநந்தகோகுலமதனிலிந்னந்தானமாமே.

கோமதிக்கரையிலேயாவழங்கிடுதெல்லாங்கூறுகார்த்திகைமதியிலே
ஆம்விளக்குத்தானநன்மதிகளுக்குவித்தைத்தானம்வைதிகர்க்கு
மாமடவார்க்குனமாகுடும்பிக்குநிலம்வள்ளான்மைமுதலவெல்லாம்
காமரித்தலனிலொருசோகிதருவதிலைக்காலுமொவ்வாதறிதிரே.

இத்தமாதலனில்வதிவைணவமறைக்குலத்தேழைபெறவேயெர்
சோகி, தந்தவன்கோடிபொன்றலைவனுதுவனிச்சவுந்தரவனத்தன்
னிலை, எந்தவகையாயினுந்தந்தவன்கொண்டவனெனுமிருவருங்க
கிரினூ, டந்தவழியேசென்றநண்டவைருந்தபதியடைவதற்கைய
மிலையே. 7

இந்தலந்தன்னிலோனமேதானமேயெண்ணுஜபமேசெய்தலுமே
தத்தறுநலோமமேவிண்டுவின்பூசையேதாவிலெதுசெய்தபோது
ஒத்தவொன்றேகோடியாய்வளர்வுறுங்குறைவுறுதென்னசொல்லு
வேனுன், மெத்தவிதன்மகிமைமுடியாதுவினவுறுதற்கும்வெகுகா
லமாமென்னவே. 8

வேறு.

சாற்றுசூதனைநோக்கிச்சவுநக
ரேற்றமென்னிதற்கீதுவியப்பதே
போற்றுவாக்குக்கும்புந்திக்கும்போதரா
கோற்றமாதவத்தீர்நுவல்கென்றனர். 9

சூதரானவர்சொல்லமிகமகிழ்ந்
தாதரத்தினரானசவுநக
மாதவத்தினர்மாமுகநோக்கியிங்
கேதுரைத்திடுமென்றுசொல்கின்றனர். 10

சவுந்தராரணியத்தலந்தானுடை
சிவந்தமாமகிமைக்குநிகரிலை
உவந்துகாரணப்பேர்வந்ததோதுவேன்
தவந்தனிற்சிறந்தீரென்றுசாற்றுவார். 11

மேயுமந்தரவெற்பிடைமுன்புசு
வாயம்பூவமனுமுனிவோரொடு
கேயமாகநெடும்பகற்செய்குவ
தாயமாமகமாற்றினரென்பவே. 12

உலைசெய்மாமகத்துற்றனருக்கிர
விரதசிலரநேகர்வியந்துறச்
சரதமாய்மகத்தானடக்கின்றபோ
திலைசெய்வேதமுனிவரரென்றுளோர். 13

ஒழிவதானவொருபொழுதிற்கதை
மொழிவதாகிமுளரியினுடிருக்
கொழுநர்பூசைகுறிக்கொடுசெய்தலே
விழுமிதென்றுவிளம்புபொழுதிலே. 14

ஊரிலேசிலரைம்முகன்பூசையுந்
தவறிலாதுசெய்தக்கதென்றோதினார்
இவருமற்றையவருமிணங்குரு
வவையுணர்ந்துசுவாயம்பூவானவர். 15

சுத்தசத்துவத்தோமில்கல்யாணகு
ணத்திரகூகனம்புயக்கண்ணினன்
பொய்த்தவில்புருஷோத்தமன்பூவில்வாழ்
மெய்த்திருப்பதிமேவரிபூசையே. 16

வேதியர்க்குறும்வேதியர்தெய்வமும்
ஆதியச்சுதனேயலதென்றிலை
நீதியற்றுதமோகுணதேவனு
நீதியிற்சிவனைத்தொழுநேயமே. 17

அந்தணர்க்குத்தகாதென்றறைந்திட
நிந்தையற்றமுனிவரர்நேர்சொலார்
தந்தரத்திற்றவநிதிதானென
வந்தவப்பிருகுக்கண்வந்தாரரோ. 18

வந்தவர்க்குச்செய்வந்தனைசெய்தியாம்
முந்தவேண்டுமுனிவரரேதெரிந்

தெந்தமக்கியலையமெய்தாதுறத்
தந்தளிக்கத்தகுந்தசமர்த்துளீர். 19

விரதமேமுதலாகியமெய்த்தவத்
தரசர்நீரெனயாங்களடைந்தனம்
சரதமாகவினீர்சிவன்றன்னுழை
நிரவுசத்துவநீர்மைதெரிதிரே. 20

சத்துவக்குணஞ்சங்கரனெய்துறில்
உத்தமத்திருமாலெனவுன்னியாம்
நித்தபூசைநிரப்பிநின்மாவியஞ்
சுத்தமென்றுதொழுதுகொள்வேமென்றார். 21

அன்னதாகவென்றந்தப்பிருகுவுஞ்
சொன்னமாதவர்தேறத்தொடர்ந்தரன்
மன்னலானகயிலைமலையிடை
முன்னர்வந்திடபக்கொடிமொய்ம்பினோன். 22

உறைவதெவ்வயினென்னவுசாவியே
குறைவில்கோபுரவாயில்குறுகலு
நிறையுமுக்கிரநீள்வடிவத்தொடு
கறைகொள்சூலவெங்கைநந்திதோன்றவே. 23

கண்டுவல்லனெல்லாமெனக்காமுற
மண்டுமெவ்வுலகுக்குநன்மங்களம்
உண்டுபண்ணுமொருதனித்தேவனை
அண்டுகின்றததுதெரிதற்கரோ. 24

வந்தனன்பிருகென்றுவருக்குமோர்
அந்தணன்னென்றறிவித்திவல்லைநீ
முந்தரற்கினியென்றுமொழிந்திட
நந்தியென்றசிவகணநாதனும். 25

மிக்கதேசுடன்மேவுபிருகுவை
உக்கிரத்துடனோக்கியுங்கிது
தக்கதன்றுசமயமெஞ்சங்கரன்
முக்கட்டேவிகலவிமுயன்றுளான். 26

போதல்செய்தியெனிற்பிழைபோதரும்
ஆதலாலியடைகுதிமீண்டெனக்
காதல்செய்வதுபோற்சுடுகிச்சொல
வேதனனபிருகுவினவுற. 27

அஞ்சலின்றியுள்ளாகவடுத்திட
நஞ்சுபோலக்கொதித்தெதிர்நந்திதான்
விஞ்சியேசுவிடாதுதடுத்திட
நெஞ்சுநொந்திருந்தானெனடுகொளரோ. 28

காத்துவந்ததன்காரியமுற்றுற
தீர்த்துவண்டுசிந்தாகுலமாகியே
வேர்த்துவெள்விடையோனைவெகுண்டுநின்
றுர்த்தொர்சாபமறைந்தனனென்பவே. 29

வேறு.

அந்தணனென்றும்வாயிலடைந்துளானென்றமெண்ணு
இந்தவெற்பாளியென்னையிகழ்ந்தனன்மனைவியோடு
சந்ததம்புணர்ந்திருந்ததன்மையாலிவன்றன்கோசம்
சிந்துகலிங்கமாகிமறையவர்செய்கைதீர்ந்து. 30

தாமதகுணத்தின்மிக்கதன்மையாற்பூசியார்பி
ராமணராகலிங்கத்தாட்டுநன்னீர்தொடாது
பேரிளவாகநின்மாலியம்புனர்பொருந்துகிற்க
நேமமாயெவருமுண்ணுநிவேதனமாகவென்று. 31

பின்னருஞ்சிவனைப்பூசைபெறுத்துவோரெல்லாந்தண்ணீர்
மன்னியலிங்கமென்புமணந்துபாஷண்டராகித்
துன்னலைதிகரேயாகவென்றுபைந்தோகைபோலு
மன்னயுக்கவுரிதன்னைநோக்கியேநவில்வதானான். 32

என்னொடுபேசவொட்டாதிறைவனைமயக்கிக்கூடி
உன்னொடுகலக்கவைத்தாயுறுமெனையெவளவேனு
மன்னுதலாகவெண்ணுமதியினையாகலாலே
நின்னுருவிகாரமாகிநீங்குகவெனுமுன்னிலி. 33

முன்வந்துபிருகுவென்னுமுனிதனைவணங்கியேத்தி
என்னுந்தவரவென்றேலாதிருந்தவென்பிழையைநோக்கேல்

மன்வந்தரவத்தின்மிக்கவரமுனியேயென்றந்த
மின்வந்தவிடையாள்வேண்டிவேறுசெய்தருள்கவென்றான். 34

வேண்டியவுமையைக்கண்டுவெகுளலனாகியந்த
மாண்டமாதவத்தோனுள்ளமகிழ்வொடுசிலையைநோக்கிக்
காண்டகவென்முன்வந்தகவுரிநீகாவேரிக்கு
நீண்டதென்கரையிற்கண்ணனெடுவனநடுவிற்கீழ்பால். 35

கடற்கரையோரத்தோர்காந்தாரமுண்டதனைக்காணக்
கிடைத்தருந்தவஞ்செய்தாயேற்கிளத்தூமத்தலத்திலேநீ
படைத்துளவிகாரந்தீர்வைபாவனத்தாலேயென்று
நடைத்தவன்மீண்டதெல்லாநவின்றனன்முனிவர்தேற. 36

கேட்டவம்முனிவரெல்லாங்கேசவனேபார்ப்பாருக்
கீட்டியதெய்வம்வெள்ளேற்றினன்றெய்வமாகானென்று
நீட்டினனிலையதாகவியமித்துப்போந்தார்பின்னர்
கோட்டியவிகாரங்கொண்டகோற்றொடிகுமித்துவந்தாள். 37

அவ்வனத்தளவில்காலமரிதனைநோக்கிகோன்பு
செய்வனசெய்யமுந்திச்சிதரன்விகாரம்போக்கி
யவ்வனசௌசவுந்தரம்பெற்றினிதவள்மகிழச்செய்து
நைவனதவிர்ந்துநீகேளான்றருவர்த்தையென்ன. 38

மாலடிவணங்கியேத்திமலைமகள்விகாரம்போக்கிக்
கோலநல்வடிவுசாலக்கொடுத்ததிவ்வனமெனக்கே
தேலநற்சவுந்தராரணியமெனவினியநாமம்
ஞாலமீதிற்கவிந்துஞாயிறுண்டாகுங்காறும். 39

என்றவள்வேண்டுகோளுக்கிசைந்தங்ஙனாகவென்று
சென்றனன்விசுவநாதன்சிவன்மிகமகிழுங்கோலம்
துன்றுசுந்தரியென்றோர்பேர்சூடினள்கூடியின்று
நின்றசித்திரகூடத்தினிலைகொண்டுவிளங்குகின்றான். 40

அதுமுதற்சவுந்தராரணியமெனநாமமான
திதுசவுநகரேயென்னவிசைத்தனரெவையுந்தேர்ந்து
முதுமறைநீதிகூறமுயல்முனிவர்களெல்லாம்
கதுமெனவணங்கியுள்ளங்களிகொளச்சூதம்மாதோ. 41

நான்காவதத்தியாயமுற்றிற்று. ஆ விருத்தம் 515.

கேளுமாதவச்சவுனகவேயின்னங்கிளத்த
நீளுகின்றதச்சவுந்தராரணியத்தினிலைமை
ஆளுகின்றவத்தலத்திலேதெளிந்துதண்ணமைந்து
தாளுலாயசெந்தாமரைச்சாரபுஷ்கரணி. 1

என்னலாகியதீர்த்தமொன்றுளததுவெல்லாம்
மன்னலாகியபாக்கியவகைமிகவழங்கும்
இன்னல்போக்குநன்னதிகளின்சாரங்களெல்லாம்
துன்னலாகியதீர்த்தமென்றன்மந்ததுசொல்வில். 2

ஆதிநாயகன்சவுந்தராரணியத்திலமரப்
போதுவானினியென்றுமுன்னேயிந்தப்புவியிற்
றீதுதீர்த்துறுநதிகளின்சாரங்கடீண்டு
கோதிலாவொருதீர்த்தமாகியததன்கொள்கை. 3

ஆதலாலதுசாரபுஷ்கரணியென்றறைபேர்
நீதமாயதுமற்றதின்மூழ்கினோர்கொடிது
பாதகங்கள்செய்துறினும்ப்பாவங்கள்பண்ணுஞ்
சாதுசற்சனராகியேமாலடிசார்வார். 4

சித்தரோடுயர்தேவருக்குங்கிடையாதவ்
வுத்தமப்புனலாடிடப்பலபலத்தொன்றில்
அத்தடத்திலாடப்பெறிற்பாவங்களனைத்தும்
தொத்துறுதுசாசுவதநன்னிலைவந்துதுன்னும். 5

அந்தமாநல்லதீர்த்தத்திலொருதரமாடில்
நைந்துபோம்பிரமகத்தியுங்கள்ளுணலையும்
எந்தமாபெரும்பாவமுமினிததிலாடித்
தந்ததானநற்றவஞ்சிராத்தந்தருப்பணமே. 6

ஓமமாதிகள்செயிலொன்றுகோடியாயுயரும்
நேமமாயதின்மூழ்கியேயதிதியாகிமலி
சேமமாயொருமூன்றுலகாளுமச்செயற்குக்
காமராயிரங்கண்ணனைப்பயந்தனள்கவின். 7

சசியுமூழ்கியத்தானத்திற்போகியைத்தழுவற்
குசிதமாயினள்சாலியைவசிட்டனுமுற்றுன்

சசியினுடித்தோய்ாகுடனும்பாம்புருத்துரந்து
வசிவின்மாகதியடைந்தனனுருப்பசிவந்து. 8

மூழ்கியோர்புரூரவாவொடுபுணர்வுறுமோகம்
வீழ்வதாயினள்சோதியஞ்சக்கரமேவச்
சூழ்வதாயினர்துருவருமன்னதிற்றோய்ந்து
வாழ்வதாயினர்மூழ்கிமற்றென்றுமார்க்கண்டர். 9

மழுவதேந்தியோர்மால்வடிவாயினர்வந்து
முழுகியேசமதக்கினிமைந்தருமுழுகிப்
பழுதின்மாதவர்பலர்தவவிரத்தியைப்படைத்தார்
கழுவிலிஷ்டசித்தியையடைந்தனர்பலர்கண்ணி. 10

இன்னுமற்றதின்மூழ்கினோர்யாவரேயெனினு
மன்னுவாரிஷ்டபோகங்களையமின்மரணம்
துன்னுவாரெனிற்கரையினிலவர்பவந்தொலைந்து
பன்னுவைகுந்தமேபதியாய்நனிபயில்வார். 11

வேறு.

சாரபுஷ்கரணியென்றமைதடப்பெருமையை
யாருரைப்பவரிலாயினுமதைத்தெரியவே
நீர்விருப்பொடுவினவுறநிரப்புவெனெனப்
பாரமெய்த்தவர்விளம்புவர்பழங்கதையரோ. 12

சவுநகத்தவநலீர்வினவுமுன்புதகைசால்
அவமில்விந்தியதேசத்தின்மறையங்கமறிவான்
உவமையற்றவசுவென்னுமொர்பிராமணனுவப்
பவருபுத்திரரெனற்கிருவர்பண்டுளரரோ. 13

சுந்தனோடுறுசுகந்தனெனவந்தகயவர்
தந்தையானவரிறந்தபினவண்டவிர்தலாய்
வந்தொர்தேசமதிலோரகரம்வாழ்சிறுவருக்
குந்துபோதகவுபாத்தியரிலுற்றனரரோ. 14

சிலபகற்செலவிருந்தனர்நெடுந்திரவியம்
பலபடைப்பதுவிரும்பினர்பதிந்திவசமு

டுலவியுண்பதுசெய்தந்தைசவிலைக்குசவியும்
புலயரில்லுணல்பொருந்தினர்பொருட்பெருகவே. 15

ஐந்துகோடிபொன்னமைந்தவளவாயினபினர்
முந்துதம்பதியடைந்துமுதலானரெனலாய்த்
தந்தநல்லுணவயின்றனரிருந்துதகவால்
நந்துபொன்பிசிவுபத்துறவடைத்தினரரோ. 16

பொதுமடந்தையர்மதுக்களிபொருந்திடனடம்
கதுவுகின்றவர்பனீர்புழுகுகந்தவகைபூ
மதுரமானவிகடகவிகள்வழங்குகவற
சதுரஞனவிறைதாவுபரியானசிவிகை. 17

தொண்டுதேடியசமக்குமயல்கூறுகிறபா
ஷண்டரென்றவிவரையிருவருந்தழுவவே
மிண்டுகின்றவராபாத்திரவிதச்செலவுசெய்
தண்டுநல்வகையிலெவ்வளவுமீதலறியார். 18

இட்டரேழைகிளையாசகரறச்செயல்செயார்
விட்டமற்றிருவருந்தருவெறுக்கைகளெலாம்
நட்டமாயுதவுபிச்சையுணவுண்டுநனிசால்
கட்டமேமிகவலைந்தனருலைந்துகயவர். 19

கண்டபேரிவர்செய்காரியமுணர்ந்துகடுகி
உண்டுபிச்சையெனவின்றியுறவும்பகைகளாய்
மண்டுவேசெறிவனங்களிலுழன்றுவதைசெய்
தண்டுபக்ஷிமிருகங்களையயின்றனரரோ. 20

இப்படிக்களவுமேபுரிஞராகியியலக்
கைப்பிடித்தரசகாரியர்சிறைக்களனிலே
வெப்புறுப்புரியும்வேதனைபொறுத்துவெகுநாள்
வைப்பவத்தெநல்பொறுக்கிலர்மயங்கினரரோ. 21

மிக்குறுந்துயரினுலிரவில்விம்மிவழுவா
லமக்கனம்புகுசுருக்கின்மரணம்பெறுதலாய்
உக்கபோதுகமனுந்தவ்ருதாதருவனாக்
கைக்கட்டற்குறுகயிற்றினளிகட்டினரரோ. 22

கட்டியீர்த்தனர்கடிந்தனுருறக்கதைகளாற்
கொட்டியோர்மதிவழிச்செலநடந்துகொடுகோ
மட்டில்வந்தவனைவிட்டிடமுனிந்தமறலி
யொட்டிமற்றவரையோர்க்கிவையுரைத்தனனரோ. 23

இருவரில்லொருவனைத்தெறநமக்கிலையெலாம்
தருமொர்நாதனருளாணையதனாற்றவிர்திராய்
மருவுபூசனைபுரிந்துசெலவிட்டுவருமற்
றொருவனுழ்நரகமேழினுமுழன்றலையவே. 24

செய்ததண்டனைமிகப்புரிதிரென்றதுசெவிப்
பெய்ததூதரிவர்தம்மிலெவனைப்பிரிவுறத்
தெய்துகிற்பதெனவேயிளையவிங்கிவனைநீர்
னொய்துவிட்டவனைநூக்குமினளற்றெனலுமே. 25

இளையவன்றனையிறுக்கினபிணிப்பையிறுவித்
துளைவுறுதுவிடவொற்றர்முனுரைத்தநமனைத்
தளையுறுதொருவுதம்பிதவிராதுசைமினிக்
களைகணாயெனவணங்கியிதுகட்டுரைசெய்வான். 26

நானுமென்றமையனும்பிறவிநண்ணியெவள
வேனுநன்றிபுரிகின்றிலமிழைத்துளபிழைப்
பானுடன்றுறவினோர்விடவலந்துபசிமிக்
கூனுகர்ந்துகளவும்புரிதலுற்றரசனால். 27

மிக்கதண்டமதுகொண்டுயிர்விடுத்தவெம்மையிங்
கொக்கவேகொடுநிறுத்தர்வரவென்னையொருவேன்
பக்கனீதயைபுரிந்தருளென்றுபகர
நக்கவம்மறலிகேளெனநயந்துரைசெய்தான். 28

நீவிர்தீமதிகளுக்கொருநனேயர்தொலையாப்
பாவிமீர்நனிபடாதனபடத்தகுவிரே
ஆவிர்நும்மையரசன்படரடர்ந்துமுடலைத்
தீவிராவுகிலனிட்டனர்சிதைத்துமிகவே. 29

இட்டபின்கழுகுகாகநரிநாயிவையெலாம்
பட்டதுந்தலையருந்தினபறந்தகழுகொன்

றெட்டருந்தசையெனும்பொடுகொடுண்டுவெறிதாய்
விட்டவென்புவிழலானதுவினைத்தொடர்பினால். 30

சாரபுஷ்கரணிதன்னிலதனுளூனையடும்
பாரமாயவினைபற்றறுதலாகியதுவென்
கோர்கிலாதுசெலநின்னைவிடலாயினனினித்
தூரமேமனகடந்தவழிதுன்னுகெனவே. 31

மறவிதல்லறவழிச்செலுதியென்னவெளிவந்
துறமுன்னுணவுணர்வுற்றுளசுகந்தனொருநீ
டறகனேயமுளனுகிவினையாவுமறமெய்த்
திறமுடன்புவிஜெனித்துறைசெய்தீர்த்தமதிலே. 32

வந்துமூழ்கிநெடுநாள்வளாவரத்தமையனு
மெய்ந்துதீவினையினல்வழியுறத்தகவுடன்
சந்துநித்தியபதந்தனையடைந்தனனதால்
முந்துபுஷ்கரணியெண்ணில்வருமூழ்குபயனே. 33

என்றுசூதரினிதோதவினவிச்சவுநகர்
துன்றுமாதவரெலாருமகிழ்தன்னியலடைவே
குன்றுபோலுயர்குணங்கொடுறுசூதரடிநேர்
நின்றுவந்தனைசெய்துந்துதிநிரப்பினரரோ. 34

ஐந்தாவதத்தியாயம் முற்றிற்று. ஆ விருத்தம் 549.

ஆறாவதத்தியாயம்.

சாரபுஷ்கரணியின்றன்மையைத்தவநலீர்
ஓரவின்னமும்மக்குரைசெய்வேன்யானெனத்
தேரமெய்ச்சூதபௌராணிகர்செப்புவின்
சூரவர்க்கிணையுளாரறிகிலேனறையவே. 1

இந்திரன்றிசையிலேயிணையில்கோதாவிரி
செந்தழற்றிசையிலேகங்கைதென்றிசையிலே
சிந்தைதீர்துங்கபத்திரைநிருதித்திசை
வந்துலவுஞ்சரசுவதிவருணன்றிசையிலே. 2

பொன்னிகாற்றிசைவரும்பொருவிலாயமுனைசீர்
மன்னரன்றோழன்வாழ்திசைவருங்கண்ணையீ

சன்னுறுந்திசையிலேபொருனையேய்வுறாநீத்
துன்னுயேருமதையென்றுசொல்வனவரோ. 3

இந்தவொன்பானுமீதிடையுறுஞ்சுசிபெறத்
தந்ததென்றிந்திரன்ருனுமுன்கண்ணனோ
டந்தரம்பாரிஜாதப்பொருட்டமர்செய்த
நிந்தைதீரக்கிழக்கெய்தினீராடினான். 4

ஆதலாலேகிழக்காடினால்விண்டுவுக்
கேதுபாவஞ்செய்தாலுங்கெடுமெரிமுனே
தீதுதீர்சவுத்திராமணியெனத்தெரிமகத்
தோதுகள்ளுண்டதீவினைகெடற்குன்னியே. 5

தனதுதிக்கிற்புகுந்தாடிமற்றதுதவிர்ந்
தனனதிற்றென்கிழக்காடினால்மதுவுணும்
வினைதெறித்திடுமதின்வீறதோர்வுறவுமக்
கின்ம்விரித்துரைசெய்வேனினியதோர்கதையரோ. 6

என்றுசொல்கின்றதேதெனிலசாமிளன்முன்
றுன்றுதன்குலநலந்தூரவேசெல்விடுத்
தொன்றுமாபதிதனுயுறமிகுந்தாழ்விலே
நின்றுதன்னுவ்போகிலையிலேவிலைகலாள். 7

பெற்றதன்பிள்ளைதன்பெயரைநாரணனெனச்
சொற்றழைக்கின்றதோர்சூழல்வாயமன்விடும்
ஒற்றர்வந்தவனைவன்கயிறுகொண்டுரம்விசிப்
பற்றம்வந்தனராரிக்கமைவுறுந்தூதரே. 8

அவர்பிணிப்புற்றகட்டவிழ்தரப்புரியவே
இவரவிழ்க்கின்றதற்கென்செய்வோமெனவெரீஇ
உவரகன்றேகுடியீதுரைசெயச்சமன்மனங்
கவர்சினக்கொடுபினுங்கருதிநின்றுரைசெய்தான். 9

வெருவன்மினீர்சாமிளனுவின்யவிடுந்
தருணநாரணனெனச்சாற்றினன்மகனைமற்
றருமையாயினவதாலரிவிடுந்தூதர்நும்
பெருமைதீர்வுற்றெதிர்ந்தனரெனுபேசியே. 10

பகவஞ்சமஞ்சொலிப்பரிவின்மற்றொருவனை
முகமனைபுரியினுமுயல்விநோதங்கொடு
புகலினும்பிழைபடப்புகலினும்பவமெலாம்
அகலுமற்றவனுமத்தகையனாயினனரோ. 11

அரிதனுமஞ்சொல்வோர்க்கதிகனுனலனினிப்
புரிவதேதுணர்கிலாதிதுபுரிந்தனமயன்
றெரிகலாவொருவனுமஞ்சொல்வோன்றிறனினும்
பிரிவரும்பிழைசெய்தோம்பெயர்வதெவ்வாறெனு, 12

கருதினன்சாரபுஷ்கரணியின்றென்புறந்
திருவினாயகனுளந்தெரியநீராடினன்
வெருவுறுந்தூதரோடதுதனால்விண்டுவின்
பெருமைதேர்குநர்வயிற்பிழைசெய்வோர்தாமெலாம். 18

சாரபுஷ்கரணியின்றென்புறந்தன்னிலே
நீரகின்றுடுவார்நிருதிதன்றிசையிலே
நாரம்வந்தாடினுனுடிமுன்னுளிலே
சீரின்மாமுனிவனைத்தெறுமறுத்திரவே. 14

ஆனதாலத்திசைக்கணுகிநீராடினால்
மோனமாமுனிவனைமுந்துமந்தணர்தமை
ஊனவெங்கொலைசெயும்பாவமுமுறுதிசால்
ஞானநன்காலவர்நனிதரித்திரமுள்ளார். 15

வெஃதுகுடும்பத்துடன்மெலிகுவார்வருணனூர்
மகிழ்தருந்துணைவிபால்வந்திரந்தேபெறத்
தகுவதாகியமணித்தங்கவொண்சாதரா
நெகிழ்மலர்ப்புன்னைநன்னிழலடிக்கவினவே. 16

வைத்துவேறொருவயின்வைகவவ்வருணனங்
குய்த்தவொண்சாதராவுறுவதென்னெனவுணர்ந்
தத்தைதநன்கோர்தராதங்கைகொண்டனாகியார்
இ[illegible]ங்கேகிடத்தினர்சொலாயென்னவே. 17

தனதுதேவியைவினவிடவவடந்துரேன்
புனிதனங்கணன்வயிற்பொருமிடிக்கென்னலும்

அனாகடைத்தெரிவைநீயந்தணற்கீந்ததைப்
பினர்கவர்ந்தனன்மிகப்பிழையிதென்புரிவதே. 18

எனமனத்துயர்கெடுத்திடவெணித்தன்றிசைப்
புனல்படிந்துறுதிருட்டதுதெறீஇப்போனதால்
அனதிசைக்கணுகிநீராடினாற்களவினா
யினமறக்கெடும்வளிக்கிறைவனாயுலவுவோன். 19

தெய்வமந்திரிபெறுந்தேவியைப்புணர்வதால்
எய்துவெம்பவமகன்றிடவவன்றிசையிலே
செய்தனன்படிதலைத்தெரிவுறக்குருமனைக்
கெய்தினானத்திசைக்கெய்திநீராடினால். 20

நீர்வனப்பவமரன்றேவிதன்றிருமுகம்
பார்வடுக்கொண்டோர்கண்பழுதுபட்டளகையான்
நேர்வடக்குத்துறைநீர்குடைந்தனபவம்
பேர்வதாகவின்வடாதிசைநணிப்பிரளயம். 21

தோய்தரிற்பிறர்மனைத்தோகைமாரழைத்தநன்
காய்தரும்பவமெலாமகலுமீசானியன்
காய்தலிற்றக்கனைக்கடிதுறும்பாவம்வின்
டோய்தரத்தனதுதிக்குதகமாடினனரோ. 22

ஆதலால்வடகிழக்கணுகிநீராடினும்
காதலான்மாமனைக்கடுகுவெம்பவமறும்
ஈதலாதெதிர்துரோணனைவதைத்திடவெணிச்
சாதலாயினன்மகன்றானெனத்தருமனும். 23

சொன்னபொய்யால்வருந்தோமறத்தோய்தலை
மன்னலாயினனடுத்தனிலதால்வலிதுபோய்
பன்னலாயினர்நடுப்படியிலப்பவமறு
மென்னமற்றங்கிருந்தீவசொல்வாரரோ. 24

வேறு.

பொன்னுடைதில்மிரும்புகன்னியொடுபூமி
போசனங்கோகிழக்குமுதற்பொருந்தியவெண்டிழக்கும்
தன்னுதரத்தளவுதந்துங்கவேமர்
திரதானமெங்கணுந்தானியதானந்தரலே

பன்னாளினுஞ்சிறப்பாமிவ்வளவோமகிமை
பகர்வரிதச்சாரபுஷ்கரணிநேரொன்றில்லை
துன்னாதிரேழுலகத்தினுமதன்றீரத்திற்
றலங்குவன்சீதரனானசோதிபொன்னோடமர்ந்தே. 25

ஆறாவதத்தியாயம் முற்றிற்று. ஆ. விருத்தம் 574.

## ஏழாவதத்தியாயம்.

அவ்வாறுசூதபௌராணிகராய்ந்துரைக்க
எவ்வாறுசாரநளினிக்கரைக்கெய்தினானே
செவ்வாய்முகுந்தனதைச்சொல்கெனச்செப்புகின்றார்க்
கிவ்வாறெனப்பின்பியம்பக்களிப்பெய்தினாராய். 1

கேட்பீர்முனிவீரரிவந்ததைக்கேடில்பூமி
வேட்பாரிலாமையறத்தைப்பவம்விஞ்சலாகக்
கோட்பாடுசெய்யக்குறிக்கொண்டிலன்கோதுதீர
மீட்பானெழுந்துபிரமன்பதிமேவினானே. 2

மேவிப்பிரமன்றனைநோக்கினள்வேண்டுகின்றாள்
பூவிற்றிகழ்ந்தோய்கலைவாணியைப்பொற்பநாளும்
நாவிற்கலந்தேழுலகங்களுநல்குகின்றாய்
பாவிக்கணங்கணனிகூடினபார்த்திலாயோ. 3

தொலையாப்பெரும்பாவமென்மேலுறத்தோள்களோடென்
றலையாற்றகில்லாமுதுகுஞ்சுமைதாங்கல்சால்வ
திலையாற்றல்செய்வாரிலைநன்மையையெங்குமொக்க
நிலையாய்த்தவஞ்சார்வதில்லாமையினெஞ்சுநொந்தேன். 4

அறந்தேய்வதின்றாய்வளர்ந்தாலல்லவோசுமப்பேன்
மறந்தாழ்வடைசெய்தியென்றேநனிவாழ்த்திவேண்டச்
சிறந்தாரயனெண்ணிநன்காகவென்செய்துமென்னாப்
புறஞ்சூழ்கலன்பூமிகேள்வன்வயிற்போகவெண்ணி. 5

தவமேதனமாகவெண்ணுந்தரத்தார்களோடு
சிவனேமுதற்றேவருஞ்சூழ்தரப்பூமிதேவிக்
கெவனீங்கல்செய்வான்றிருமாலலதியாருளாரென்
றவனேறினனன்னமென்புள்ளின்மேலன்புகூர்ந்து. 6

படிமாதொடுபோந்தனன்சீதரன்பள்ளிகோடற்
கடியாயமரர்க்கமுதந்தரற்கார்ந்ததாகி
நெடிதாயலைவீசிநிலாவுறநேர்வதாகி
வடியாதவெண்பாற்கடற்றீவிடைவந்துகண்டான். 7

அந்தச்சுவேதமெனுந்தீவுமூன்றானலோக
பந்தத்தினுக்குஞ்சிறந்தாரணிப்பண்புமேவிச்
சந்தச்செறிவாகியவாவிகூபந்தடாகம்
முந்தக்கிளர்பூம்பொழிலெங்கணுமொய்ப்பதாகி. 8

வாசப்புன்னைசேர்வதுதாழ்வதுமாவசோகு
மூசக்குலைதாழ்பனைபச்சிலைமுந்துமேலம்
பேசத்தகுகர்ச்சுரமாசினிபேர்விறெங்கு
காசற்றொளிர்பூங்கடம்போடலர்காட்டடம்பு. 9

பூசம்நரந்தமெலுமிச்சைப்பொங்குதாழை
நாகம்அலரிநறும்பாதிரிநல்லமுல்லை
மாகந்தமுறமலர்சம்பகமல்லிகைச்சூழ்
வாகம்பெறுமாதவிகோங்குமந்தாரமௌவல். 10

அரசொன்பலாசுமுதனன்மரமானதாகி
விரசும்செவந்தியுயர்சாதிகண்மேவுபிச்சி
பிரசந்தருசெங்கழுநீரரக்காம்பல்பெட்புற்
றிரசக்கவர்வண்டினஞ்சேர்மலரிண்டைநீலம். 11

கொடியேசெடியேமுதலாயவைகொண்டகோலப்
படியாய்நிரம்பியவைபொன்னொளிபற்றலாகி
முடியாநலத்துச்சனகாதிகண்மோனசீலர்
அடியாரொடுகோரதராதியரானவையர். 12

நிறைவாய்ப்பவமும்பகையும்பெருர்நீடல்கூட
முறையாய்க்குடும்பவகைகாண்கிலர்மெய்புலாதிக்
குறையேதுமிலார்குணஞ்சத்துவங்கொண்டதன்றிக்
கறையார்குணமற்றிரண்டின்வகைகாண்கிலாதார். 13

ஆசாரநேமமவையேதொடங்கன்பராகித்
தேசானசோதித்திருமாலடிச்செவ்விசாப்பென்

றேசால்வதானபிரபன்னரென்றேத்தலாகப்
பூசாறிரண்டுதிருநாமமொண்பொற்பர்வாழ. 14

ஒளிர்கின்றவெல்லாந்தெரிந்தேசெலலுற்றபோது
குளிர்கொண்டநீலமுகில்போற்றிருமேனிகொண்டு
மிளிர்கின்றநான்குதிருத்தோள்வலயம்விராவ
நளிர்கொண்டசந்தமறுவானசிவெச்சரண்ண. 15

அலர்செங்கழுநீரெளிர்சண்பகமர்துழாய்சீர்
மலிருஞ்செவந்திமலராற்புனைமைஞயந்தி
குலவுந்திருநாமமணிமார்புசெங்கோலமேவி
இலங்குங்கமலமுகப்புன்னகையெள்ளில்கண்கள். 16

கருணாரசங்கொண்டுறவேகவின்காட்டவாசம்
பொருகானநெற்றியொளிராடியைப்போற்கபோலம்
ஒருபாலடக்கலுறலானதாம்பூலமொண்மை
தருசீர்ச்சிபுகப்பவளத்திரள்சார்ந்தசெவ்வாய். 17

புணிமாதுளவித்தனபன்னிரைவாசமேவித்
திணிபூக்குமிழ்போலொளிர்நாசிகைசெய்யகாமன்
தணிவாகவாங்குசிலைபோற்புருவந்தயங்கி
அணிமேவலாகிக்கருவண்டினமன்னபுங்கி. 18

கண்கொண்டுபார்க்கப்படாதோங்குமொண்காந்திமேவு
மண்கொண்டகோடிரவிபோலொளிர்மாமைவாய்ந்து
தண்கொண்டபூமேல்வளர்தையல்சல்லாபமேவி
எண்கொண்டவின்பத்துடனேக்குவதேய்ந்துதொண்டர். 19

வரும்போதெலாஞ்சுமுகமாயவர்மட்டிலன்பு
தரும்பாலதானமொழிசாற்றியித்தன்மைமேவிப்
பெரும்பீட்மைந்துவிளங்கும்பெருமானைநேர்கண்
டிரும்பூவெலாஞ்செய்தண்மைக்ககாண்களித்தங்குநின்று. 20

நிலமாதுகாணநெடிதேதுதிநேர்ந்ததோதிற்
பலவாந்தவத்தின்மிகுவீரெனப்பண்புசான்ற
நலமேவுருதரினிதோதிடநன்குகேட்டோர்
சொலல்வேண்டுமந்தத்துதியைப்பெரிதென்றுசொன்னார். 21

ஏழாவதத்தியாயம் முற்றிற்று. ஆ. விருத்தம் 595.

எட்டாவதத்தியாயம்.

சவுநகமுனிவரேயச்சதுமுகன்றுதித்தவெல்லாம்
இவளவென்றுரைக்கவென்னாலியலுமுதெனினுமேன்ற
துவமையிலுமக்குச்சொல்வேனெனவுந்துரைக்கலுற்றார்
தவநனிபுரிந்தசூதர்சவுநகர்தமக்குமாதோ. 1

வேறு.

முதலீறிலாதபரமேசொலற்குமுடியாதசோதிவடிவே
இதமாய்விகாரமிலையாய்குணங்களிசைவாய்புரந்தருளுவாய்
பதமுதுபூதமுழுதும்புலன்செய்பவனாய்நிறைந்துபயில்வாய்
மதமேவுதேவமனிதத்திரியக்குவதிதாவரஞ்செய்பவனே. 2

பிரமாதிமூலரெனலாகிநின்றபெரியாய்விளம்பவரியாய்
தரமேய்சகத்துவடிவாய்சகத்தையகலாதவேறுதனியாய்
ப்ரமாயினாய்பகுதியாயுயிர்ப்புருடனாயமைந்துபுணர்வாய்
உரமேவியாவரையுமேபுரக்குமொருவாவிளங்குதிருவா. 3

எங்கும்விராவியுறுவாயெநாளுமுளனாயிருந்தபரனே
பொங்குங்குறைந்துதணிவுங்கழிந்தபொருளேபொருந்துதெருனே
தங்குங்குணங்கொடுறுசார்ங்கபாணிசதுர்வேதமேவுதலைவா
நுங்குஞ்சகத்துவடிவாகோவிந்தநுவல்வாசுதேவமுதலே. 4

நாராயணாவிஷ்டுணுவேமிகுந்தநளிர்சாசுவதநல்லரியே
பாராதிலோகமுழுதாளுகின்றபரனேபதங்களுடனே
சீரானலோகமுளதாகமேவுதிறனேவியூகநிலையே
ஆராயினாலுவகையானசெய்கையமைவானதெய்வமயமே. 5

உயர்வாசுதேவவொளிர்சங்கருடணவுறுபிரத்துய்மநிருத்த
இயல்மேவுலோகநிலையாயநேகமெனலானகால்கைதலைபேர்
அயராதசேடசயனாவுகந்துளமர்கின்றசாந்தவடிவே
நயமேவிளங்கவருபத்மநாபநளிராழிசங்குளவனே. 6

உன்பேர்விளம்பியுறுதாசர்நன்மையுறவேபுரிந்துநிலைசால்
அன்பேசிறந்துவளர்சாமிஜீவரனைவோருமெண்ணுவவெ[illegible]
இன்பேமிகுந்துதெரிவாயடைந்தவெளியோர்களியாவரையுமே
துன்பேயுறாமலருள்செய்வல்லதுரையாய்விளங்குதலைவனே. 7

ஒருமாயையாகியுயர்சனுகியுளையானவேதவுருவே
திருவாதுலோகமுழுதும்படைத்தழிதிசெய்தளிக்கல்சிவனைப்

புரிவாய்சமானரிலையாயினுஞ்செய்பொருள்யாரறிந்துபுகல்வார்
அரிதானவேதமறிவாருநின்மெய்யறியாமையாகவயர்வாய். 8

நின்சிரதானமருள்பெற்றிலாதநெறியோர்மயங்கவுறைவாய்
மன்சார்வதானபலவேதமுஞ்சொல்வழிகண்டுகொண்டெழுவா
தின்சேர்வதாகநிலைசெய்தசோதியெனலாயினேய்நினியலின்
பின்சார்வுறுநர்களையப்பணிந்தபெரியோர்பிறங்கவருள்வாய். 9

நின்பால்விளங்குமகிமைக்குணங்கணிலைமுற்றுணர்ந்துநிறுவற்
கென்பாலின்ஞானமெனவேசிறந்தவெழிலோயெனோடியாரும்
உன்பார்வையோடுன்முகமுங்கழுத்துமுறுசுந்தரஞ்செய்வடிவும்
அன்பாலடைந்தவிவர்யாவருஞ்சொலவோமணந்ததுளவோய்.

என்வேயியம்புபெயர்தோறும்வந்தனமெனுவெதிர்ந்துப்ரியாய் 1
ஆனமேறுகின்றபிரமன்புகழ்ந்துளானந்தமாகுமளவில்
வனமாலைசூடிமகிழ்வாகிமந்தநகைமேவிவந்தமகனே
கனமேதினிப்பெணனமேசுகஞ்சொல்கவலன்மின்யாருமெனவே.

சிவனேவலாரிமுதலானதேவர்திரளேசிறந்தமுனிவீர்
நவமாகநீர்செய்துதியால்மகிழ்ந்துநலமேவினென்பொன்மலர்மே
லவனேனபனுலுமமைவாகநீசெய்யகிலங்கள்கண்டுமகிழ்வோ
டிவனுனவன்னைமிகவேபுகழ்ந்தவிதுகண்டுமிக்கமகிழ்வே. 12

உறலாயினேனுன்மதிசெய்கைநன்றிதுணர்வார்புனைந்துபுகழ்வார்
திறநானடைந்துதருவேன்வரங்கடிகழ்வாகநீயென்முனமே
நறவோடுகெஞ்சமுறைவோயடைந்தநயமேதியம்புநீ
பெறவேயெனப்பன்முறையேபுகழ்ந்துபிரமாமகிழ்ந்துபுகல்வான்

வேறு.

என்றுசொன்னசுதனை—நன்றதென்றுசெல்நகர்
அன்றயன்சொனதையெமக்—கின்றுகூறுகென்றனர். 14

எட்டாவதத்தியாயம் முற்றிற்று. ஆ விருத்தம் 609.

ஒன்பதாவதத்தியாயம்.

அருள்சுரந்துவைத்தவெந்தையாகியதேவதேவா
பொருவறுமுலகநாதாபூமிசைமடந்தைகேள்வா

வருமெமக்கிடருண்டாயவழியவையனைத்தும்போக்குந்
திருமறுமார்பாஜீவரக்ஷகாசெப்பக்கேண்மோ. 1

உன்னருள்வேண்டுகின்றவுலகமாதரவும்பாவம்
துன்னலிற்றாங்கமாட்டாத்துயர்கொடுவருந்துகின்றாள்
அன்னதற்கடியேஞ்செய்யலாவதொன்றில்லையாக
இன்னல்கொண்டுணாக்கவந்தேம்யாங்களெல்லாருமென்றான். 2

எனவயன்புகலக்கேட்டவெம்பிரான்பூமியான
வனிதைதன்வதனநோக்கிமாநில்மடந்தாய்நீதான்
வினவுவதென்னையென்றுவிளம்பலும்பூமிதேவி
தனதிடர்முழுதுந்தோன்றச்சாற்றினள்வருந்தித்தானே. 3

சகபதிவேண்டிற்றெல்லாந்தருதயாநிதியென்றென்று
முகமனன்குரைத்துச்சாலமுகுந்தனைவலம்வந்தன்பு
தகமிகவணங்கிக்கைகடலைமிசைக்குவியநின்று
புகனினையன்றியில்லையென்றனள்புலம்புகின்றாள். 4

ஐயநான்முகன்சொல்கின்றவதுபழுதன்றுபாவம்
செய்வலியரக்கரெல்லாந்திரணீபிறந்துசெய்யும்
கைவலியதனாலன்றேபொறுத்துளன்கவலலின்றி
எய்தியபாவந்தீரவின்னமுமுலகத்துள்ளே. 5

அவதரித்துறைதல்வேண்டுமதனைநீபுரிதியாயில்
பவமறத்தொலைதலாகும்பாரமின்றுறைவேனன்றேல்
நவைமிகுத்தென்னைநாளுநலிவதுபுரியுநாதா
சிவன்முதலெவரும்வேண்டுந்திறமுமற்றிதுவேயென்றாள். 6

பின்னருங்கமலைதன்னைப்பிரிவுறாமுதல்வநீயோர்
நன்னயத்தலத்திற்றோன்றிநாளுநின்றாலங்குன்னைப்
பன்முறைபரவிப்பூசைபரிவின்றிப்புரிவேனென்பால்
இன்னல்விட்டகலுமின்றேயிரங்கிநீயருள்கவென்றாள். 7

விரைந்தருள்செய்யவேண்டிவிபுலைமாதுரைக்கக்கேட்டு
நிரந்தரமுலகுகாப்போனினைந்தனனிரங்கிப்பூமி
கரந்தைவிட்டகலநோக்கியவனிமின்னேநீகேட்ட
வரந்தரற்கியைந்தேனேலுமற்றதைவகுக்கக்கேண்மோ. 8

சவுந்தராரணியமென்றுங்[illegible]யேங்
குவந்துளபடியேநோன்பையுநற்றுதியாயிலென்னைத்
துவந்துவவுகத்திற்கண்டுதொழுதுபூசித்தல்கூடும்
நிவந்தபல்லுயிர்க்கும்போகங்குமிக்குவிமலமாதே. 9

ஐயமின்றிதற்குச்சேடனடைந்திந்தக்கிதயுகத்தில்
மெய்யதாயென்னைப்பூசைவிதிமுறைபுரிவன்பூசை
செய்வதற்கேதுவென்னைதெரியெனிற்போனதான
பொய்மிகுங்கலியுகந்தான்போய்முடிவுறுமக்காலே. 10

சத்தநூலிறந்துபோயிற்றுசலாலதனைத்தானு
ய்த்திடவேண்டியந்தவுயர்சவுந்தரகாந்தார
மெய்த்தலத்தமர்ந்துநோற்றுன்விளைந்தவன்றனக்கந்நூலைக்
கைத்தலத்தமர்ந்தநெல்லிக்கனியெனத்தெரித்தற்காக. 11

சேடனையழைத்துநீபோய்ச்சிவனுக்குச்சத்தநூலைப்
பீடுறவுபதேசித்துப்பின்பிவண்வருகவென்று
கூடுறவிடுத்தேன்சொன்னகுறிவழியரற்கந்நூலை
நீடனுக்கிரகஞ்செய்தனிலைதெரிஇச்சிவனன்காணுன். 12

ஆதலிவன்சேடன்றன்னையன்பொடுபணிந்துச்சிக்கு
மேன்முகிழ்வாகக்கைகள்வேண்டினன்சேடனுன
ஞானதேசிகனேயிந்தவந்தருந்தலத்திலேநீ
ஊனமின்றுகமூந்துமுகமுழுதுறுதல்வேண்டும். 13

என்குறைதீரவென்றுவிரந்துளசிவனைநோக்கி
நன்கதுபுரியவேண்டுநாரணனருளதன்றி
நின்கணுனிருத்தல்கூடாதெனவுரைசிரப்பிப்பூமேற்
பொன்கணவனையான்வேண்டிப்போதுவெனென்னப்போந்தான்.

வந்தெனக்கரன்றன்வேண்டும்வகைதெரிப்புறமற்றியானும்
அந்திபோல்வண்ணனென்பாலன்புமிக்குளன்மற்றன்றன்
சிந்தனைப்படிநீபோந்துதிரும்புதியென்னச்சேடன்
சந்ததமென்னைநீங்கான்றன்தனுன்மற்றென்னை. 15

ஐயனேபூமின்கேள்வாவரைக்கணமேனுநீங்கேன்
மெய்யனேயுன்னைநீதான்வேண்டுதியாயிலுன்னைத்

துய்யனேயங்கும்பூசைசெயவருள்சுரத்தல்வேண்டும்
செய்யநேர்குதியேலஃதுசெய்குவெனென்றனன்றே. 16

அகனமர்ந்தென்னைவேண்டுமதற்கிசைவாகியான்முன்
யுகமுடிவளவும்பூசையுஞற்றிடவருள்செய்துத்தேன்
நகமுறைகுலிவேண்டுநாண்முடிவளவுஞ்சேடன்
சுகமுறவெனக்குப்பூசைபுரிந்தங்குத்தானாகின்றான். 17

ஆகையாற்சவுந்தராரணியத்திலேயாதிசேடன்
ஓகையோடியானெப்போதங்குறுவனேயெனவுத்தேசித்
தேகையாதிருந்துநோற்கின்றனனிரண்டாம்யுகத்திற்
றேனைநீயெனைக்கண்டங்குத்தொழுதருச்சிக்கலாகும். 18

இவ்வுகமுடியுங்காறுமிருந்தங்குத்தவஞ்செயென்னை
வெவ்வியகலியுகத்தில்வியந்தொருசோழராஜன்
செவ்விதிற்பூசைசெய்வான்சேறிநீயானுஞ்சேர்வேன்
அவ்விடைவினாவிலென்றானனைவருமகிழ்ந்துகேட்டார். 19

அண்ணல்சொற்படியேபூமியடிகளைவலஞ்செய்தேத்தி
மண்ணுறவணங்கிவந்தமலர்மகன்முதலெல்லார்க்கும்
கண்ணியாம்வந்ததானகாரியமுடிவிற்றென்று
நண்ணினள்சவுந்தராரணியதலநாடிமாதோ. 20

தவஞ்செயற்கருகமானதலந்தெரிந்தமர்ந்துநாதன்
எவந்தெறவருநாளென்றோவெனத்தவமியற்றுகிற்கச்
சிவன்சொலத்துறவியென்பாள்சிறுவனோடடைந்துபூமிக்
குவந்துறுபணிசெய்துற்றாளோதிமமுயர்த்தோனாதி. 21

தேவர்கள்போகியோடுசெறிந்துநாம்வந்தசெய்கை
ஆவகையாயிற்றென்றுவகமகிழ்ந்தவரவர்க்கு
மேவயினடைந்தாராதிசேடனும்விரும்பிப்பூமி
காவலன்வருவதென்றோவெனமனங்கனியதானான். 22

முன்பதாமுகத்திலாதிமுதல்வருமேடமாதத்
தின்புறுகின்றதாஞ்சுக்கிலபக்ஷத்துவாதசிக்கண்
மன்பெருமகநாள்பானுவானவனுச்சமாகி
அன்புறுகாலத்தந்தச்சவுந்தராரணியத்தம்மா. 23

நடுவுறுசீரபுஷ்கரணியதுநளிர்நீரத்தில்
வடிவுறுநீரவேலைகளர்துயினீங்கிப்பூமின்
னெடுநெடுமால்வந்துற்றுறுற்றனைதலைவருந்தத்திற்
படிசுரரறிந்துகூட்டப்பயில்வதுகருதிவந்தார். 24

நித்தருமுத்தர்தாமுன்னாநிலைகுழுமக்கண்டு
பைத்தலைச்சேடனுய்ந்தபருமுத்துக்கோத்தொங்கல்
சத்துறச்சூழ்ந்ததாகித்தனிநவமணிகளான்ம
வைத்தபொற்காவின்மீதுமுழுமதியயங்கல்மான. 25

வெண்பட்டுக்கவிகைநீழல்விளக்குறப்பிடிக்கப்பாடற்
றெண்பட்டமதுராகீதமியம்பினர்குழப்பூசு
மண்பட்டமுழவேயாதிவாத்தியமனைத்தும்போர்ப்ப
விண்பட்டமலர்நன்மாரிவியந்தனபொழியமேகம். 26

தெய்வகன்னியர்நின்றாடச்சேனையர்கோனங்கெய்திக்
கையினிற்பிரம்புகொண்டுகலந்துமுன்போதத்திங்கள்
வெய்யவன்சாமரங்கள்வீசிடவிரண்டுபாலும்
மெய்யறிபிரமனீசன்மேகவாகனனேயாதி. 27

சாரணர்சித்தரெல்லாஞ்சயசயவென்றுகூறி
ஆரணமுழங்கற்கேற்கவமர்ந்துகட்டியங்கள்பாட
நாரணன்வந்தானென்றுநவின்றுசின்னங்களூத
தோரணந்துலங்கப்பந்தர்தொடுத்துறுவிதானம்பொங்க. 28

வாழைநன்கமுகுசாலமங்களதீபமேந்த
யாழொடுகுழல்களோங்கவெழுமொலிசமுவவெங்கும்
கேழ்கிளர்துளவத்தண்ணல்கெழுமியவியப்புக்கேட்ப
சூழ்வனவுலகமெல்லாந்தோன்றினன்விளங்குங்காலை. 29

வேறு.

சேடனும்புவிமகளானதேவியும் 1
மாடமர்தவமிருகண்டுமைந்தனும்
நீடமகிழ்வொடுநினைந்துநின்றிலர்
ஆடலின்வலம்வரலாகியன்பினால். 30

புளகரும்புடல்வயர்பொடிப்பப்பொங்கிய
அளவிலின்பக்கடலாழ்ந்துதந்தமை

உளபடிதெரி[illegible]ம்
கிளர்வதுபடிவத்துகிடைத்தகொப்பவே. 31

விழுவதுமெழுவதும்விரைவுமிக்குறத்
தொழுவதும்புகழ்வதுந்தொழுதகைதலைக்
கெழுவதுமாயினரிடைவிடாமலே
முழுவதுமவர்செயல்மொழியின்முற்றுமோ. 32

இன்னணம்பலபடியியன்றநாமமுன்
மன்னுறநமநமவென்றுவாய்சொலப்
பன்னுறுதுதிபலபாடியாடினர்
பின்னருந்துதிபலபேசுகின்றனர். 33

கண்ணனேதிருமகள்கணவனேமுகில்
வண்ணனேமறைதெரிவடிவனேயுனை
நண்ணநேர்வுறுதவநலம்பலித்ததே
எண்ணநீயெமக்கெதிரெய்தலாவதே. 34

என்றெழுந்தருளியவெம்பிரான்முகம்
நன்றிருகண்களானோக்கிநாடினேம்
என்றுனையருச்சனைபுரிவதென்னலும்
மன்றலர்துளவினான்வகுப்பதாயினான். 35

அருணிறைநண்களானோக்கியன்பினிற்
பொருவறுசேடநீபுரிகவிவ்வுகம்
மருவுகநிலமகள்மற்றைநல்லுகம்
கருதுகபின்மிருகண்டுமைந்தனே. 36

எனத்தெரிசாரபுஷ்கரணியின்கரை
தனிற்சயனத்திருக்கோலஞ்சார்ந்தனன்
உனற்கருமிதஞ்செயவுலகுக்கின்னமும்
வினைப்பவிக்கிரகநன்னிலைகொண்டென்னவே. 37

சவுந்தராரணியத்தலந்தன்னிலேயொரு
சவுந்தரராஜனென்றகிலஞ்சாற்றிடச்
சவுந்தரவடிவொடுதயங்குகின்றனன்
சவுந்தரமறைகளேசாற்றவல்லவே. 38

அவ்விடத்தருட்கடலமாகித்தமும்
வெவ்விஷ்டவாகனன்விரும்பிக்கண்டுகொண்
டெவ்விடமிதற்கிணையென்றிருந்தனன்
செவ்விதிற்றன்படிசிறக்காளுமே. 39

ஆதிதன்னருள்வழியாதிசேடனே
தீதில்தீர்க்கிதயுமெழுதுஞ்சீர்த்திசால்
மேதினிமகடயுகமுமேவுபின்
போதியமிருகண்டுபுதல்வனும்மரோ. 40

பாஞ்சராத்திரவிதிப்படிக்கருச்சனை
தாஞ்செயக்கலியுகந்தன்னிலேமிகு
வாஞ்சைகொண்டொருகுலோத்துங்கவள்ளலே
நாஞ்சொலப்பூசனைநனிநடத்துவான். 41

நாகவேந்தாதியினடத்துபூசனை
யாகலானுகபட்டணமென்றுயது
யோகமார்சவுநகரேயென்றோதினர்
மோதமானவைகெடுயன்றருதரே. 42

ஒன்பதாவதத்தியாயம் முற்றிற்று. ஆ விருத்தம் 651.

## பத்தாவதத்தியாயம்.

கேட்டமாதவர்கிளர்ந்துகண்கணீ
ரோட்டமாகவுள்ளுவந்துருதரே
வாட்டமின்றியோர்வளவன்பூசனை
வேட்டயர்ந்ததைவிளம்புகென்னவே. 1

தாலமும்மையுங்கண்டருதரங்
கேலவேசொலற்கியைவதாகியே
சீலமாதவஞ்சிறந்தசெய்கையீர்
ஞாலமேலினிந்தவிநடாவுமே. 2

கலியுலாவுறுங்காலத்தாதியில்
நலிவில்யோகியோர்நாகராஜனும்

புவியையசேர்வசுப்புதல்விமும்முலை
பொலியவெய்துமப்பொன்னனனையே. 3

கண்டுநாகர்தங்காவலன்றுயர்
கொண்டுசோர்தரக்குண்டலஞ்சொலும்
மண்டுபோர்வலவசுவருந்திடேல்
உண்டுநன்மைமற்றதனையுன்னுவாய். 4

உனதுபெண்டனக்குரியநாயகன்
தனதுகண்படத்தவிருமோர்முலை
அனதுபோவதற்கருகனேமகள்
மனதுவேண்டவுன்மருகனாகுவான். 5

இதுதனக்குமற்றில்லையயமென்
றதுமறைப்புறமளவுநீதுயர்
கதுவுறேலெனக்கழறலும்வசுப்
புதுமையேயெளிபுகல்வதென்னவே. 6

மகனிவாவெனவழைத்துமாதுசீ
தகவின்மூவிருதாதிமாரொடு
சகமடங்கலுஞ்சஞ்சரித்தெவன்
முகமுனேநலமுந்துகிற்குமோ. 7

அவனிநீவரித்தவணாதியாகநேர்
புவனமேலுறப்பொருத்தியற்றுவேன்
இவணினின்றுநீயேகல்வழி
தவனாடியேதருதியென்னவே. 8

செய்தவவ்வழிச்செறிந்துமேற்புவிக்
கெய்துதோழிமாரிசைவதாகவே
வையமெங்கணுமருவிநாடியத்
தையலீள்வனந்தனிலுமேவுவாள். 9

வந்துலாவியவ்வனத்தில்வைகுவாள்
முந்துசோழனுமுதல்வனீள்குலம்
உய்ந்துவாழ்வதற்குற்றுளானொரு
சுந்தரச்சொன்சாலிசுகமன்னவன். 10

வேட்டையாடுவான்விரும்பிச்சுந்தரக்
காட்டின்மேவியகாலையங்குறுங்
கோட்டின்மும்முலைகுலவுகன்னியை
நாட்டநேருறநயந்துகாணவே. 11

கொண்டுவொன்றுபோய்க்குறையமற்றைய
நங்கைமாரெனநனிவிளங்குவாள்
சங்கைதிரமுன்றந்தைசொன்னஇச்
செங்கைவீரன்முன்சிறந்ததென்னவே. 12

மந்தமென்னகைவரவுலாவியே
வந்தமன்னவன்முன்னர்வந்துநின்
றிந்தநீவ்வனத்தெய்துகின்றமா
சுந்தராவவிதுலக்குதோன்றலே. 13

தனங்கள்மூன்றுடன்றரணிதோன்றினேன்
மனம்பொருனனிவருந்தியென்பிதா
முனைஞ்சரீரமில்வான்மொழிந்ததே
நினைந்துபூவின்மேனிலவவென்னையே. 14

விடுத்தியார்முனேமேவுவெம்முலை
யடுத்தவிர்ந்துநீவயங்குவாய்கொலோ
அடுத்தவன்னவனுகரின்பதி
தொடுத்தமாலைநீசூட்டுகென்னவே. 15

தந்தைசொன்னசொற்றவிர்வுறுதிவண்
வந்துளேன்முனேவாய்த்தநின்கணோர்
இந்தவென்குறையேகிற்றுகலாற்
சந்தமேதடைனத்தழுவுகென்னவே. 16

கேட்டமன்னவின்கிளர்ந்தகன்னிநீ
வேட்டவாபில்வீணையோர்செயுங்
கோட்டமின்மமாகிக்குன்றுறு
வாட்டமின்றிநார்ன்மகிழ்வுகூடவே. 17

நின்னையென்பிதாநேர்ந்தளித்திட
நன்னலத்தொடுபுணர்வனுடிநின்

சொன்னசொற்படிதொடர்திநீமுனே
பின்னரெய்துவேன்பேதுறேலென. 18

நன்றெனக்கொடுநாககன்னியும்
மன்றஞுயகாவருகவென்பினே
நின்றனக்குநானேருமூர்வழித்
துன்றவின்றுநான்சொல்லக்கேட்டியால். 19

வேறு.

மன்னவனேசவுந்தராரணியதலந்தனில்வாய்த்துவயங்குகின்ற
உன்னருஞ்சீர்ச்சாரபுஷ்கரணியெனவோர்தீர்த்தமதனெங்குதீரந்
தன்னிலொருசவுந்தரேசப்பெருமாள்சயனஞ்செய்சார்பின்பாங்கர்
துன்னுமொருகுகைவழிமற்றதன்வழியேவருகவெனச்சொல்லிப்
போனான். 20

போந்தவவடனதுபிதாமகிழவந்துவாய்த்துளவப்புருடன்றன்மை
ஆய்ந்துசொலக்கேட்டவசுவன்புடனேமணம்புரிதற்காகப்பந்தர்
ஏய்ந்தறவிட்டெங்குநாலங்கரித்திங்கினிதிருக்கவிசைந்தவேந்த
ன், வாய்ந்துளவக்கன்னிசொன்னவழிவருவானடையாளவகை
கொண்டன்றே. 21

நாடியந்தச்சாரபுஷ்கரணிதீரத்துளபுதுமைநயந்துநோக்கி
வீடில்குணத்தெம்பெருமான்சயனதிருக்கோலமுடன்விளங்கலுங்
கண், டாடியழகினின்முழுகியடிக்கடிசேவித்தவசமாகிப்பாடி
நீடியசுந்தரராஜாவென்றென்றுதொழுதொன்றுகிழ்த்துவானால்.

நாயகனேநாளுன்னைப்பூசைசெய்யவேண்டுமிக்குறல்கென்றேத
தூயசுந்தரப்பெருமாளருள்சுரந்துதோன்றலேசொலுமிக்காலத்
தேயமர்ந்திங்கெனைப்பூசைசெய்க்கடவாயெனவேந்தனெம்பிரா
னே, மேயவெந்தக்காலத்திலெவ்வாறுபூசித்தல்விளம்புகென்பான்,

அதற்கமலனலமுகூர்த்தமாயிருக்கின்றசனுலேயரசயின்று
முதற்கொடுநாளுமெனைப்பூசைசெய்வதிலேலமையலுகென்னச்
சுதற்கருள்செய்வதுபோலத்திருவருக்கன்றருள்செய்ததால்லோ
ன்கூற, நுதற்குறிகொண்டெனைப்பூசைசெயத்துளசிகிடைக்கும்வ
கைநவலுகென்று. 24

சாலிசுகன்சொலச்சிவந்ததாமரைக்கணெம்பெருமான்றனை மிக்கா
கி. வேலியலுங்கரதலத்தாயெனதகலந்தனின்முளைத்துவிளங்குகி
ன்ற, வாலியபைந்துளவுகொடின்றேபூசைபுரிதியென வகுத்துக்
காட்ட, நூலினியலறிந்துளவெடுத்தமலன்தனைப்பூசைநூதவிச்
செய்தான். 25

சிலகாலம்பூசனைசெய்திங்கிருக்கத்திருநெடுமால்சிறக்கத்தோன்றி
உலகாளுந்திறல்வேந்தேநியுரைத்தபடியேபோயுனக்குநேர்ந்து
விலகாதபூங்கொடியைப்பாதலத்தில்வேட்டுமனம்விரும்பிக்கூடிப்
பலநாளுமருவியவன்சூலுறலாகியபின்பெண்பதிக்கண்வந்து. 26

முன்போலப்பூசனைசெய்திருத்தியெனத்திருநெடுமால்மொழியக்
கேட்ட, பின்பாழியுலகாள்வோன்பெரிதுமனமகிழ்ந் தணிகொள்
பெம்மான்றன்னை, அன்போடுதொழுதுகுகைவழிகாட்டு கெனக்
கேட்கவமலனுங்கே, இன்பாகத்தான்சயனித்திருந்தபடியேகிடந்த
ங்கிதுகாணென்ன. 27

திருவினதுதெரியாமல்மறுபடியும்பெருமான்முனேர்ந்துநின்று
பொருவரியபெருமானேபடுத்தபடிகாட்டில்வழிபோகத்தேறேன்
மருவ்வழிபோகும்வகையெழுந்தருளிக்காட்டுகெனவகுக்கக்கேட்டு
த், திருமருவுமணிமார்பனெழுந்திருந்துகாட்டவுமெய்தெரியானுகி

போரிவேந்தனருட்கடலாகியபெருமாள்முகநோக்கிப்புனிதனேநீ
ஊர்வாய்த்தபடியிருந்துகாட்டுமெவ்வழிதெரியாதேங்குகின்றேன்
வார்வாய்ந்தமுலைத்திருவின்மணவாளாவெழுந்துநின்றுவழிகாட்
டென்னத், தார்வேய்ந்தமுடிவேந்தனனிவேண்டத்திருநெடுமால்ச
லிப்புறுமல். 29

எழுந்துநின்றபொருவேந்தேயிதுதானக்குகைவழியென்றினிதுகா
ட்டத், தொழுந்தகையபெருமாள்கைச்சுட்டுவிரல்வழிகுகையின்று
வார்ந்தோன்ற, விழுந்துபணிந்தருட்பெருமான்றனைநோக்கிவிம
லாநீவிரும்பிக்காட்டும், செழுங்கையொடுநின்றுதிருச்சேவையெ
ன்றுந்தரல்வேண்டுஞ்சிறியேற்கென்ன. 30

நன்றுநின்றதிருக்கோலச்சேவைதனையுலகனைத்துங்காணத்
தின்றுறவேனென்னப்பெருமாளநூன்சுரந்தவ்வாறுநிற்கத்தோன்ற
ஞெக்கு, என்றும்விரனீட்டிவழிகாட்டியகைம்மலர்வாழியெழிலும்

வாழி, நின்றுநிலவுதல்வாழியெனவாழ்த்திக்குகைவழியேசென்று
போவான். 31

சுந்தரராஜப்பெருமாள்விடைகொடுபோய்ப்பாதாளந்துருவிச்சென்
று, நிந்தையறுநாககன்னிதனைவிதியான்மணந்துபுணர்நேயங்கூடித்
தந்தைமகிழ்வுறவவளோடிருந்துசருப்பந்தாங்கத்தாவிலாமல
வந்தவழியேமீண்டுசெவுந்தராரணியதலம்வந்துசேர்வான். 32

வந்துமுன்போற்பெருமாளைப்பாஞ்சராத்திரத்தின்விதிவழிபாடா
ற்றி, மூன்றுறுவான்மீனமதிதனிலேசுக்கிலபக்ஷமுதலேழாக
மைந்துறுமத்திதிதனிலேசுக்கிரவாரங்கூடிவருவதாகித்
தந்துறுரோகணிநாளிற்சவுந்தரராஜனுக்குமஹோற்சவஞ்செய்
வானே. 33

ஒன்பதுநாளுற்சவஞ்செய்தொளிர்தரும்பூரணைச்சனியென்றுரு
குவாரத், தன்புடனுத்திரநாளினண்பகலிற்றிருத்தேருற்சவமுன்
டாக்கி, இன்பமொடுசாத்தரெனும்வைணவர்களொடுகூடியெழுத
லான, பின்புனரிதன்னிலவபிரதநானம்புரியும்பேறுஞ்செய்வான்.

அவபிரதநானஞ்செய்தாற்சகலபாவமும்போமனுகுமோக்கம்
தவநலத்தினதுகிடைக்கும்வருஷந்தோறிவ்வாறுச்சமைத்துவேந்தன்
பவமகலவருகாலத்தவன்றேவிகிளித்தலைகொள்பவனையின்று
நவநலமின்றெனவெறுத்தோர்கூட்டுக்குட்பொதிந்துநனிநாளுண்
டாகி. 35

சரசுவதியெனுநதியில்விடுவாள்மற்றதுகடலிற்சார்ந்தோர்தீரம்
விரசுமதிற்கிளிமூக்கினுடனிருக்குஞ்சேய்தனக்குவிளங்குநாமம்
பரசுதுண்டிமாவெனன்றுபிரசித்தனுயாழிபரிக்கும்வேந்தாய்
முரசதிரவுலகாண்டுபகவதனுக்கிரகவன்பின்முதல்வனுவான். 36

அவனையருள்சாவிசுகனுழிசெலவுலகனைத்துமாள்வனுகி
நவமிகுசுந்தரராஜன்றனைநூற்றுப்பத்தாண்டுநயந்துபூசை
எவமறச்செய்தடைவான்பேரின்பநலமவன்பின்னரையைத்தும்வேந்
தர், புவனமளந்தருளியசுந்தரராஜன்றனைப்பூசைபுரிவர்மாதோ. 37

வேறு.

கேளுஞ்சவுனகரேயிவ்வாறுகிளந்தநிதன்பெருமை
நாரணன்சாரபகாதீர்த்தத்திலலந்தருமாமகிமை

நீளும்பான்மையதியாவுமுமக்குநிகழ்த்தினமப்பொய்கைக்
கோடுத்தியகரைமீதந்தமிலருள்கொண்டேசுந்தரனின்றருள்கான்

மார்க்கண்டேயர்மகாருத்திரரதின்மருவுதிதேவதையாம்
சிர்க்கண்டுறுசுந்தரராஜனற்றன்மூர்த்தக்காவலனும்
பார்க்கண்டுறுசர்ப்பாதிபன்பூழிப்பாவைமகாகாளி
தாரிக்கஞ்சாசனியத்திமுகன்மகிழ்தத்தைமுகக்கோமான். 39

இன்னோர்தங்களைமுன்னிட்டந்தவிலஞ்சியின்மூழ்கிநலம்
மன்னோர்தர்ப்பணமோமம்பூஜைமகாசந்தர்ப்பணமே
முன்னோர்தானங்களைநாளுநாளுமுறையேசெய்தவர்பாபம்போய்
தன்னேரில்லாச்சாசுவதப்பேர்த்தானம்பெறவேசார்வாரால். 40

வேறு.

இத்தகையசவுந்தராரணியமேன்மைஇவ்வளவேயாம்சொல்லுதி
யைவதன்றி அத்துணையேநீர்கேட்கவமையுமப்பால்அறைவதற்
கோநமக்குமதிகாரமில்லை சித்தசமாதானத்தாற்கேட்டவற்றுள்
சென்னித்ததுன்டோசந்தேகவிபரீதங்கள் ஒத்ததுவாயிரென்றுரல
ப்பில்கேள்வியுற்றமகாருதபுராணிகராமுன்னோன். 41

அது கேட்டசவுனகர்தாம்சுவாமிநீரே அனைத்துமறிந்தனைவர்க்கும்அ
ருள்பூண்டுற்றீர், இதுகேட்டபின்பெறுதான்கேட்கற்பால தியாது
மறிந்தேனையம்யாதுமின்றே, மதுதோற்றுதுளபமுடிமாலேயின்
வன்வந்ததுபோல்வந்தெங்கள்மருள்கெடுத்தீர், விதுதோற்றுமுகமு
டையீர்தன்யனானேன்வேறென்னவேண்டுமினிவிளம்பிலென்றார்

இன்னுமொன்று கூறுகிறார்சூதரிந்த எற்றமுறுதலச்சீர் வைணவ
மாதத்தின், குன்னுமவர் புகழ்ந்தோதில் விண்டுலோகம் உறுகின்
றாரிக்கதையைப்படித்துங்கேட்டும், மன்னுமவர்அப்போரியாமமெ
ன்றுமகாயக்ஞபலனடைவர்மறையோர்கூட்டம், பன்னுதெய்வசந்
நிதிவைணவரீட்டத்தில்,பகர்ந்தவர்கள்பெருஞ்சுகத்தைப்படைப்பர்
மாதோ. 43

நாத்திகர்க்கும்பத்தியில்லாதவர்க்குமன்பர் நாடுகையிக்கரியமில்லாத
வர்க்கும்பொன்னில், ஆர்த்திதொண்டசோம்பர்க்கும்அடங்காதார்க்
கும்,அருமையுள்ளோர்தமக்குமிதுகூறலாகா,தேற்றவவர்களுங்கூ
றற்கேலாதியாதும், எதமிலர்வைணவனிந்தியமடக்கிச்சிற்றமிலனு
சையிலனிர்ப்பந்தந்தான்சிறிதுமிலனின்னோர்பாற்கேட்கலுற்றார்.

விண்டுபத்திமேவிட்டிந்தியமடக்கிவிரிகாமக் குரோதாதிவிட்டியென்றும், தண்டுதலிலாதவிஷ்ணுசாரூபத்தைச்சார்கின்றார்அந்தணர் கேட்டுப்படித்தால், சுண்டுபடுவித்வசிரோமணிகளாங்காண்கின்றார்காவலர்களிராஜ்யலாபம், கொண்டிடுவர்வைசியர்களர்த்தவித்தி, கூடிடுவர்சூத்திரர்கள்பத்திகொள்வார். 45

போர்புரியப்பேர்கிறவன்கேட்டால்வெற்றிபூண்டுவருவன்கர்ப்பப்பூவைகேட்கில், ஏர்புரியுமகப்பெறுவள்கன்னிகேட்கில், எழிலுள்ளபர்த்தாவையடைவளல்கல், கூர்புரியுமவன்வினவில்சம்பத்துண்டாம் குழவியிலன்கேட்கினல்லகுழவியுண்டாம், சூர்புரியும்பூதவேதாளமாதி, துயர்செய்யிலவையழியும்நோவியாதி. 46

தேகநோய்குளிர்சுரங்களாகவுள்ள, ஜென்மநோயத்தனையுந்துடைக்குநன்மை, ஆகுவனவெவ்வெவையோவவைகளெல்லாம்அணுகுவனவென்றொருசொல்லாலேசொன்னேன், வகமனதாய்ச்சவுந்தராரண்யத்தின், ஏற்றமதைவினவிமொழிபவர்கரத்தில் சேருபெறவட்டசித்தியிருப்பவென்று, சிந்ததகொள்கசந்தேகமின்றேயின்றே.

இவ்வாறு சூதர்சொல்லச் சவுனகாதி இருடிகளெல்லாமுந்துகேட்டாரென்று, தவ்வாதபிரமாண்டபுராணத்தேயுத், தரகாண்டஞானயோகபாதஞ்சொல்லும், எவ்வாறுமிலாதசவுந்தராரண்யத்தின் ஏற்றமிஃதென்பதலாலிதற்கியாதொன்றும், ஒவ்வாததாமறிஞருணர்தற்பால, தொன்றென்பரன்றென்பார்க்குணாத்தலுண்டோ. 48

---

## வாழிவிருத்தம்.

*வாழ்க சுந்தரராஜன்மாமலர்மாதுசந்ததம்வாழ்கவே
வாழ்க வாறிருபத்தராரியர்வாழ்கநாகைமகான்மியம்
வாழ்க நன்றுவிஞவிஞோர்பயில்வார்மகிழ்ந்துவரைந்துளார்
வாழ்க வான்மதிமாண்புளார்மகிமன்னராதியர்வாழ்கவே. 49

## உடையவர்துதி.

*பொன்பயிலும் வனமார்பன்மெய்ச்சமயச்செங்கோலைப்பெற்றநாட்டிக், கொம்பயிலும்புறம்சத்தமொடுங்கோலையாங்கோலன்கோலஞ்செய்து, தென்பயிலும் பூதூரிற் முக்கோல்கொளெதிராஜன்றிருதாட்கோலம், வன்பயிலு மெந்தம்மயில் வணங்கியன் தீட்டியகோலேமுறித்து வாழ்வாம். 50

சேனையர்கோன்.

*சீருலாவியசேனையர்கோனடி, கூருலாவியவேத்திரக்கோலடி
தாருலாவியதேவர்முடிமுத, காருலாவியவாலெமக்குள்ளவே 51

குருகைப்பிரான்.

*சீர்பூத்தவினியமறைத்தமிழீந்துபுளிநிழற்கண்டிருந்தவாய்ந்த
கார்பூத்தபொன்னிறத்த கருமணியைச்செம்மனத்துட்கனியக்கண்
[illegible]ர்பூர்த்தமைமதுரகவியுள்த்திருநட்டி நலமெமக்குக்காட்டித்
[illegible]தமகிழமலர்மார்பணிந்துமகிழமலர்சரணுட்கொள்வாம். 52

ஸ்ரீமதுரகவிகள்.

[illegible]துரகவிபத, முதிரவினைபவர், சதுரகவிமழை, யதிரவுதவுவர்.

பொய்கையார் முதலியோர்.

*சற்புறுமால்பதக்கமலர்பூத்தகப்
பொற்புறுபொய்கையின்னடியிற்புக்கனம்
அற்புறுமனத்தினேமாடிப்போக்குவாம்
வற்புறுமாசமரம்வலியசேற்றையே. 54

*நாதன்றண்கரநாட்டுங்கதாம்சமாம்
பூதன்பாதஞ்சிரசிற்புனைந்தனம்
வேதன்செய்தவினைமலையங்கணைப்
போதன்செய்மபல்போகப்புடைக்குமே. 55

*மயிலைமன்பத, வெயிலையுற்றபின்,
பயிலுமெம்பவ, மயலறுந்திடும். 56

*ஆறுசமயந்தொறுமடைந்தவையுணர்ந்தும்
ஆறுசமயந்தெரிதலின்றியரிதாவே
கூறுதிரமென்றவர்பதங்கொளெமதின்னற்
கூறுதிரநீக்கிநிலைகூட்டுமுளநின்றே. 57

*பணியாரமன்பரொடாரெனப்பல்விற்கடுவுமிழும்பருவாய்க்குட்டுப்
பணியாரவிடங்கருழைக்கரநீட்டியுண்மைநிலைபகர்நரோன்பாதப்
பணியாரவுரைத்தேதந்திப்பாசநிலைப்பவக்கடலைப்பாவார்க்கேறப்
பணியா[illegible]ணனையின்றநாரணனைப்பூரணனைப்பரவச்சேர்வாம். 58

*சாலியிற்பிறந்துபாணக்குடிவந்தகவால்வேயிற்
காலியிற்கலந்துபாடுங்காணம்வல்லவர்க்குவீணை
ஆலிய[illegible]பாடியுள்ளங்களிப்பித்தவமலன்பாதம்
போலிய[illegible]பாடுவேமைப்புரந்திருள்கூருமன்றே. 59

*இண்டரமு[illegible]கென்திர்தம் மனைதோறு மலையுண்ட வெழிலர்நின்
கோ, த[illegible]டிக்கமலமென்[illegible] முகிழாததட்மலர்க்கண் மிகிழ்வாய்
விள்ள, அண்டரடிக் கடிபோ[illegible]றத் திருப்பள்ளி யெழுச்சியருளளி
யேயென்னுந், தொண்டரடிப்பொடிபாதப்பொடிபோட்டுப்பிறப்
புதநிதொலைத்துவாழ்வாம். 69

*விண்ணமுதைவிண்ணவர்க்கு வீதலறக்கடைந்தளித்தவிமலனார்க்கு, மண்ணமுதையடைந்தவுடன் மாசடையுமெனமனத்துண்மதித்துப்பாடுச், பெண்ணமுதைப்பெற்றீந்துபல்லாண்டுபசார்ந்தபெரியவர்தம்பாதந், தண்ணமுதைச்சிறியேங்கடனியுயிர்க்குந்தாரகமாத்தந்துவாழ்வாம். 61

*பெண்ணாகப்பிறந்தபராணரணனென்றிறைவன்பெண்பிறப்புக்கெல்லாம், கண்ணாகத்தமிழ்மாலைமலர்மாலைகனிந்தளிக்கக்கருத்துட் கொண்டு, மண்ணாகப்பிறங்குருவைமறைத்துவந்துசெழுந்தனத்திற்றோன்றிப், பண்ணாகப்பாடியபெண்பதந்தொழுதேவழிவப்பழுதைவெல்வாம்.

*தருமநுகைநீட்டிவெண்ணெய்த்தாமங்கொள்கள்வன்றன்னைத்தருமங்கைசைவக்கள்ளக்குடியவதரித்துப்பற்றும்
திருமங்கைமன்னன்பாதச்சிறைகொடெங்கள்ளஞ்செற்றுத்
திருமங்கைநோக்கும்பெற்றுச்சீதரனடியைச்சேர்வாம் 63

பத்தாவதத்தியாயம் முற்றிற்று. ஆ விருத்தம் 714.

ஸ்ரீநாகைப்புராணம் முற்றிற்று.

---

பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| பாயிரம் 6-வது | 23 | | 8-வ |
| நூல் 2 | 24 | கையாறு | கைம்மாறு |
| 14 | 20 | மயொடுபி | மயிலொடு |
| 17 | 3 | கருணை | கருணை |
| 26 | 6 | யப்பற | யம்புற |
| 36 | 14 | பிணி | பிணிற் |
| 38 | 15 | வினை | வினை |
| 39 | 6 | கோண்மை | கொண்மை |
| 42 | 23 | கவின்மா | கவினமா |
| 44 | 30 | ரா | ரகு |
| 45 | 14 | ரது | ரது |
| 46 | 13 | திமு | திமு |
| 50 | 26 | போன் | பொன் |
| 52 | 20 | றனை | றதனை |
| ,, | 29 | மோல் | மேல் |
| 67 | 27 | யமே | யுமே |
| 68 | 9 | இத்த | இந்த |
| ,, | 14 | இந்த | இத்த |
| 72 | 17 | வலசெல | வன |

"குற்றங்களைந்துகுறைபெய்துவாசித்தல்கற்றறிந்தமாக்கள்கடன்."